விலை ரூபா: 15.00
Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

பக்கங்கள்: இருபது — Valampurii

சங்கு 12 வள்ளுவர் ஆண்டு 2042 கார்த்திகை 30 வெள்ளிக்கிழமை (16.12.2011) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 362

ரா ம் கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
SLS 107 தரம் கொண்டதும்
100 வீத சாதாரண போட்லான்
சீமெந்து (O.P.C.) ராம்கோ சீமெந்து

## தேசிய மனித உரிமை செயற்பாட்டு திட்டத்தை அமுலாக்க அரசு தீர்மானம்

### ஐ.நாவை சமாளிக்க புதிய வழிமுறை

(கொழும்பு) ஜெனீவாவில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமை பேரவையில் முன்வைக்கப்படவுள்ள இலங்கைக்கு எதிரான போர்க் குற்றச்சாட்டுகளுக்கு பதிலளிக்கும் வகையில் தேசிய மனித உரிமை செயற்பாட்டுத் திட்டத்தை அரசாங்கம் அமுலாக்கவுள்ளது. ஐ.நா. மனித உரிமை பேரவையில் 2008ஆம் ஆண்டு கூட்டத்தொடரின்போது செய்து கொள்ளப்பட்ட சுயேட்சை சத்தியப்பிரமாணத்திற்கு அமைவாக இந்த தேசிய மனித உரிமை செயற்பாட்டுத் திட்டம் அமுலாக்கப்படவுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

இதன்மூலம் போர்க் குற்றச்சாட்டுகள் தொடர்பில் எழும் அழுத்தங்களை சமாளிக்க முடியுமென அரசு திட்டமிட்டுள்ளது. (20ஆம் பக்கம் பார்க்க)

## லண்டனிலிருந்து நாடுகடத்தப்படும் தமிழர்களுக்கு சித்திரவதை ஆபத்து

### மனித உரிமை அமைப்புகள் சுட்டிக்காட்டு

பிரித்தானிய எல்லை முகவரகத்தின் விமானமொன்றிலுள்ள 50 தமிழ் பயணிகள், இலங்கைக்கு திரும்பியவுடன் சித்திரவதைக்குள்ளாகும் ஆபத்தை எதிர்நோக்குவதாக மனித உரிமை அமைப்புகள் எச்சரித்துள்ளன.

இலங்கை பாதுகாப்பு அதிகாரிகள் இப்பயணிகளை முறையற்ற விதமாக நடத்துவதாக புதிய ஆதாரங்கள் வெளிவந்த நிலையில் இவ்விமானம் புறப்பட்டுள்ளதாக கார்டியன் செய்தி வெளியிட்டுள்ளது.

சித்திரவதை தொடர்பான புதிய குற்றச்சாட்டுகளுக்கு மத்தியில் பிரித்தானிய அரசாங்கம் தனது நாடுகடத்தல் கொள்கையை மீளாய்வு செய்யத் தவறிவிட்டதாகக் கூறி இனப்படுகொலைகளுக்கு எதிரான தமிழர் எனும் அமைப்பு பிரித்தானிய மேல் நீதிமன்றமொன்றில் மனுதாக்கல் செய்திருந்தது.

சர்வதேச மன்னிப்புச் சபை மற்றும் மனித உரிமைகள் கண்காணிப்பகம் ஆகியன பயணிகளின் பாதுகாப்பு குறித்து எச்சரித்த போதிலும், பிரித்தானிய எல்லை முகவரகம் இதுவரை பெரும் அளவிலான நாடு கடத்தல்களை இலங்கைக்கு மேற்கொண்டுள்ளது.

இலங்கையில யுத்தம் முடிபுற்ற பின்னரும் கைதிகள் முறையற்ற விதமாக நடத்தப்படுவதற்கான புதிய ஆதாரங்கள் தன்னிடம் உள்ளதாக சித்திரவதையிலிருந்து விடுதலை எனும் லண்டனைத் தளமாகக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனமொன்று தெரிவித்திருந்தது.

எனினும் (20ஆம் பக்கம் பார்க்க)

## பதவி பகிரப்படாது ரணில் உறுதி



ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர் பதவிகளைப் பகிர்ந்து கொள்ளும் உத்தேசம் ஒரு போதும் இல்லை. தலைமைத்துவப் பதவிக்கு போட்டியிடுவதான தீர்மானத்தை மாற்றிக் கொள்ள வேண்டாம் என அக்கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கட்சியின் நாடாளுமன்ற (20ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கு - கிழக்கு இணைப்பில் முஸ்லிம்களின் பங்கு முக்கியம்

### மு.காவிடம் த.தே.கூ. தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு ஆகிய மாகாணங்களை மீண்டும் இணைக்கும்போது முஸ்லிம்களின்பங்குமிகமுக்கியமாகும்எனதமிழ்தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்ததாக கல்முனை பிரதி மேயர் நிசாம் காரியப்பர் கூறினார்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் மிக நீண்ட நாட்களுக்கு பின்னர் நேற்று வியாழக்கிழமை நாடாளுமன்ற கட்டிடத் தொகுதியில் பேச்சுவார்த்தை இடம்பெற்றுள்ளது.

இதன்போது, தமிழ் மற்றும் முஸ்லிம் சமூகங்களுக்கிடையே புரிந்துணர்வை ஏற்படுத்துவதற்காக இரு கட்சிகளும் தொடர்ந்து பேச்சு நடத்துவது என தீர்மானிக்கப்பட்டதாகவும் சட்டத்தரணி நிசாம் காரியப்பர் குறிப்பிட்டார்.

அரசாங்கத்திற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழ். பல்கலை வளாகத்தில் அநாமதேய துண்டுப்பிரசுரங்கள்

### மாணவர்கள், விரிவுரையாளர்களுக்கு அச்சுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் சிலருக்கு உயிர் அச்சுறுத்தல் விடுத்து துண்டுப்பிரசுரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

யாழ். பல்கலைக்கழக வளாகத்தினுள் நேற்றுக் காலை பல இடங்களில் இவ்வாறான துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப்பட்டிருந்ததுடன், ஆங்காங்கே வீசப்பட்டும் காணப்பட்டதாக மாணவர்கள் தெரிவித்தனர்.

மாணவர்களின் பெயர்கள், அவர்களின் சொந்த இடங்களான மாவட்டங்கள் குறிப்பிட்டு இதில் எச்சரிக்கை செய்யப்பட்டுள்ளதுடன், சில விரிவுரையாளர்களின் பெயர்களும் உள்ளடக்கப்பட்டு அவர்களுக்கும் அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் சமாதானத்தை அனுபவித்துக் (19ஆம் பக்கம் பார்க்க)

## மாணவனை காணவில்லையென பொலிஸில் முறைப்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ். நகரில் மாணவன் ஒருவரை நேற்று முன்தினம் பிற்பகல் 3.00 மணி முதல் காணவில்லை என பெற்றோரால் யாழ். பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

யாழ்.சென்.ஜோன்ஸ் கல்லூரியில் க.பொ.த உயர்தரத்தில் கல்வி பயிலும் மாணவன் ஒருவரே இவ்வாறு காணாமல்போயுள்ளார்.

யாழ்.அத்தியடியைச் சேர்ந்த பாக்கியராசா தனுஜன் (வயது 18) என்ற மாணவனே காணாமல் போயுள்ளதாக முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

யாழ்.நகர் (20ஆம் பக்கம் பார்க்க)

## யாழில் இடம்பெறும் கடத்தல்கள் தொடர்பில் என்னைவிட ஊடகங்களுக்கே நன்கு தெரியும்

### அமைச்சர் ஹெகலியவின் கருத்து

(கொழும்பு)

யாழ்ப்பாணத்தில் காணாமல்போனவர்களை விடுவிக்குமாறு கூறுவதைவிட தன்னால் வேறு என்ன சொல்ல முடியும் என ஊடகத்துறை அமைச்சர் ஹெகலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை முடிபுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் ஒருவர் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இதன்போது யாழ்ப்பாணத்தில் காணாமல் போயுள்ள லலித்குமார வீரராஜ் மற்றும் குகன் முருகானந்தன் ஆகியோர் குறித்து அரசாங்கத்தின் நிலைப்பாடு என்ன என ஊடகவியலாளர் கேள்வி எழுப்பினார்.

அவர்கள் சட்டவிரோதமாக தடுத்து வைக்கப்பட்டுள்ளதாக பாராளுமன்றத்தில் கூறப்பட்டதை கேட்டிருக்கின்றேன். காணாமல் போயுள்ளமை தொடர்பில் எனக்குத் தெரியாது. கடத்தப்பட்டிருந்தால் விடுவிக்குமாறே



கோர முடியும் என்று அமைச்சர் பதிலளித்தார்.

இதேவேளை, கடத்தப்பட்ட அமைச்சர் மேர்வின் சில்வாவின் (20ஆம் பக்கம் பார்க்க)

# இந்திய உதவித் திட்டங்கள் தொடர்பில் தூதரக அதிகாரிகள் அரச அதிபருடன் ஆராய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ். குடாநாட்டில் இந்திய அரசினால் முன்னெடுக்கப்பட்டு வரும் உதவித் திட்டங்கள் தொடர்பான விசேட கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். அரச அதிபர் திருமதி இமெல்டா சுகுமார் தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் நடைபெற்றுள்ளது.

அதில் இந்தியத் துணைத் தூதுவர் வி. மகாலிங்கம், பிரதி துணைத் தூதுவர் பி.குமரன் மற்றும் எஸ். சிறிக்காந், கே.பிளெவிகே ஆகிய உயரதிகாரிகள் கலந்து கொண்டனர்.

இந்தச் சந்திப்புத் தொடர்பாக அரச அதிபர் கூறுகையில்,

இந்திய அரசாங்கத்தினால் யாழ். குடாநாட்டில் முன்னெடுக்கப்பட்டு வரும் வீட்டுத் திட்டம், வாழ்வாதார வேலைத் திட்டங்கள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டது.

இந்திய அரசாங்கத்தினால் 10 ஆயிரம் துவிச்சக்கர வண்டிகள் வடமாகாணத்துக்கு வழங்கப்படவுள்ளது. இது தொடர் பிலும் ஆராயப்பட்டது.

மேலும் மக்களின் வாழ்வாதாரம், தொழில் வாய்ப்பு, சமூகப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாகவும் இந்திய உயர் அதிகாரிகள் கேட்டறிந்தனர் என யாழ். அரச அதிபர் மேலும் தெரிவித்தார். (பா-6)

## தனியார் பேருந்து தருமபுரத்தில் விபத்து

(வட்டக்கச்சி)

தருமபுரப் பகுதியில் தனியார் பேருந்து ஒன்று வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதி விபத்துக்குள்ளானதில் அதில் பயணித்த 5 பேர் காயமடைந்து கிளிநொச்சி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இச் சம்பவம் நேற்று காலை 11 மணியளவில் இடம்பெற்றுள்ளது.

புதுக்குடியிருப்பு பிரதேசத்தில் இருந்து கிளிநொச்சி நோக்கி பயணித்துக் கொண்டிருந்த தனியார் பேருந்து தருமபுரப் பகுதியில் வேகக் கட்டுப்பாட்டை இழந்து மரத்துடன் மோதியதிலேயே இவ் விபத்து இடம் பெற்றுள்ளது. (பா-3,86)

## மின் தடைப்படும்

(யாழ்ப்பாணம்)

வீதியகலிப்பு பணிகளுக்காக உயரழுத்த மின் விநியோக மார்க்கங்களை இடமாற்றம் செய்ய வேண்டி இருப்பதால் இன்று வெள்ளிக்கிழமை காலை 8.30 மணி முதல் மாலை 5 மணி வரை கொட்டடி, நாவாந்துறை, மீனாட்சிபுரம், காக்கைதீவு, உரும்பிராய், ஊரெழு பிரதேசத்தின் ஒரு பகுதி ஆகிய இடங்களிலும் மின் விநியோகம் தடைப்படும் என யாழ். பிராந்திய மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (அ)

# தென்பகுதி சந்தைகளில் மரக்கறி விலை அதிகரிப்பு

(கொழும்பு)

மரக்கறிகள் மற்றும் பழவகைகளைக் கொண்டு செல்வதற்காக பிளாஸ்ரிக் கூடைகளை பயன்படுத்துவதற்கு எதிராக கடந்த மூன்று தினங்களாக நடத்தப்பட்ட ஆர்ப்பாட்டங்களை அடுத்து தென் பகுதிச் சந்தையில் மரக்கறிகளுக்கு பற்றாக் குறை காணப்படுகின்றது.

இதனால் மரக்கறிகளின் விலைகள் கடுமையாக அதிகரித்துள்ளன. கொழும்பு மனிங் சந்தையில் மரக்கறியின் விலைகள் 2 தொடக்கம் 3 மடங்காக நேற்று அதிகரித்துள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் லீக்ஸ் விலை ரூ.40 இலிருந்து 250 வரையிலும் மிளகாய் 250 ரூபாயிலிருந்து 600 ரூபாய் வரையிலும் தக்காளி 150 ரூபாயிலிருந்து 240 வரையிலும் வெங்காயம் 70 ரூபாயிலிருந்து 200 வரையிலும் கெக்கரிக்காய் 60 ரூபாயிலிருந்து 120 ரூபாய் வரையிலும் விலை அதிகரித்துள்ளது.

சகல வகை மரக்கறிகளின் விலைகளும் கணிசமாக அதிகரித்திருந்ததாக மனிங் சந்தை வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

ஜனவரி முதலாம் திகதியில் இருந்து கறிமிளகாய், பாவற்காய், தக்காளி, சலாது இலை போன்றன பிளாஸ்ரிக் கூடைகளில் பொதி செய்யப்பட வேண்டும்.

கெக்கரிக்காய், பீற்றூட், கோவா, லீக்ஸ் புடோலங்காய் ஆகியன சாக்குகளில் பொதி செய்யப் படலாம்.

பிளாஸ்ரிக் கூடைகளில் பொதி செய்யப்படும் மரக்கறிகள் வெப்பத்தில் பாதிக்கப் படுகின்றன. எனவே சாக்கு பொதியிடலுக்கும் பிளாஸ்ரிக் கூடைப் பொதியிடலுக்கும் இடையில் பெரிய வித்தியாசம் இல்லை என மரக்கறி வியாபாரிகள் தெரிவிக்கின்றனர்.

150 ரூபாயுடன் ஒரு சாக்கில் அனுப்பும் மரக்கறியை பிளாஸ்ரிக் கூடையில் அனுப்ப 450 ரூபாய் செலவாகும் என அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதனால் விவசாயிகளும் வியாபாரிகளும் பொதுமக்களும் பாதிக்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப் படுகின்றது. (பா-11)

# புதிய உத்தியில் திருட்டு

## கையும் மெய்யுமாக மடக்கினர் மக்கள்

(யாழ்ப்பாணம்)

பட்டப்பகலில் வர்த்தக நிலையம் ஒன்றில் பொருட்களை திருட முற்பட்ட நபர் ஒருவரை பொது மக்கள் மடக்கிப் பிடித்து பொலிஸாரிடம் ஒப்படைந்தனர்.

இந்தச்சம்பவம் நேற்று பிற்பகல் 3.45 மணியளவில் திருநெல்வேலி சந்தையை அண்டியுள்ள வர்த்தக நிலையத் தில் இடம் பெற்றுள்ளது.

சம்பவம் தொடர்பாக மேலும் தெரிய வருவதாவது,

திருநெல்வேலி சந்தைக்கு அருகாமையிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றின் முன்பக்கமாக அடுக்கி வைக்கப்பட்டிருந்த அங்கர் பெட்டிகளில் ஒன்றினை உரிமையாளர்களுக்கு தெரியாதவாறு நபர் ஒருவர் தூக்கிச் சென்றுள்ளார்.

இப்போது குறித்த வர்த்தக நிலையத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர் பொருளுக்கான பணச் சிட்டை போடப்பட்டு தான் பொருளைக் கொண்டு செல்கின்றாரா என உரிமையாளரிடம் கேட்ட போதுதான் குறித்த பொருள் திருடப்பட்டதை அறிந்து கொண்டனர்.

இதனையடுத்து பொருளைச் திருடிச் சென்ற நபரை பொதுமக்கள் மடக்கிப் பிடித்து அப்பகுதியில் கடமையில் இருந்த பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.

இதேவேளை கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்கும் வழங்கப்பட்ட தகவல்களின் அடிப்படையில் அப்பகுதிக்கு வந்த பொலிஸார் குறித்த நபரைக் கைது செய்து பொலிஸ் நிலையம் கொண்டு சென்றனர். மேலும் நேற்று முன்தினம் இவ்வாறு 8ஆயிரத்து 950 ரூபாய் பெறுமதியான அங்கர் பெட்டி திருட்டு போனதாகவும் அதையும் குறித்த நபரேதிருடியிருக்கலாம் எனவும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர பொதுமக்களினால் மடக்கிப் பிடிக்கப்பட்ட நபர் கொண்டு வந்த பெண்களுக்கான துவிச்சக்கர வண்டியும் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது. (பா-4,6)

# கணித பாடத்தில் 17புள்ளிகள் பெற்றவர்களுக்கு சாதாரண சித்தி

## கல்வித் தரத்தின் நிலை குறித்து அநுர கேள்வி

கடந்த வருடம் சாதாரண தர கணித பாடப் பரீட்சையில் 17 புள்ளிகளை எடுத்த மாணவர்களுக்கு சாதாரண சித்தி (S) வழங்கப்பட்டதாக ஜனநாயக தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்றக் குழுத் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்துள்ளார்.

கல்வித்தகைமை இந்த அளவிற்கு குறைக்கப்படக் கூடாதென அவர் நேற்று பாராளுமன்றில் சுட்டிக் காட்டினார்.

இவ்வாறு புள்ளிகள் குறைக்கப்பட்டால் கல்வியின் தரம் குறைவடைவதோடு மாணவர்களுக்கும் அது உகந்ததாக அமையாதென அவர் குறிப்பிட்டார்.

அநுரகுமாரவின் இக் கருத்துக்கு பதிலளித்த பிரதிக் கல்வி அமைச்சர் விஜித் விஜயமுனி சொய்சா, வருடத்திற்கு வருடம் சில சில காரணங்களுக்காக புள்ளிகள் குறைக்கப்படுவது வழக்கம் என்றார்.

ஆனால் கடந்த வருடம் புள்ளிகள் குறைக்கப்பட்டது தொடர்பில் தான் அறிந்திருக்கவில்லை எனவும் அது குறித்து ஆராய்ந்து பார்ப்பதாகவும் பிரதிக் கல்வி அமைச்சர் குறிப்பிட்டார். (பா)

## இலவச மருத்துவ முகாம்

(யாழ்ப்பாணம்)

வடபிராந்திய சத்திய சாயி சேவா நிறுவனத்தின் ஏற்பாட்டில் பண்டத்தரிப்பு சாந்தைக் கிராம சன சமூக நிலையத்தில் நாளை சனிக் கிழமை பிற்பகல் 2மணி முதல் 5 மணிவரை இலவச மருத்துவ முகாம் இடம் பெறவுள்ளது.

இதில் வைத்திய ஆலோசனைகளும் மருந்துகளும் இலவசமாக வழங்கப்படவுள்ளது.

தேவையுடைய சகலரும் சமுகமளித்து பயனடையுமாறு சத்திய சாயி சேவா நிறுவனத்தினர் கேட்டுள் ளனர். (பா-11)

## கடத்தப்பட்டவர்களின் மோட்டார் சைக்கிள் அச்சுவேலியில் மீட்பு

யாழ்ப்பாணத்தில்கடத்தப்பட்டதாக கூறப்படும் மக்கள் போராட்ட இயக்கத் தின் யாழ்.அமைப்பாளர் லலித் குமார வீரராஜ் மற்றும் குகன் ஆகியோர் பயணம் செய்த மோட்டார் சைக்கிள் யாழ். அச்சுவேலிப் பகுதியில் நேற்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மக்கள் போராட்ட இயக்கம் தெரிவித்துள்ளது.

லலித் குமார வீரராஜ் மற்றும் குகன் ஆகியோர் கடந்த சனிக் கிழமை முதல் காணாமல் போயுள்ளதாக மக்கள் போராட்ட இயக்கம் யாழ்ப்பாண பொலிஸில் முறைப்பாடு செய்திருந்தமை குறிப்பிடத்தக் கது. (பா-11)



# 2013 BIOLOGY EXAM MARKS LIST - 07th

| முழுப்பெயர் | புள்ளி | பாடசாலை |
|---|---|---|
| 1. நினுஜா தயாபரன் | 89 | J/V.G.H.S |
| 2. பிரியந்தினி சத்தியசீலன் | 89 | J/V.G.H.S |
| 3. தாரணி கோகழிநாதன் | 84 | J/V.G.H.S |
| 4. பிரியதர்சினி இராஜரட்ணம் | 83 | J/U.G.C |
| 5. சாலினி செல்வரட்ணம் | 82 | J/U.G.C |
| 6. பழனிவேல் லக்ஸ்மன் | 80 | J.H.C |
| 7. இந்துஜா சிவசுந்தரம் | 79 | J/V.G.H.S |
| 8. கோஜியா திருலோகநாதன் | 79 | J/V.G.H.S |
| 9. சற்குணம் ஸ்ரீபவன் | 79 | J/S.P.C |
| 10. ப்ருதுவி கதிர்காமலிங்கம் | 78 | J/H.L.C |
| 11. யாழினி சிவலட்ணம் | 78 | J/V.G.H.S |
| 12. ஷம்யா சிவானந்தன் | 74 | J/V.G.H.S |
| 13. சுவஸ்திகா சிவலோகநாதன் | 74 | J/C.G.C |
| 14. சிவாஜினி ராஜேஸ்வரன் | 73 | J/H.L.C |
| 15. ஷயா கிருபானந்தன் | 72 | J/H.L.C |
| 16. சிவராஜி சிவசுப்ரமணியம் | 71 | J/V.G.H.S |
| 17. லன்சி டொன்பொஸ்கோ | 70 | J/H.F.C |
| 18. ஆரணி தயானந்தராஜா | 70 | J/V.G.H.S |
| 19. யோகராசா சாருஜன் | 69 | J.H.C |
| 20. சோதிதர்சன் வெண்ணிலவன் | 68 | |
| 21. ஆதிரை பத்மநாதன் | 68 | J/V.G.H.S |
| 22. ருக்ஷிகா புவனேந்திராஜா | 67 | J/V.G.H.S |
| 23. பரமேஸ்வரன் சாஸ்வதன் | 67 | J.H.C |
| 24. லுக்சிகா ஸ்ரீகாந்தன் | 67 | J/H.L.C |
| 25. மதுரா மருதராஜன் | 66 | J/C.G.C |
| 26. பிரியங்கா புஸ்பகாந்தன் | 66 | J/V.G.H.S |

சு. பொன் திவாகரன்

(6975)

| Science Corner | Science Point | Biological Park |
|---|---|---|
| Jaffna. | Jaffna. | Manipay. |

## விற்பனை முகவர் தேவை

தண்ணீர் போத்தல், பழகலவை, நூடில்ஸ், பப்படம், உப்பு, சோஸ் மற்றும் இனிப்பு வகைகளை உற்பத்தி செய்யும் கம்பனிக்கு யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, ஆகிய பிரதேசங்களுக்கு விற்பனை முகவர்கள் தேவை.

மேலதிக விபரங்களுக்கு:-

0710936226

0714776036

(6974)



# இன்று ஒரு தகவல்

## மூன்று பிச்சைக்காரர்கள்

ஓர் ஊரிலே ஒரு பெரியவர் இருந்தார். அவர் ஒரு கோடீஸ்வரர். மிகவும் நல்ல காரியங்களை எல்லாம் செய்து கொண்டிருந்தார்.

அவரை தேடி நிறைய மக்கள் வருவார்கள். இவர் தன்னால் முடிந்த உதவிகளைச் செய்வார்.

ஒரு நாள் மூன்று பிச்சைக்காரர்கள் இவரைத் தேடி வந்தார்கள். இவரிடமிருந்து ஏதாவது பொருள் உதவி பெறலாம் என்று நினைத்து ஒரேநேரத்தில் செல்லாமல் தனித்தனியாக வந்தார்கள்.

முதல் பிச்சைக்காரன் காலையிலே வந்தான். இவர் முன்னால் வந்து நின்றான்.

"ஐயா எனக்கு ஐந்து ரூபாய் வேண்டும். தயவு செய்து கொடுங்கள்" என்று கேட்டான். இவன் இப்படிக் கேட்டதும் அவருக்கு கோபம் வந்தது.

"என்ன இது, நான் ஏதோ உங்களிடம் கடன்பட்டிருக்கிற மாதிரியும் அதைத்திருப்பி கொடுக்க வேண்டும் என்ற மாதிரியும் இவ்வளவு அதிகாரத் தொனியிலே பிச்சை கேட்கிறாய்... எவ்வளவு துணிச்சல் உனக்கு? உனக்கு ஐந்து ரூபாவும் இல்லை. ஒன்றுமே தரமாட்டேன். இந்த இரண்டு ரூபாவையும் எடுத்துக் கொண்டு இவ்விடத்தை விட்டு அகன்று போய்விடு என்று கூறிவிட்டு ஒரு இரண்டு ரூபாவைத் தூக்கி எறிந்தார். அவன் அதை எடுத்துக் கொண்டு ஓடி விட்டான்.

அடுத்த படியாக மதிய நேரம் இரண்டாவது பிச்சைக்காரன் வந்தான். இவன் எப்படிக் கேட்டான் தெரியுமா?

"ஐயா...பத்து நாட்களாக ஒருவேளை உணவுகூட சாப்பிடவில்லை...தயவு செய்து எனக்கு உதவி செய்யுங்கள்" என்றான்.

"உனக்கு எவ்வளவு வேண்டும்?" என்று கேட்டார். "நீங்களாக நினைத்து எவ்வளவு கொடுத்தாலும் அது எனக்குப் போதும்" என்றான்.

"இந்தப் பத்து ரூபாவை வைத்துக்கொள். ஏதாவது வாங்கிச் சாப்பிடு" என்றார்.

அவன் அந்தப் பத்து ரூபாவையும் வாங்கிக் கொண்டு போய்விட்டான்.

அதன் பின்னர் மாலை நேரமாக மூன்றாவது பிச்சைக்காரன் வந்தான். இவன் கேட்ட விதம் எப்படித் தெரியுமா?

"மகாராஜா உங்களுடைய உயர்ந்த குணத்தைப் பற்றி நான் நிறைய கேள்விப் பட்டிருக்கிறேன். அதனால் உங்களுடைய தரிசனத்தை பெற்று விட்டுப் போகலாமென்று வந்தேன். அற வழியிலே வாழ்ந்து கொண்டிருக்கிற நீங்கள்தான் என் கண் கண்ட தெய்வம்" என்றான்.

உடனே கோடீஸ்வரப் பெரியவர் என்ன சொன்னார் தெரியுமா?

"ஐயா தயவு செய்து உட்காருங்கள்... நீங்கள் மிகவும் களைத்துப் போய் வந்திருக்கிறீர்கள். முதலில் சாப்பிடுங்கள். மற்றையதை அதன் பின் பார்க்கலாம்" என்று கூறி அவனுக்கு உணவு பரிமாறினார்.

அவன் வயிறார உணவு உண்டான். அதன்பின் இவர் கேட்டார்; "இப்போது சொல்லு, நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்?" என்பதை தெளிவாகக் கூறு என்றார்.

அந்த பிச்சைக்காரன் இந்த அன்புக்கு நெகிழ்ந்து... ஐயா... பசியோடு வந்தேன்... அறுசுவை விருந்து படைத்தீர்கள். அது போதும் எனக்கு வேறு எதுவும் தேவையில்லை. நீங்கள் என்மேலே காட்டுகின்ற அன்பை நான் எப்போதும் மறக்க மாட்டேன். உங்களை கடவுள் ஆசீர்வதிப்பார். ஒரு குறையும் வராது என்றான்.

இவனுடைய பரிவான இந்த வார்த்தைகள் அவரது மனதைத் தொட்டன. அவன் மேல் இருந்த அன்பு பல மடங்காகியது.

அதன் விளைவு என்ன தெரியுமா?

"இதோ பார்! இனிமேல் நீ வெளியிலே எங்கேயும் போக வேண்டாம்... இங்கேயே இருந்து கொள்" என்றார்.

தனது பங்களாவுக்குப் பக்கத்திலேயே அந்த ஆளுக்கு ஒரு வீடும் கட்டிக் கொடுத்தார். கடைசி வரைக்கும் அந்த ஆளை தனக்குப் பக்கத்திலே வைத்துக்கொண்டார்.

இன்றைய காலத்தில் உள்ள பக்தர்கள் எல்லாம் இந்த மூன்று வகையிலே ஒரு வகையைச் சேர்ந்தவர்களாகத் தான் இருப்பார்கள். முதல் வகை தான் அதிகமாக இருக்கும். மூன்றாவது வகை மிகவும் அபூர்வம்.

எங்கள் ஊர்ப்பக்கமாக ஒரு பெரியவர் இருந்தார். இவர் செலவு செய்வதில் மகா கஞ்சன். ஒரு ரூபா மற்றவர்களுக்கு கொடுப்பது என்றால் மிகவும் யோசிப்பார். இவரைத் தேடி ஒரு நாள் சில பிச்சைக்காரர்கள் வந்தார்கள்.

"ஐயா! நாங்கள் எல்லோரும் சேர்ந்து ஒரு பிச்சைக்காரர்கள் சங்கம் ஆரம்பிக்கின்றோம். அதற்கு நீங்கள் ஆயிரம் ரூபா நிதியுதவி வழங்க வேண்டும் என்பதை விரும்புகின்றோம்" என்றார்.

"அதெல்லாம் ஒன்றுமே கொடுக்க முடியாது. அவ்வளவு தொகையான பணம் என்னிடம் கிடையாது" என்றார்.

"சரி ஒரு நூறு ரூபாவாவது கொடுங்கள்" என்றார். "அதுவும் முடியாது என்றார்.

"சரி ஒரு பத்து ரூபா...." என்றார்.

"அதுவும் கிடையாது" என்றார்.

"சரி அப்படியென்றால் ஒன்று செய்யுங்கள்" என்றார்.

"என்ன செய்ய வேண்டும்" என்று கேட்டார்.

"நீங்களும் எங்கள் சங்கத்திலே ஒரு அங்கத்தவராகச் சேர்ந்து கொண்டால் மிகவும் நல்லது" என்று கூறினார்.

*தென்கச்சி கோ சுவாமிநாதன்*

# சட்டத்திற்கு முரணானதை செய்யும் போது ஆதரவு வழங்க முடியாது

## யாழ்.மாநகரசபை எதிர்க்கட்சி தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

சட்டத்திற்கு முரணானதை செய்யும் போது ஆதரவு வழங்க முடியாது என யாழ்.மாநகரசபையின் எதிர்த்தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

யாழ்.மாநகரசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்ட ஆலோசனைக்கூட்டம் நேற்று முன்தினம் முதல்வர் திருமதி யோகேஸ்வரி பற்குணராசா தலைமையில் சபையின் மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்றது.

இதன்போதே எதிர்க்கட்சி உறுப்பினர்களான பரஞ்சோதி, விந்தன் ஆகியோர் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

அங்கு அவர்கள் மேலும் தெரிவிக்கையில், வரவு செலவுத்திட்ட அறிக்கை மாதாந்தக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

அத்தோடு நிதிக்குழு உறுப்பினர்களின் ஆலோசனைக்கு அமைவாக அமைக்கப்பட வேண்டும்.

ஆனால், பூரண அறிக்கையாக சமர்ப்பிக்கப்படவில்லை. மாநகர சபை உறுப்பினர்களின் கருத்துக்கு இடமளிக்கவில்லை.

ஏகமனதாக தயாரிக்கப்பட்டு சட்டத்திற்கு முரணாக ஒரு கூட்டத்தை கூட்டி வரவு செலவுத்திட்ட அறிக்கையை சமர்ப்பிப்பதை ஏற்க முடியாது.

நிதிக்குழுவில் எதிர்க்கட்சி உறுப்பினர்களும் அங்கம் வகிக்கின்றனர். எனவே, அவர்களின் கருத்துக்கும் மதிப்பளிக்க வேண்டும்.

நிதிக் குழுவிற்கு வரவு செலவுத்திட்ட அறிக்கை தயாரிப்பதில் பங்கில்லை என்றால் அந்தக் குழு எதற்கு. அதைக் கலைத்து விடுங்கள். நாம் ஒருபோதும் அரசியல் காழ்ப்புணர்ச்சியில் செயற்பட்டதில்லை. மக்களின் ஆதரவு எமக்குள்ளது. மக்களின் நலன்கருதி சட்டத்திற்கு முரணானதற்கு எதிர்ப்பு தெரிவிக்கின்றோம் என எதிரணி உறுப்பினர் தெரிவித்தனர். (அ-6)

# தொண்டராசிரியர் நியமனத்திற்கு முடிந்தவரை முயற்சி செய்வேன்

## வடமாகாண கல்வி அமைச்சின் செயலாளர்

யாழ்.மாவட்ட தொண்டர் ஆசிரியர்கள் தமக்கான நிரந்தர நியமனத்தைக்கோரி நேற்று தமது மூன்றாவது ஆர்ப்பாட்டம் ஒன்றை ஆளுநர் அலுவலகம் முன்பு நடத்தியது.

இவ் ஆர்ப்பாட்டம் ஒரு மணி நேரம் தொடர்ந்து நடைபெற்றதன் பின்பு அரச அதிகாரிகளிடம் வழமையான பதிலே கிடைத்ததாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். வடமாகாண கல்வியமைச்சின் செயலாளர் இ.இளங்கோவனிடம் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் மகஜர் அடங்கிய பெயர்ப்பட்டியலையும் கையளித்திருந்தனர்.

இதன்போது கருத்துக் தெரிவித்த இ.இளங்கோவன், தொண்டராசிரியர்கள் நியமனங்கள் 2009 ஆம் ஆண்டே முடிந்து விட்டது. இது குறித்து நான் எவ்வித நடவடிக்கையும் எடுக்க முடியாது. ஆனால், இதற்குரிய முயற்சிகளை மாத்திரம் என்னால் எடுக்க முடியும். கல்வியமைச்சிடம் நேரடியாக இந்த பெயர்ப் பட்டியலை கையளிக்கவுள்ளேன். இதன் பின்பு இறுதி முடிவு கல்வியமைச்சே எடுக்க வேண்டும். எனினும் இந்த நியமனங்களுக்கான சாத்தியம் மிகமிகக்குறைவு. என்னால் முடிந்த வரைக்கும் நான் முயற்சி செய்வேன் என அவர் மேலும் தெரிவித்தார். (அ-4)

# குடாநாட்டு சந்தைகளில் நேற்றைய விலை விபரம்

| மரக்கறி வகைகள் | நெல்லியடி | திருநெல்வேலி | சாவகச்சேரி |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 80 | 100 | 80 |
| உருளைக்கிழங்கு | 70 | 120 | 75 |
| பச்சைமிளகாய் | 300 | 350 | 300 |
| தக்காளி | 140 | 160 | 140 |
| மரவள்ளிக் கிழங்கு | 25 | 40 | 30 |
| கோவா | 70 | 100 | 80 |
| கரட் | 80 | 120 | 120 |
| பூசணி | 60 | 70 | 70 |
| புடோல் | 50 | 100 | 50 |
| வாழைக்காய் | 35 | 40 | 40 |
| சின்ன வெங்காயம் | 50-100 | 100 | 100 |
| பெரிய வெங்காயம் | 65 | 100 | 65 |
| பாகற்காய் | -- | 180 | 180 |
| வெண்டிக்காய் | 70 | 70 | 60 |
| கருணைக் கிழங்கு | 25 | 70 | -- |
| பயற்றங்காய் | 110 | 140 | 150 |
| லீக்ஸ் | 50 | 100 | 50 |
| பீற்றூட் | -- | 70 | 80 |
| கறிமிளகாய் | 170 | 180 | 160 |
| முருங்கைக்காய் | -- | -- | -- |
| போஞ்சி | -- | 160 | 200 |
| கத்தரிதம்புள்ள | 40 | 60 | 60 |
| கீரை - 1 பிடி | 10-15 | 40 | 20 |
| தேசிக்காய் | 120 | 180 | 150 |
| தேங்காய் (ஒன்று) | 20-30 | 25 | 30 |

# இராசி பலன்

*16:12.2011*
*(கார்த்திகை 30, வெள்ளிக்கிழமை)*
*சூரிய உதயம் காலை 6.15 மணிக்கு*
*சஷ்டி மாலை 6.51 மணிவரை*
*மகம் முன்னிரவு 9.06 மணிவரை*
*இராகுகாலம் 10.52-12.22 மணிவரை*
*சுபநேரம் 6.22-7.52 மணிவரை*
*ஆறுமுகநாவலர் குருபூசை.*

**மேடம்** சுய முயற்சியின் மூலம் சுகம் காணும் நாள், பிள்ளைகள் குடும்ப பொறுப்புணர்ந்து செயற்படுவர், வழிபாட்டில் அக்கறை காட்டுவீர்கள், சுப நிகழ்வுகளில் கலந்து கொள்ள அழைப்புகள் வந்து சேரலாம்.

**இடபம்** வாகன சுகத்தால் வளம் காணும் நாள், அஞ்சல் வழியில் ஆச்சரியமான தகவல்கள் வந்து சேரலாம், பணிபுரியும் இடத்தில் பெயரும் புகழும் அதிகரிக்கும், முருகப்பெருமான் வழிபாடு முன்னேற்றம் வழங்கும்.

**மிதுனம்** வம்பு வழக்குகளை சமாளித்து வளம் காணும். நாள், குடும்பத்தில் சிலரை திருப்திப்படுத்த சில பொறுப்புக்களை எடுக்க நேரிடலாம், சகோதரர் வழியில் உதவிகள் கிடைக்கலாம்.

**கடகம்** இல்லம்தேடி இனிய செய்திகள் வந்து சேரலாம், தொலை தூரத்திலிருந்து நல்ல செய்திகள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும், சில விவாதங்கள் இடம்பெறலாம்.

**சிங்கம்** ஆன்மீக நாட்டம் அதிகரிக்கும், குடும்பத்தில் பொறுப்புக்களும் சுமைகளும் கூடலாம், மனக்குழப்பம் அகல மாற்றினத்தவர்கள் உறுதுணைபுரிவர், திடீர் பயணங்கள் ஏற்படலாம்.

**கன்னி** வரம் தரும் தெய்வங்களை வழிபடச் செல்ல வேண்டிய நாள், அலைச்சல்கள் அதிகரித்தாலும் சிறு ஆதாயமும் ஏற்படலாம், குடும்பத்தில் அனைவரையும் அனுசரித்துச் செல்வதன் மூலம் மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**துலாம்** உறவினர் வருகையால் உள்ளம் மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும், செல்வ நிலை உயரும் நாள், பயணங்கள் செல்ல போட்ட திட்டங்கள் கைகூடும்.

**விருச்சிகம்** தொழில் வளர்ச்சி மேலோங்கும் நாள், விருந்தினர் வருகையுண்டு, பாதியில் நின்ற பணியை மீண்டும் தொடர்வீர்கள், பொதுநல ஈடுபாடு அதிகரிக்கும், பிறர் உதவியுண்டு.


**தனுசு** தேக ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நாள், வீண்பழிகள் அகல விரைந்து நடவடிக்கை எடுப்பீர்கள், மருத்துவச் செலவுகள் குறையும், தொழிலில் எதிர்ப்பாக இருந்தவர்கள் மனம் மாறுவர்.

**மகரம்** வழிபாட்டால் அமைதி காண வேண்டிய நாள், உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையும், தொழிலில் கவனத்துடன் செயற்படுவது நல்லது, போசன சுகமுண்டு.

**கும்பம்** குடும்பத்தில் மகிழ்ச்சி கூடும், புதிய தொழில் வாய்ப்புக்கள் தேடி வரும், எடுத்த கருமங்கள் கைகூடும், வழிபாட்டால் ஆனந்தமுண்டு, விருந்துபசாரங்களில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**மீனம்** நிர்வாகத்திறமை வெளிப்படும் நாள், நினைத்த காரியத்தை எளிதில் செய்து முடிப்பீர்கள், அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர், ஆரோக்கியம் சீராகி உற்சாகமடைவீர்கள்.

வளவன்


யாழ். பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் ஏற்பாட்டில் புகையிலைக்கு மாற்றீடான பயிர்ச்செய்கை தொடர்பான ஆய்வு நூலின் தமிழாக்க நூல் வெளியீட்டு விழா நேற்று யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நூலின் முதற்பிரதியை வடமாகாண சுகாதார சேவைகள் அமைச்சின் செயலாளர் ஆர். ரவீந்திரன், தேசிய அதிகார சபையின் இணைப்பாளர் வைத்திய கலாநிதி பிரசன்னாசூரேயிடமிருந்து பெற்றுக் கொள்வதையும் புகையிலை சார் உற்பத்திகளை விற்பனை செய்யாத வர்த்தகர்களை சுகாதார அமைச்சின் செயலாளர் சான்றிதழ் வழங்கி கௌரவிப்பதையும் நிகழ்வில் கலந்து கொண்டவர்களையும் படங்களில் காணலாம். (படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

# செம்மணி இந்துமயான வீதியில் கழிவுப் பொருட்கள் வீசப்படுகின்றன

## மக்கள் அசௌகரியம்

(நல்லூர்)

செம்மணி வீதியில் இந்து மயானத்தை அண்டிய பகுதியில் கழிவுப் பொருட்களை வீசுவதால் அப்பகுதியால் செல்லும் மக்கள் துர்நாற்றத்தின் மத்தியில் செல்ல வேண்டிய நிலை ஏற்படுகின்றது.

அப்பகுதியில் வயல் வேலை செய்வோரும் தெருவோரத்தில் செல்வோரும் இக் கழிவுப் பொருட்களினால் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர்.

செம்மணி இந்து மயானப்பகுதி மற்றும் அதன் மண்டபத்திலும் போத்தல்கள் உடைக்கப்பட்டு வீசப்படுகின்றன.

இவ்விடயத்தில் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (அ-3-134)

# கிணற்றினுள் இருந்து வயோதிபரின் சடலம் மீட்பு

(கரவெட்டி)

உடுப்பிட்டி பகுதியில் உள்ள வீட்டுக் கிணற்றுக்குள் இருந்து வயோதிபர் ஒருவரின் சடலம் வல்வெட்டித்துறை பொலிஸாரால் நேற்று முன்தினம் புதன்கிழமை மாலை மீட்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பாக தெரியவருவது,

தனது மகளுடன் வசித்து வந்த குறித்த முதியவர் சம்பவ தினம் மகள் சமுர்த்தி கூட்டத்திற்கு சென்றவேளை கிணற்றில் தவறி வீழ்ந்து உயிரிழந்திருக்கலாம் என தெரிவிக்கப்படுகின்றது.

குறித்த மகள் தனது தந்தையை தேடிப் பார்த்த போது கிணற்றுக்குள் சடலமாக காணப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தில் உடுப்பிட்டி வீரபத்திர கோவிலடியைச் சேர்ந்த மு.சுந்தரம்(வயது-68) என்ற வயோதிபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பாக வல்வெட்டித்துறை பொலிஸாருக்கு தெரியப்படுத்தியதையடுத்து சம்பவ இடத்திற்கு வந்த பொலிஸார் சடலத்தை மீட்டு பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

குறித்த சடலத்தின் மரண விசாரணையை வடமராட்சி திடீர் விசாரணை அதிகாரி வ. பாஸ்கரன் மேற்கொண்ட பின்னர் சடலம் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது. (அ-3-24)

## கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில்

# யாழ்.இந்து மாணவனுக்கு வெண்கலப்பதக்கம்



கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் பங்குபற்றிய யாழ். இந்து மாணவர்கள்.

சர்வதேச ரீதியில் 42 நாடுகளில் இருந்து 300 மாணவர்கள் பங்குபற்றிய கனிஷ்ட விஞ்ஞான ஒலிம்பியாட் போட்டியில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மாணவன் சு.வித்தியாசாகர் 3 ஆம் இடத்தைப் பெற்று வெண்கலப்பதக்கத்தைப் பெற்று இலங்கைக்கும் யாழ். இந்துக்கல்லூரிக்கும் பெருமை சேர்த்துள்ளார்.

தென்னாபிரிக்கா டேர்பின் மாநகரில் இம்மாதம் நடைபெற்ற இப்போட்டிகளுக்கு இலங்கையிலிருந்து 5 மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

இவர்களில் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியிலிருந்து சுந்தரேஸ்வரன். வித்தியாசாகர், ஆனந்தராசா.ஹரிசங்கரும் குருநாகல் மளியதேவக் கல்லூரியிலிருந்து கவிந்து நதீசனகுமார,கொழும்பு விவசாயக் கல்லூரியிலிருந்து வினூரிஹேமல்காவும், கண்டி மகாமாயாக் கல்லூரியிலிருந்து வினுரிசந்தன அட்டிகலவும் பங்கு கொண்டனர்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி விஞ்ஞான பாட ஆசிரியர் சொக்கலிங்கம் ஹரிசங்கர் இவர்களை வழிநடத்தி அழைத்து தென்னாபிரிக்கா சென்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)




# கட்டாக்காலி கால்நடைகளை கட்டுப்படுத்த நடவடிக்கை

## சாவகச்சேரி பிரதேச சபை தெரிவிப்பு

(சாவகச்சேரி)

சாவகச்சேரி பிரதேச எல்லைக்குட்பட்ட நெற்செய்கை பிரதேசம் கட்டாக்காலி கால்நடைகளால் அழிக்கப்படுகிறது.

கட்டாக்காலி கால்நடைகள் சாவகச்சேரி பிரதேசசபையில் பிடிக்கப்படும் என அறிவித்தும் நடவடிக்கைகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லை .

ஆயினும் எதிர்வரும் காலங்களில் கட்டாக்காலி கால்நடைகள் பிடிக்கப்பட்டு யாரும் உரிமை கோராத பட்சத்தில் ஏலத்தில் விடப்படவுள்ளன.முதற்கட்டமாக தனங்கிளப்பு மறவன்புலவு, தச்சன்தோப்பு ,நாவற்குழி ஆகிய பிரதேசங்களில் கால்நடைகளை பிடிப்பதற்கான ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தொடர்ந்து கொடிகாமம்,கச்சாய், மிருசுவில், கரம்பகம், மட்டுவில் ,சரசாலை, கைதடி ஆகிய பகுதிகளிலும் கால் நடைகள் பிடிக்கப்படும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாகவும் சாவகச்சேரி பிரதேச சபை தவிசாளர் சி.துரைராஜா அறிவித்துள்ளார். (அ-3-29)

# கப்பூது பகுதி மதகினை புனரமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சரசாலை துன்னாலை வீதியில் கப்பூது பகுதியில் உள்ள மதகு பெரும் சேதமடைந்துள்ளதால் பயணம் செய்ய முடியாத அவல நிலை உள்ளது.

இம் மதகின் ஒரு பகுதி உடைந்துள்ளதாலும் மறுபகுதி மணல் போட்டு உயர்த்தப் பட்டுள்ளதாலும் சிறியரக வாகனங்களின் கீழ்ப்பகுதிமணல் மேட்டில் சிக்கி சேதப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.கன்ரர் வாகனங்கள் பயணம் செய்ய கூடியதாக இருப்பினும் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்வோர் இறங்கி சிறிது தூரம் நடந்து சென்று, பின்னரே பயணத்தை தொடர வேண்டியுள்ளது.

எனவே,உரிய தரப்பினர் இதனைக் கருத்திற் கொண்டு நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-29)

# வருட இறுதி நாள் நிகழ்வும் ஆசிரியர் தின விழாவும்

திருநெல்வேலி ஸ்மாட் கிட்ஸ் மாதிரி முன்பள்ளி சிறார்களுக்கான வருட இறுதி நாள் நிகழ்வும் ஆசிரியர் தின விழாவும் நடத்தப் படவுள்ளது.இந்நிகழ்வில் மூன்று வயது பூர்த்தியடைந்த மாணவர்களுக்கான நிகழ்வு நாளை சனிக்கிழமை காலை 9 மணிக்கும் நான்கு வயதுபூர்த்தியான மாணவர்களுக்கான நிகழ்வு பிற்பகல் 2 மணிக்கும் கொக்குவில் இந்து ஆரம்ப பாடசாலையில் இரு அமர்வுகளாக நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் முதல் அமர்வுக்கு பிரதம விருந்தினராக வடமாகாண முன்பள்ளி பணிப்பாளர் செல்வி ஜெயா தம்பையாவும் இரண்டாம் அமர்வுக்கு முன்னாள் யாழ்.வலயக்கல்வி பணிப்பாளர் திருமதி எ.வேதநாயகம் ஆகியோர் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (அ)

# வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை

(நல்லூர்)

கல்வியங்காடு சந்தைக்கு முன்பாகவுள்ள பருத்தித்துறை வீதி பெரும் குன்றும் குழியுமாக காணப்படுவதால் பயணம் செய்யும் வாகன சாரதிகளும் பொதுமக்களும் பெரும் சிரமங்களை எதிர் கொள்கின்றனர். தற்பொழுது பெய்து வரும் மழையால் வெள்ள நீர் தேங்கி நின்று வாகனங்கள் செல்லும் போது நடந்து செல்லும் பயணிகளின் உடைகளில் வெள்ள நீரானது தெளிக்கப்பட்டு உடைகள் அழுக்கடைகின்றன.

சம்பந்தப்பட்ட அதிகாரிகள் இவ் விடயத்தை கவனத்தில் கொண்டு உடன் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அப்பகுதி மக்களும் பயணிகளும் கோரிக்கை விடுத்துள்ளனர். (அ-3-134)

# ஆவணங்கள் கண்டெடுப்பு

(யாழ்ப்பாணம்)

வேருவல நளீம் ஹஜியார் கல்லூரியில் ஆசிரியராக கடமையாற்றும் பரமலிங்கம் நமுனகுலராஜன் என்பவரது அடையாளஅட்டையுடன் அவரது ஆவணங்கள் அடங்கிய கைப்பை கண்டெடுக்கப்பட்டு வலம்புரி காரியாலயத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. அலுவலக நேரத்தில் வந்து தகுந்த ஆதாரம் காட்டி பெற்றுக்கொள்ளவும். (அ)

# தமிழர்களை நாடு கடத்துவதில் முனைப்பு காட்டுகிறது பிரிட்டன்

## கார்டியன் நாளிதழ் தகவல்

(கொழும்பு)

சுமார் 50 வரையான தமிழ் அகதிகளை பிரித்தானிய அதிகாரிகள் தனி விமானம் ஒன்றின் மூலம் இலங்கைக்கு நாடு கடத்தப் படவுள்ளதாக பிரித்தானியாவின் கார்டியன் நாளிதழ் செய்தி வெளியிட்டுள்ளது.

நேற்று பிற்பகல் 50 வரையான அகதி களுடன் இந்த விமானம் இலங்கை நோக்கிப் புறப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது. ஆனால், எந்த விமான நிலையத்தில் இருந்து இவர் களை ஏற்றிய விமானம் புறப்பட்டது என் பதை வெளியிடாமல் பிரித்தானிய அதிகாரி கள் இரகசியமாக வைத்துள்ளனர்.

திருப்பி அனுப்பப்படும் தமிழ் அதகதிகள் இலங்கை படைகளால் துன்புறுத்தப்படுவ தாக புதிய சாட்சியங்கள் கிடைத்துள்ள போதி லும் பிரித்தானியாவின் எல்லை முகவரகம் இவர்களை கட்டாயமாக திருப்பி அனுப்புவ தாக கார்டியன் குறிப்பிட்டுள்ளது.

திருப்பி அனுப்பப்படும் தமிழ் அகதிகள் இலங்கையில் கைது செய்யப்பட்டு சித்திர வதை செய்யப்படும் ஆபத்து இருப்பதாக அனைத்துலக மன்னிப்புச் சபை, மனித உரி மைகள் கண்காணிப்பகம் ஆகியன எச்சரி த்துள்ள போதும் இவர்களை நாடு கடத்துவதில் பிரித்தானிய அதிகாரிகள் உறுதியுடன் உள்ளனர்.

சித்திரவதையால் பாதிக்கப்பட்டோருக்கு மருத்துவ உதவிகளை வழங்கி வரும் சித் திரவதையில் இருந்து விடுதலை என்ற லண் டனைத் தளமாகக் கொண்ட அரசசார்பற்ற நிறுவனம் இலங்கையில் உள்நாட்டு போர் முடிந்தாலும் இந்த ஆண்டும் அங்கு சிறைக் கைதிகள் துன்புறுத்தப்படுவதாக கூறியுள் ளது.

அண்மையில் இந்த அமைப்பு பிரித்தா னிய எல்லை முகவரக அதிகாரிகளுக்கு அனு ப்பியுள்ள தகவலில் பிரித்தானியாவில் இரு ந்து இலங்கை சென்ற றொகான் என்ற தமிழர் சித்திரவதை செய்யப்பட்டதற்கான சாட்சியங்களை அளித்துள்ளது.

மாணவர் விசாவில் பிரித்தானியா சென்றி ருந்த றொகான் சுகவீனமுற்ற உறவினரைப் பார்க்க இலங்கை திரும்பிபோது கொழும்பு விமான நிலையத்தில் கைது செய்த அதிகாரி கள் மூன்று நாட்கள் தடுத்து வைத்திருந்தனர். என கார்டியன் நாளிதழ் குறிப்பிட்டுள்ளது.

(அ-2)

# சிறுவர் இல்லத்தில் குற்ற செயல்கள் இடம்பெறவில்லை

## நீதிமன்றம் தெரிவிப்பு

(கொழும்பு)

மொரட்டுவ, ராவதாவத்தை சிறுவர் இல்லத்தில் குற்றச்செயல்கள் எதுவும் இடம் பெறவில்லை என இரகசிய பொலிஸார் கொழும்பு நீதவான் நீதிமன்றில் தெரிவித் துள்ளனர்.

சட்டவிரோதமாக சிறுவர் விற்பனை யில் ஈடுபட்டு வந்ததாக குற்றம் சுமத்தப் பட்டு ராவதாவத்தை சிறுவர் இல்லம் மீது தாக்கல் செய்யப்பட்டிருந்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே இரகசிய பொலிஸார் இவ்வாறு தெரிவித்தனர்.

பொலிஸ் மா அதிபரின் கட்டளைக்கு அமையவே விசேட விசாரணை நடத்தப்பட் டதாகவும் இதன்படி குறித்த சிறுவர் இல் லத்தில் உள்ள சிறுவர் தொடர்பான எவ் வித சட்டவிரோத செயற்பாடுகளும் இடம் பெறவில்லை என்பது உறுதியான தாக பொலிஸார் தமது அறிக்கையில் தெரிவித் துள்ளனர்.

அனைத்து நடவடிக்கைகளும் நீதிமன் றம் ஊடாகவே இடம்பெற்றுள்ளதாக பொலி ஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

வழக்குடன் தொடர்புபட்டதாக கைது செய்யப்பட்ட அருட்சகோதரியை விடு தலை செய்யுமாறு சட்ட மா அதிபர் ஆலோ சனை வழங்கியுள்ளார் என நீதிமன்றில் அறிக்கை சமர்ப்பித்த தேசிய சிறுவர் பாது காப்பு அதிகார சபையினர் குறிப்பிட்டுள் ளனர்.

குறித்த அருட்சகோதரியை விடுதலை செய்யுமாறு கொழும்பு மேல் நீதிமன்ற நீதவான் இவோன் பெனாண்டோ உத் தரவிட்டார்.

அத்துடன் பொலிஸார் கைப்பற்றிய அருட்சகோதரியின் கடவுச்சீட்டை மீளளிக் குமாறும் சிறுவர் இல்லத்தில் இருந்து தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபை யினர் கைப்பற்றிய அனைத்து ஆவணங் ளையும் உரியவர்களிடம் கையளிக்கு மாறும் நீதவான் உத்தரவிட்டுள்ளார்.

(அ-2)

# வவுனியா வடக்கு பிரதேசத்தில் நன்னீர் மீன் வளர்ப்பு திட்டம்



(கொழும்பு)

வவுனியா வடக்கு நெடுங்கேணி பிரதேச செயலகத்திற்குட்பட்ட நெடுங்கேணி தெற்கு கிராம சேவகர் பிரிவில் இறம்பைக்குளம் விதை உற்பத்தி சங்கத்தினரால் நன்னீர் மீன் வளர்ப்புத் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

தனியார் காணியில் மேற்கொள்ளப்பட்டு வரும் இத்திட்டத்தில் முதல் தடவையாக 2 ஆயிரத்து 400 மீன் குஞ்சுகள் வளர்க்கப் பட்டு வருவதுடன் இத்திட்டத்திற்கு வவுனியா வடக்கு நன்னீர் மீன்பிடிச்சங்கம் மற்றும் நெடுங் கேணி பனை தென்னை வள அபிவிருத்தி சங்கத்தினால் நிதியுதவி அளிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இத்திட்டத்தின் ஊடாக மீள்குடியேறிய மக்களில் சிலர் தமது ஜீவனோபா யத்தினை மேற்கொள்ளக் கூடியதாக இருக்குமென விதை உற்பத்தி சங்கத்தின் தலைவர் தெரிவித்தார்.

(அ-2)



# தொல்லை கொடுப்பதற்கு இடமளிக்கவேண்டாம்

## சபையில் சம்பந்தன் கோரிக்கை



தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான இரா. சம்பந்தன் உரையாற்றிக் கொண்டிருந்த வேளையில், ஆளும் தரப்பில் பின்வரிசை உறுப்பினர்கள் தொடர்ந்து இடையூறுகளை ஏற்படுத்திக் கொண்டிருந்த நிலையில் அதற்கு எவ்விதமான பதிலையும் அளிக்காத சம்பந்தன் ஏம்.பி.தனதுரையின் நிறைவில் தொல்லை கொடுப்பதற்கு இடமளிக்கவேண்டாம் என்று கடுந்தொனியில் சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் வெளிவிவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதம் நடைபெற்றது.

இதில் கலந்து கொண்ட இரா.சம்பந்தன் எம்.பி.தனதுரையில் மனித உரிமைகள் தொடர்பான சர்வதேச சாசனத்தில் அரசாங்கம் கையொப்பம் இட்டிருக்கின்ற போதிலும் அதில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை கணக்கில் எடுக்கவில்லை.

இதன் போது அவையில் இருந்த சிரேஷ்ட அமைச்சர் டியூ.குணசேகர, அமைச்சர்களான ஜி.எல்.பீரிஸ், தினேஸ்குணவர்த்தன, அனுரபிரியதர்சனயாப்பா உள்ளிட்டோர் அவதானத்தை செலுத்திக்கொண்டிருந்த போதிலும் பின்வரிசையில் இருக்கின்ற பிரதி சுகாதார அமைச்சர் லலித் திஸாநாயக்க, ஏ.எச். எம். அஸ்வர் ஆகியோர்அடிக்கொருதடவை இடையூறுகளை ஏற்படுத்தினர்.மேலே குறிப்பிட்ட விடயங்களை சம்பந்தன் எம்.பி. தெளிவுபடுத்துகையில் கடும் இடைஞ்சலை ஏற்படுத்தினார்.

இதன் போது அவையில் இருந்த தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு எம்.பி.க்கள் அவ்விருவருக்கும் ஏதோ கூறுவதற்கு முயன்ற போதிலும் அவர்களை அமைதிப்படுத்திய சம்பந்தன் தனதுரையைத் தொடர்ந்தார்.

தனதுரையின் நிறைவில் சபையில் ஒழுக்கத்தைப் பேண வேண்டும்.இங்கு வீணாக கூச்சலிடுகின்றனர்.தயவு செய்து தொல்லை கொடுப்பதற்கு இடமளிக்கவேண்டாம் எனக் கேட்டுக் கொண்டு அமர்ந்துவிட்டார்.


இதன்போது அஸ்வர் எம்.பியும், பிரதி அமைச்சர் லலித் திஸாநாயக்கவும் சம்பந்தனின் அந்த அறிவிப்புக்கு எதிராக கூச்சல் இட்டனர்.அப்போது சிரேஷ்ட அமைச்சர் டியூ குணசேகர உரையாற்றுவதற்கு எழுந்து நின்றிருந்தார். இடைமறித்த சபாநாயகர் அமைச்சருக்கு ஏன் உரையாற்றுவதற்கு இடமளிக்க மறுக்கின்றீர்கள்.தயவு செய்து கூச்சலிட வேண்டாம் என்று கேட்டுக் கொண்டார். (அ-2)

## விசேட போக்குவரத்து ஒழுங்குகள்

இன்று வெள்ளிக்கிழமையும் நாளை சனிக்கிழமையும் நடைபெறவுள்ள இரவு நேர காரோட்ட பந்தயப் போட்டியை முன்னிட்டு கொழும்பிலுள்ள சில வீதிகள் மூடப்படவுள்ளன.

இன்று மாலை 4.30 மணியிலிருந்து நாளை சனிக்கிழமை காலை 6 மணி வரையும் பின்னர் சனிக்கிழமையும் மாலை 4.30 மணியிலிருந்து ஞாயிற்றுக்கிழமை காலை 6 மணிவரையும் கொழும்பிலுள்ள சில வீதிகள் மூடப்படவுள்ளன. (அ-2)

## தாமரைத்தடாகம் கலையரங்கு ஜனாதிபதியால் திறந்து வைப்பு



இலங்கை-சீன நட்புறவின் ஞாபகார்த்தமாக கொழும்பில் அமைக்கப்பட்டுள்ள தாமரை தடாகம் மஹிந்த ராஜபக்ஷ கலையரங்கு உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்படவுள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மற்றும் சீனாவின் பிரதிப் பிரதமரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டு உத்தியோகபூர்வமாக கலையரங்கைத் திறந்து வைக்கவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆயிரத்து 288 ஆசனங்களைக் கொண்ட இந்தக் கலையரங்கம் நவீன தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உருவாக்கப்பட்டுள்ளதுடன் நவீன முறையில் மாற்றங்கள் செய்யக்கூடிய மேடை, நவீன தொழில்நுட்பத்திலான ஒலி மற்றம் ஒளி அமைப்புக்கள் செய்யப்பட்டுள்ளன.

ஐந்து மாடிகளைக் கொண்ட இந்தக் கலையரங்கம் 21 ஆயிரத்து 760 சதுர மீற்றர் பரப்பளவைக் கொண்டுள்ளது. உடைகள் மாற்றும் 13 அறைகள், சிற்றுண்டிச்சாலை, 306 வாகனங்கள் நிறுத்தக்கூடிய வாகனத் தரிப்பிட வசதி எனப் பல்வேறு வசதிகளைக் கொண்டதாக இந்தக் கலையரங்கம் அமைக்கப்பட்டுள்ளது.

சுமார் 300 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள இக்கலையரங்கம் திறந்து வைக்கப்படுவதை முன்னிட்டு ஹோர்டன் பிளேஸ் முதல் பொது நூலகம் வரையிலான வீதிக்கு தாமரை தடாகம் வீதி பெயரிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## தாகூரின் குறிப்புப்புத்தகம் 92 இலட்சம் ரூபாய்க்கு ஏலம்

(நியூயோர்க்)

ரவீந்திரநாத் தாகூரின் பழைய குறிப்புப் புத்தகம் அமெரிக்காவில் நடந்த ஏலத்தில் 92 இலட்சம் ரூபாய்க்கு ஏலம் போயுள்ளது. நோபல் பரிசு பெற்ற வங்களா கவிஞர் ரவீந்திரநாத் தாகூர் கடந்த 1928 இல் எழுதிய குறிப்புப்புத்தகம் ஒன்று சமீபத்தில் வெளி உலகத்திற்கு தெரியு வந்தது. அவர் தனது குடும்ப நண்பர் ஒருவருக்கு 1930 ஆம் ஆண்டில் அந்த குறிப்புப்புத்தகத்தைப் பரிசாக கொடுத்துள்ளார். இதில் 12 இலக்கிய கவிதைகளும் ஏராளமான வங்காளமொழி பாடல்களும் அவர் எழுதியிருக்கிறார்.

மேலும் பின்னாளில் மிகவும் பிரபலமான பாடல்களை அவர் எழுதி அவற்றில் பல திருத்தங்கள் செய்துள்ளதும் அந்த குறிப்புப்புத்தகத்தில் உள்ளது. சித்திரங்காடா என்ற நாட்டிய நாடகத்தில் இடம்பெற்ற பாடல்களும் அதில் எழுதப்பட்டிருக்கின்றன. இந்த அரிய பொக்கிஷம் நியூயோர்க்கில் சோத்பை மையத்தில் நேற்று முன்தினம் ஏலத்திற்கு விடப்பட்டது.

இப்புத்தகம் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்து 500 அமெரிக்க டொலர்களுக்கு ஏலம் போனது. அதா வது இந்திய பணத்தில் சுமார் 92 இலட்சம் ரூபாய் என்பது குறிப்பிடத்தக்கது.

## படை அதிகாரிகளுக்கான உயர் அக்கடமியில் வெளிநாட்டு முப்படை அதிகாரிகளுக்கும் பயிற்சி

### பிரதமர் தெரிவிப்பு

இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்டுள்ள பாதுகாப்புப்படை அதிகாரிகளுக்கான உயர் அகடமியில் வெளிநாட்டு முப்படை அதிகாரிகளும் பயிற்சிகளை பெறுவதன் மூலம் தத்தமது திறன்களை ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொள்ள வாய்ப்பளிப்பதாக பிரதமர் டி.எம். ஜயரத்ன தெரிவித்துள்ளார்.

பாதுகாப்பு படை அதிகாரிகளுக்கான அகடமியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற பட்டமளிப்பு வைபவத்தில் பிரதம அதிதியாகக் கலந்து உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது,

1998 ஆம் ஆண்டு பாதுகாப்புப் படை அதிகாரிகளின் பட்டப்படிப்பிற்காக இந்நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது. அன்றிலிருந்து இன்றுவரை இந்நிறுவனம் மகத்தான சேவைகளைச் செய்து வருகிறது. குறிப்பாக கடந்த கால யுத்தத்தின்போது எமது இராணுவத்திற்குத் தேவையான மன வலிமை, உடற்தகுதி, பயிற்சி, ஆலோசனை, புத்திசாதுர்யம் போன்ற அனைத்து விடயங்களையும் பெற்றுக் கொள்ள வாய்ப்பளித்தது.

இந்நிறுவனத்தில் வெளிநாட்டினர் பயிற்சி பெறுவதன் மூலம் எமது திறன்களை அவர்களும் அவர்களது திறன்களை நாமும் பெற்றுக்கொள்ள சந்தர்ப்பம் கிடைத்துள்ளது என்றார்.

பிரித்தானிய ரோயல் அக்கடமியைத் தழுவிய இந்தப்பயிற்சி எமது முப்படை அதிகாரிகளின் திறன்களை வளர்க்க உதவுகிறது. இந்நிறுவனத்தின் செயற்பாட்டை அதிகரிக்கும் வகையில் எமது நட்பு நாடுகள் பயிற்சி தொடர்பாக எமக்கு பல்வேறுபட்ட உதவிகளையும் செய்துள்ளன என்றார்.

இவ்வைபவத்தில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோத்தபாயவும் கலந்து சிறப்பித்தார். (அ-2)



சுன்னாகம் அறிஞர் ஐயன்னா சனசமூக நிலையத்தின் முன்பள்ளி ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது.இதன்போது வலி.தெற்கு பிரதேசசபை தவிசாளர் தி.பிரகாஷ் விழாவை ஆரம்பித்து வைப்பதனையும் கலந்து கொண்ட விருந்தினர்களையும் படத்தில் காணலாம்.


## அதிவேக நெடுஞ்சாலையில் தவறிழைத்த 155 சாரதிகளுக்கு எதிராக நடவடிக்கை

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் கடந்த 15 நாட்களில் போக்குவரத்து விதிகளை மீறியதாகத் தெரிவிக்கப்படும் 155 சாரதிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

போக்குவரத்து விதிகளை மீறியமை, விபத்துக்கள் ஏற்படும் வகையில் கவனக்குறைவாக வாகனங்களை செலுத்தியமை ஆகியன தொடர்பில் இந்த சாரதிகள் மீது வழக்குத் தொடரப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்களை தவிர்த்தல் மற்றும் பாதுகாப்பாக வாகனங்களை செலுத்துவது குறித்து கண்காணிப்பதற்காக பணிப்பாளர் எரிக் பெரேரா தலைமையில் போக்குவரத்து பிரிவு தொடர்ச்சியாக கண்காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருக்குமெனவும்பொலிஸார்கூறினர்.(அ-2)





சொண்ட் நிறுவனத்தின் ஏற்பாட்டில் நல்லூர் பிரதேச செயலர் பிரிவிற்குட்பட்ட பகுதியில் இடம்பெறும் குற்றச் செயல்கள் ,வாகன விபத்துக்கள், கலாசார சீரழிவுகள் போன்ற பத்து விடயங்கள் உள்ளடக்கியதான விசேட கலந்துரையாடலொன்று நேற்று யாழ்.பிரதேச செயலக மண்டபத்தில் இடம்பெற்றது. இதில் வடபிராந்திய பொலிஸ்மா அதிபர் ரி. இந்திரன் உரையாற்றுவதையும் கலந்துரையாடலில் பங்கு கொண்டவர்களையும் படங்களில் காணலாம்.

(படங்கள்: அலுவலகச் செய்தியாளர்)

## விபத்தில் சிக்கி யுவதி மரணம்

மன்னார், சிலாபத்துறை பிரதான வீதியில் கடந்த திங்கட்கிழமை காலை இடம்பெற்ற விபத்தில் யுவதி ஒருவர் உயிரிழந்துள்ளார்.

மன்னார் சுகாதார சேவைகள் பணிமனையில் சமுதாய உதவியாளராக கடமையாற்றும் ஹலிம்டின் முகம்மது மஹீஸா (வயது 22) என்ற யுவதியே உயிரிழந்தவராவார்.

மோட்டார் சைக்கிளில் தனது உறவினருடன் பயணித்து கொண்டிருந்த போது தவறி வீழ்ந்தே இவர் உயிரிழந்துள்ளார். (அ-2)

# ஊடகவியலாளர்களுக்கு தனியான மாடி வீட்டுத்திட்டம் அவசியமாகும்

## ஐக்கிய தேசிய கட்சி சபையில் வலியுறுத்தல்

(கொழும்பு)

ஊடகவியலாளர்களுக்கென தனியான மாடி வீட்டுத்திட்டமொன்றை பெற்றுக் கொடுக்க வேண்டுமென்று வலியுறுத்திய ஐக்கிய தேசியக் கட்சி எம்.பி.யான கயந்த கருணாதிலக ஊடகவியலாளர்களுக்கு வெளிநாட்டுப் பயிற்சிகளை பெற்றுக் கொள்வதற்கு வழிவகைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்றும் ஊடக அமைச்சிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

பாராளுமன்றத்தில் கடந்த செவ்வாய்க் கிழமை நடைபெற்ற வெகுசன ஊடகத்துறை மற்றும் தொடர்பாடல் தகவல் தொழில்நுட்ப அமைச்சு மீதான குழு நிலை விவாதத்தை ஆரம்பித்து வைத்து உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கயந்த எம்.பி. இங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஊடகவியலாளர் எக்னெலிகொட கடத்தப்பட்ட நிலையில் அவர் தற்போது வெளிநாடொன்றில் புகலிடம் பெற்றிருப்பதாக முன்னாள் சட்டமா அதிபர் கூறியிருக்கின்றார். எனவே அவர் எந்த நாட்டில் இருக்கின்றார் என்பதை ஊடகத்துறை அமைச்சர் குறிப்பிட வேண்டும்.


ஊடகவியலாளர்களுக்கு கணனி, கமராக்களைப் பெற்றுக் கொடுப்பதற்கென கடந்த வருடத்துக்கான வரவு செலவுத்திட்டத்தில் 50 மில்லியன் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்தது. எனினும் அந்த நிதியிலிருந்து ஒரு பென்சிலைக்கூட ஊடகவியலாளர்களுக்கு பெற்றுக்கொடுக்கவில்லை.மாறாக அந்த நிதி வேறு தேவைகளுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளது.

ஊடகங்கள் தொடர்பில் மிக உயர்வாக பேசிய மஹிந்த சிந்தனை அரசாங்கம் அமைக்கப்பட்து. அவ்வாறான அரசாங்கம் ஊடகவியலாளர்களின் நலனிலும் அக்கறை காட்ட வேண்டும்.

அரச ஊடகங்கள் இன்று தனியொரு குடும்பத்துக்கு சொந்தமானதாகவே இயங்குகின்றன. எதிர்த்தரப்பினருக்கு இங்கு இடமில்லை.

இந்த நிலைமைகளால் தான் அரச ஊடக நிறுவனங்கள் வங்குரோத்து நிலைமையை அடைந்திருக்கின்றன. அரச பத்திரிகைகளின் வீதமும் வீழ்ச்சி அடைந்து காணப்படுகின்றது என்றார். (அ-2)

# திருக்கோணேஸ்வரர் ஆலயத்தில் 33 அடி உயரமான சிவனின் சிலை திறப்பு



(கொழும்பு)

வரலாற்றுச் சிறப்புமிக்க இந்துக்களின் புனிதத் தலமான திருகோணேஸ்வரர் ஆலயத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள 33 அடி உயரமான சிவனின் சிலை நேற்றுக் காலை 10.35 மணியளவில் திறந்த வைக்கப்பட்டது.

மூவாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட வரலாற்றுச் சிறப்புடைய இந்த ஆலயத்தில் இராவணன் வெட்டுக்கு அருகில் புதியதொரு தியான மண்டபமும் நிர்மாணிக்கப்பட்டுள்ளது.பெரிய லிங்கமொன்றும் அமைக்கப்பட்டது.

இந்த சிலை திறப்பு விழா நிகழ்வில் பெரியார்களான காந்தி ஐயா,கணபதிப்பிள்ளை உட்பட பெரும் எண்ணிக்கையிலானோர் கலந்து கொண்டனர். (அ-2)

# ஹெரோயின் கடத்திய இரண்டு பாக்.நபர்களுக்கு ஆயுள்தண்டனை-நீர்கொழும்பு உயர்நீதிமன்றம்


இலங்கைக்கு ஹெரோயின் கடத்தியதாக குற்றம் சுமத்தப்பட்ட பாகிஸ்தானியர்கள் இருவருக்கு நீர்கொழும்பு உயர்நீதிமன்ற நீதிபதி சிரான் குணரட்ன ஆயுள் தண்டனை விதித்து. தீர்ப்பளித்துள்ளார். தங்கள் மீதான குற்றச்சாட்டை இவர்கள் ஒப்புக்கொண்டதையடுத்து ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது.

1641.1 கிராம் மற்றும் 279.2 கிராம் ஹெரோயின் வைத்திருந்தார்களென்ற குற்றச்சாட்டின் பேரில் கடந்த 2009 ஆம் ஆண்டு செப்டெம்பர் மாதம் 16 ஆம் திகதி சர்வதேச பண்டாரநாயக்க விமான நீலையத்தில் அஸிஸ், ஹாஷ்ஹில் முகமட் ஆகிய இருவரும் கைது செய்யப்பட்டிருந்தனர்.

போதைப்பொருள் கடத்ியமை, வைத்திருந்தமை போன்ற குற்றச்சாட்டுக்களின் அடிப்படையில் சட்டமா அதிபர் இவர்கள் மீது வழக்குத் தொடர்ந்தார். (அ-2)

# சர்வதேசத்தின் ஒத்துழைப்பு பெறுவது நாட்டுக்கு செய்யும் துரோகமாகாது

## சரத் பொன்சேகா தெரிவிப்பு



கொழும்பு)

இடி அமீனின் மறுஜென்மம் பற்றி உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும். சர்வாதிகாரத்தை தோற்கடிக்க சர்வதேசத்தின் ஒத்துழைப்பு பெற்றுக்கொள்ளப்படும் என முன்னாள் இராணுவத் தளபதி சரத்பொன்சேகா தெரிவித்துள்ளார்.

தோள்பட்டையில் ஏற்பட்ட உபாதைக்கு சிகிச்சை பெற்றுக் கொள்ள தனியார் வைத்தியசாலைக்குச் சென்றிருந்த போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சர்வாதிகாரிகளை தோற்கடிப்பதற்கு சர்வதேசத்தின் ஒத்துழைப்பு பெற்றுக் கொள்ளப்படவுள்ளமையானது நாட்டுக்கோ அல்லது நாட்டு மக்களுக்கோ எதிராக நாம் சர்வதேசத்திற்கு செல்லவில்லை. சர்வாதிகாரிகளுக்கு எதிராகவே நாம் சர்வதேசத்தில் முறையிடுகின்றோம்.

இடிஅமீன் மறுஜென்மம் பற்றி உலகிற்கு எடுத்துச் சொல்ல வேண்டும் என்றார். (அ-2)


## கேள்விப்பத்திரம் கோரல்

யாழ்.போதனா வைத்தியசாலையில் பின்வரும் உபகரணங்கள் பராமரிப்பு செய்வதற்கு தகுதியானவர்களிடமிருந்து போதனா வைத்தியசாலைப் பணிப்பாளரினால் கேள்விகள் கோரப்படுகின்றது. கேள்விப்பத்திரங்களையும் நிபந்தனைகளையும் மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணமாக ரூபா 500/- செலுத்தி 25.12.2011 வரை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம். கேள்விப்பத்திரங்கள் 26.12.2011 மு.ப 10.00 மணிக்கு திறக்கப்படும். அத்தருணம் கேள்வி சமர்ப்பித்த ஒப்பந்தகாரர்கள் சமுகந்தரமுடியும்.

பராமரிக்கப்பட வேண்டிய உபகரணங்களின் விபரம்

1.Window type Air Conditioner
2.Split type Air Conditioner
3.Package type Air Conditioner
4.Mortuary coolers
5.Industrial Washing Machine
6.British Aid (central) Air Conditioner

Dr.Mrs.ப.பசுபதிராஜா, பணிப்பாளர்,
போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

(சி-5199)

# சனிப்பெயர்ச்சிப் பலன்கள்

## 21-12-2011 முதல் 16-12-2014 வரை




**(உத்தராடம் 2,3,4ஆம் பாதங்கள் திருவோணம்,அவிட்டம் 1,2ஆம்பாதங்கள்)**

**பத்தாமிடத்தில் சனி! முத்தான தொழில் வரும் இனி!**

**எந்தக் காரியத்தை எந்த நேரத்தில் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருக்கும் மகர இராசி நேயர்களே!**

உங்கள் இராசிநாதன் சனி என்பதால் நியாயத்திற்கும் நேர்மைக்கும் நீங்கள் துணை போவீர்கள். நிலத்தில் வியர்வை சிந்தி பாடுபட்டால் தான் மகிழ்ச்சியுடன் வாழ முடியும் என்று சொல்வீர்கள். பேச்சில் கடுமை இருந்தாலும் பழகுவதில் இனிமை இருக்கும்.

கடமைக்கு முக்கியத்துவம் கொடுக்கும் நீங்கள் கடவுள் வழிபாட்டில் முக்கியத்துவம் கொடுக்கும் பொழுதுதான் திறமையும் பளிச்சிடுகிறது. திக்கெட்டும் புகழ் பரவும் வாய்ப்பும் கிட்டுகிறது.

உங்கள் இராசிநாதனாக சனி விளங்குவதால் உங்களைப் பொறுத்தவரை சனி நல்லவரே. எனவே சனியின் சார பலமறிந்து பரிகாரங்களை தேர்ந்தெடுத்துச் செய்தால் பணவரவு பெருகும். பாராட்டும் புகழும் கூடும்.

இப்படிப்பட்ட குணங்களை பெற்ற உங்களுக்கு இந்த சனிப்பெயர்ச்சி சாதகமான பெயர்ச்சி தானா? என்பதைப் பற்றி பார்ப்போம்.

### பத்தாமிடத்திற்கு வரும் முத்தான சனி!

மார்கழி 5ஆம் திகதி முதல் துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கப் போகிறார். உங்கள் இராசிநாதன் சனி உச்சம் பெறுகிறார் அல்லவா? எனவே உற்சாகத்துடன் பணிபுரிந்து உள்ளம் மகிழும் விதத்தில் வாழ்க்கையை அமைத்துக் கொள்ளப்போகிறீர்கள். அதன் பார்வை 4,7,12 ஆகிய இடங்களில் பதிகிறது. இதன் விளைவாக சுக ஸ்தானம்,தாய், வாகனம்,களத்திரம், ஊர் மாற்றம், பயணங்கள், குடும்பச்சுமை, செலவு நடை, குழந்தைகள் நலன், இடம், பூமி விற்பனை, விலை உயர்ந்த பொருட்சேர்க்கை போன்ற வற்றிற்குரிய ஆதிபத்தியங்களில் எல்லாம் நல்ல பலன்களை அள்ளி வழங்குவார்.

சனிப்பெயர்ச்சி காலத்தில் விரயாதிபதி குரு சனியைப் பார்ப்பதால் விரயங்களே அதிகரிக்கும் என்றாலும் குருவின் பெயர்ச்சிக்குப் பின்னால் உங்கள் இராசியை ஒன்பதாம் பார்வையாக குரு பார்க்கப் போவதால் குருப்பெயர்ச்சிக்கு மேல் சனிப் பெயர்ச்சி சாதகமான பலன்களை அதிக அளவில் அள்ளி கொடுக்கலாம்.

தொடக்கத்தில் செவ்வாய் அஷ்டமத்தில் சஞ்சரிப்பதால் அதன் வக்ர கால இயக்கம் முடியும் வரை ஆரோக்கியத்திலும் கவனம் செலுத்த வேண்டிய சூழ்நிலை உருவாகும். அதிக பிரயாசை எடுக்கும் காரியங்களிலும் தாமதம் ஏற்படலாம். செவ்வாய்தோறும் அம்பிகை வழிபாடும் சனிக்கிழமைதோறும் சனீஸ்வரர் வழிபாடும் செய்துவருவதோடு காகத்திற்கும் எள் கலந்த சோறு வைப்பது நல்லது. .

அன்னதானம் மற்றும் வஸ்திர தானங்களில் அக்கறை காட்டினால் எண்ணிய காரியங்களில் எளிதில் வெற்றி கிடைக்கும்.

### மந்தன் பார்வையால் ஏற்படும் மகத்தான பலன்கள்

உங்கள் இராசிக்கு பத்தில் சஞ்சரிக்கும் சனி பகவான் 4,7,12 ஆகிய இடங்களைப் பார்க்கிறார். அதன் பார்வை பதியும் இடங்களில் இனி பல வித மாற்றங்கள் உருவாகும். குறிப்பாக சுகஸ்தானத்தில் பதிவதால் ஆரோக்கியத்தில் கூடுதல் அக்கறை செலுத்துங்கள்,ஆகாரத்தில் கட்டுப்பாடு செலுத்துவதால் ஆரோக்கியம் சீராகும். தாயின் உடல்நலத்தில் கவனம் தேவை.

7ஆம் இடத்தைச் சனி பார்ப்பதால் சுப விரயங்கள் அதிகரிக்கும். வரன்கள் வாயில்தேடி வந்து கொண்டிருக்கும். இந்த நேரத்தில் செவ்வாய் மற்றும் சனியின் அமைப்பு மற்றும் பொருத்தங்கள் வந்த வரனில் திருப்தியாக இருக்கிறதா என்பதை அறிந்து முடிவெடுப்பது நல்லது.

சனியின் பார்வை பன்னிரெண்டாமிடத்தில் பதிவதால் தனாதிபதியின் பார்வை விரய ஸ்தானத்தில் பதியும் பொழுது எதிர்பாராத சில விரயங்கள் ஏற்படும் வீடுகட்டும் முயற்சி அல்லது வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். விலை உயர்ந்த பொருட்களான தங்கம்,வெள்ளி போன்றவைகளின் சேர்க்கையும் ஏற்படும். பொதுவாக இதுபோன்ற விரத காலங்களில் சனிக்கிழமை விரதமிருந்து அனுமனை வழிபடுவது நல்லது.

### குருப்பெயர்ச்சிக்காலம்

துலாம் இராசியில் சனி சஞ்சரிக்கும் இந்த நேரத்தில் மூன்று முறை குருப்பெயர்ச்சி நடைபெறுகிறது. 17.05.2012 இல் இடப ராசியில் குரு சஞ்சரிக்கப்போகிறார். 28.05.2013 இல் மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார். 13.06.2014 இல் கடக இராசியில் குரு சஞ்சரிக்கப் போகிறார்.

இடபத்தில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை நேரடியாக உங்கள் இராசியில் பதிகி

**எந்தக்காரியத்தை எந்த நேரத்தில் செய்தால் வெற்றி கிடைக்கும் என்பதை அறிந்து வைத்திருப்பவர்கள்**

றது. அதுமட்டுமல்லாது உங்கள் இராசிக்கு 1,9,11 ஆகிய இடங்களிலும் பதிகிறது. அதன் விளைவாக பூரண வியாழ நோக்கம் ஏற்படுகிறது. கல்யாணக் கனவுகள் நனவாகும். களத்திர ஒற்றுமை பலமாகும். தந்தை வழி ஒற்றுமை கிடைக்கும்.

மிதுன இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது 2,10,12 ஆகிய இடங்களில் அதன் பார்வை பதிவதால் தொழில் வளம் மேலோங்கும். தொல்லை தந்த எதிரிகள் விலகுவர். கடல் பயண வாய்ப்பு கைகூடும்.

கடக இராசியில் குரு சஞ்சரிக்கும் பொழுது அதன் பார்வை 1,3,11 ஆகிய இடங்களில் பதிவால் பணத்தேவைகள் பூர்த்தியாகும். பிரச்சினைகளிலிருந்து விடுபடுவீர்கள். தொழிலில் இலாபம் இருமடங்காக உயரும். விலகிச் சென்ற உடன் பிறப்புக்கள் விரும்பி வந்து சேர்வர்.

குருவின் பார்வை முழுமையாக இருக்கும் இந்த நேரத்தில் நமக்கு வரம் தரும் தெய்வங்களை தேர்ந்தெடுத்து வழிபாடு செய்தால் வளர்ச்சி அதிகரிக்கும். அந்த அடிப்படையில் நாராயணப் பெருமாள், இலக்குமியையும் வழிபடுதால் வாய்ப்புகள் வாயிற்கதவை தட்டும்.

### இராகு-கேது பெயர்ச்சிக்காலம்!

02.12.2012 இல் துலாம் இராசியில் இராகுவும், மேட இராசியில் கேதுவும் சஞ்சரிக்கப்போகிறார்கள். 21.06.2014 இல் கன்னிஇராசியில் இராகுவும் மீன இராசியில் கேதுவும் உலாவரப்போகிறார்கள்.

முதல் இராகு-கேது பெயர்ச்சிக் காலத்தில் முன்னேற்றங்கள் அதிகரிக்கும். மூலதனமில்லாமலேயே செய்த தொழிலுக்கு மூலதனம் வந்து சேரும். பழைய கூட்டாளிகள் விலகுவர். தாய்வழி தனஇலாபம் கிடைக்கும். என்ன தொழில் செய்தாலும் இலாபம் வரும் என்பதை யாதகப்படி அறிந்து செய்தால் பொன்னான எதிர்காலம் அமையும்.

அடுத்த இராகு-கேது பெயர்ச்சிக்காலத்தில் நீண்ட தூரப்பயணங்கள் வந்து சேரும். நேசித்தவர்களுடன் யோசித்துப்பேசும் சூழ்நிலை உருவாகலாம். சகோதரர்கள் வழியில் ஏற்படும் சுபகாரியங்களை முன்னின்று நடத்திவைப்பீர்கள். மாரியம்மன் வழிபாடும் உகந்ததாக அமையும்.

### சனியின் வக்ரகாலம் பொற்காலமாக மாற..

துலாம் இராசியில் உச்சம் பெறும் சனி 5 முறை வக்கிரமடைந்து நிவர்த்தியாகிறார். உங்கள் இராசிநாதனாகவும் 2ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் விளங்கும் சனி வக்ரம்பெறுவது அவ்வளவு நல்லதல்ல. மருத்துவச்செலவு கூடும். குடும்பப்பிரச்சினை தலைதூக்கலாம். அனுமனை சனிக்கிழமை தோறும் வழிபட்டுவருவது நல்லது.

### 10 ஆம் இடத்துச்சனி பக்கபலமாக இருக்குமா?

இதுவரை உங்கள் இராசிக்கு 9 ஆம் இடத்தில் சஞ்சரித்துவந்த சனி பகவான் இப்பொழுது 10 ஆம் இடத்தில் சஞ்சரிக்கப் போகிறார். 10 ஆம் இடம் என்பது தொழில் ஸ்தானம் ஆகும். இராசிநாதன் தொழில் ஸ்தானத்தில் உச்சம்பெறும்போது தொழில் வளம் மேலோங்கும்.

உத்தியோகத்தில் இருப்பவர்கள், கூட்டுத் தொழில் செய்யும் வாய்ப்புக்களும் உருவாகும். இராசிநாதனின் பலத்தைப்பொறுத்தே தனித்தியங்குவதா? கூட்டாக செல்வதா என்பதை யோசித்துக் கொள்ளுங்கள்.

அந்த அடிப்படையில் பார்க்கும் பொழுது 10 ஆம் இடத்துச்சனிவந்தால் முத்தான தொழில் வாய்க்கும்.

பழையதொழிலில் இருந்து மாற்றம்

**சிவல்புரிசிங்காரம்**

காண்பீர்கள். புதிய தொழில் தொடங்கும் பொழுது குடும்பத்தில் யார் பேருக்கு தொழில் ஸ்தாபனம் வலுவாக இருக்கிறதோ, அவர்கள் பெயரில் தொழில் தொடங்குவதே நல்லது.

### தொட்டகாரியங்களில் வெற்றிபெற வழிபாடு!

செயல்ஸ்தானத்தில் சஞ்சரிக்கப்போகும் சனி, நீங்கள் செய்யும் காரியங்களை சிறப்பாக முடித்துக்கொடுக்கவும் ,வாரந்தோறும் சனீஸ்வர வழிபாட்டை மேற்கொள்வதோடு சிறப்பு வழிபாடாக ஆஞ்சநேயர் வழிபாட்டை மேற்கொள்ளவும்.

அனுமன் சந்நிதியில்
உந்தன் பெயரை உச்சரித்தோம்!
உள்ளத்தில் இராமனை நினைக்கின்றோம்!
வந்தனை செய்தே போற்றுகிறோம்.!
வரத்தை தருவாய் அனுமானே!

என்று பாடுங்கள் வளர்ச்சியில் ஏற்பட்ட தளர்ச்சி அகலும்.

(தொடரும்)

# தியானம்



ஆன்மீகம் 11

## ஆனந்தத்தின் வாசல்

கேள்வி: ஒரு சமநிலையை தங்களுக்குள் தேடும் மனிதர்களுக்கு யோகாவின் பங்களிப்பு என்னவாக இருக்க முடியும்?

சத்குரு: செய்யும் தொழிலுக்கும் தனிப்பட்ட வாழ்க்கைக்கும் இடையே ஒரு சமநிலையை நீங்கள் தேடிக் கொண்டிருந்தால், அடிப்படையாக உங்கள் வாழ்வில் ஒரு விதமான சமநிலையை நீங்கள் தேடுகிறீர்கள். உங்களுடைய தொழிலையும், உங்களுடைய தனிப்பட்ட வாழ்க்கையையும் நீங்கள் உருவாக்கியது உங்களுடைய நலவாழ்விற்காகத்தான். எனவே அடிப்படையாக அது நிகழ வேண்டும் இல்லையா?

உங்களுடைய நலவாழ்வு என்பது என்ன? உடல்நிலையில் ஆரோக்கியம், மனரீதியில் மகிழ்ச்சியாகவும் சந்தோஷமாகவும் இருப்பது, உணர்ச்சி ரீதியாக அன்பாகவும் அக்கறையுடனும் இருப்பது, சக்திரீதியாக தீவிரமாகவும் உயிர்ப்போடும் இருப்பது. இது தான் நலவாழ்வு என்பது. இது இயல்பாகவே நடக்கும்.

யோகா அறிவியல் முழுமையும், யோகாவின் தொழில்நுட்பம் முழுமையும், யோகாவின் வழிமுறைகள் அனைத்தும் இதை நோக்கியே வடிவமைக்கப்பட்டிருக்கிறது. உங்கள் உடலும், மனமும், உணர்ச்சிகளும், சக்திகளும் அதன் சிறந்த தன்மையில் செயல்படும் விதமாக உங்களுக்குள் ஒரு சரியான வேதியியலை உருவாக்குவதுதான் அதன் நோக்கம். அப்படி இருக்கும் போது நலவாழ்வு என்பது நிச்சயமாக நிகழும். உள்நிலையில் நீங்கள் நலமாக இருக்கும்போது, வெளிச்சூழ்நிலையை உங்கள் திறமைக்கு ஏற்ற விதத்தில் சிறப்பாக கையாள்வீர்கள்.

கேள்வி: பணிச்சுமை அதிகமாய் இருக்கும் ஒரு மனிதன் வாழ்வில் யோகா எப்படி இடம் பெறும்?

சத்குரு: வெளிச்சூழ்நிலையில் சிறிதுகூட மாற்றம் செய்யத் தேவையில்லை. உள்நிலையில்தான் மாற்றம் தேவை. எனவே எப்போதாவது ஒருமுறை சந்தோஷமாக இருக்கும் நிலையிலிருந்து எப்போதுமே சந்தோஷமாக இருக்கும் நிலைக்கு செல்ல நீங்கள் விரும்புகிறீர்களா? நீங்கள் ஒரு தொழில் நிறுவனத்தை நிர்வகித்தால்கூட அப்படி இருக்கத்தானே விரும்புகிறீர்கள்? அல்லது இது தொழில்நிலை வாழ்க்கைக்கு எதிரானதா? ஒரு நாளில் 24 மணி நேரமும் நீங்கள் அமைதியாக இருக்க விரும்புகிறீர்களா? நீங்கள் ஒரு தொழிலை நடத்த விரும்பினால் அதில் பணிபுரிபவர்கள் அமைதியாகவும், சந்தோசமாகவும் இருந்தால் அது எப்போதுமே சுலபமானதாக அமையும். இது மிகவும் முக்கியமான அம்சம் என்று நீங்கள் கருதவில்லையா? நூற்றுக்கணக்கான மனிதர்களுடன் இணைந்து தினமும் செயல்படும் போது நீங்கள் அமைதியாகவும், மகிழ்ச்சியாகவும் இருப்பது மிகமிக முக்கியமானது. இல்லாவிட்டால் உங்களோடு இணைந்து பணிபுரிவதை யாரும் விரும்பமாட்டார்கள். உங்களோடு இணைந்து பணிபுரிவதை அவர்கள் மகிழ்ச்சியாய் அனுபவிக்காதபோது அவர்களின் சிறந்த தன்மைகள் வெளிப்பட வாய்ப்பில்லை. அவருடைய சிறந்த பங்களிப்பை அவர்கள் உங்களுக்காக செய்யாத போது உங்கள் வாழ்க்கை நரகமாகத்தான் இருக்கப்போகிறது.

உங்கள் தொழில் மிகச்சரியாக நடக்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் முதலில் உங்களுக்குள் எப்படி நடந்து கொள்ளவேண்டும் என்பதை நீங்கள் பார்க்க வேண்டும். இந்த உள்நிலை என்பது மிகச்சரியாக நடைபெற வேண்டும். உங்கள் மனதை உங்களால் நிர்வகிக்க முடியாவிட்டால் நூறு பேரை எப்படி நிர்வகிக்கப் போகிறீர்கள்? ஈஷா யோகாவின் நோக்கமே உங்கள் வாழ்க்கையையே யோகத்தன்மையாக்குவதுதான். நீங்கள் எப்படி சுவாசிக்கிறீர்கள், எப்படி அமர்கிறீர்கள், எப்படி நடக்கிறீர்கள், எப்படிப் பணிபுரிகிறீர்கள் அனைத்திலும் யோகத்தன்மை இருக்கும். வேறு வார்த்தைகளில் சொல்ல வேண்டுமானால் உங்கள் வாழ்க்கையையே வளர்ச்சிக்கான வாய்ப்பாக உருவாக்குவது. உங்கள் ஆன்மீகம் தனியாகவும், உங்கள் வேலை தனியாகவும் இருக்குமானால் நீங்கள் உங்களுக்கும், மற்றவர்களுக்கும் தொடர்ந்து பிரச்சினை உருவாக்குபவராகத்தான் இருப்பீர்கள். உங்கள் வாழ்க்கையே ஆன்மீகத்தன்மையாக இருக்க வேண்டும். நீங்கள் அலுவலகத்திற்குச் செல்லும் போது ஆன்மீகத் தன்மையாக இருக்கவேண்டும். உங்கள் குடும்பத்தில் இருக்கும் போது ஆன்மீகமாக இருக்க வேண்டும். தெருவில் நடந்து செல்லும் போது ஆன்மீகமாக, அமர்ந்திருப்பதும், சுவாசிப்பதும் ஒரு ஆன்மீகமாக இருக்க வேண்டும். இத்தன்மையை உங்களுக்குள் கொண்டு வராவிட்டால், எப்போதுமே பிரிவு என்பது இருக்கத்தான் செய்யும். பிரிவு என்பது இயல்பானது அல்ல. பிரிவு என்பது மனிதன் உருவாக்கியது. அதனால்தான் போராட்டம் இருந்து கொண்டேயிருக்கிறது. உங்கள் உடலையும், உயிரையும் பிரிக்க முடியுமா? அவைகள் இணைந்தே இருக்கின்றன. அவை இணைந்தே வந்திருக்கின்றன. எனவே நீங்கள் அவைகளை முழுமையான தன்மையாகக் கையாளுங்கள்.

(தொடரும்)

சத்குரு ஜக்கி வாசு தேவ்

# ஒன்பது நூற்றாண்டுகளுக்கு முன்பிருந்து முஸ்லிம் புலவர்கள் உயர்த்திய தமிழ்

01

இந்த தலைப்பில் பல நூறு வரலாற்றுப் பதிவுகளையும் தகவல்களையும் திரட்டித்தர முடியும். ஆயிரம் பக்கங்களுக்கு மேலாக நூலொன்றையும் உருவாக்க முடியும். உருவாக்கப்பட்டுமுள்ளது. அவை நான்கு தொகுதிகளாக 1986-90-94-96 களில் வந்துள்ளன. இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாறு எனவும் மகுடமிடப்பட்டுள்ளன. அப்பெரு நூலின் பிதாமகனார் ஓர் இலங்கை முஸ்லிம்!

அவர் யார், எவர் என்பதை சற்று தாமதித்தே வெளிச்சமிட விரும்புகிறேன்.

இப்பாரிய ஆய்வுத்தொகுப்பு நூல் வருவதற்கு முன்பாக சிறு சிறு நூல்களாக 'இஸ்லாமும் தமிழும்', 'இஸ்லாம் வளர்த்த தமிழ்' 'இஸ்லாமிய தமிழ்த் தொண்டு' 'இஸ்லாமும் இன்பத்தமிழும்' என்ற தலைப்புகளில் சிலர் பங்களிப்புகள் செய்துள்ளனர்.

உண்மையில் முஸ்லிம்கள் ஆற்றிய தமிழ்ப்பணிகள் குறித்து கடந்த நூற்றாண்டின் பிற்பகுதி வரையில் மறைக்கப்பட்டும் மறுதலிக்கப்பட்டுமே வந்துள்ளன.

பேரறிஞர், வித்துவான் கி.வா ஜகந்நாதன் 1960 களில் "தமிழ்த் தொண்டாற்றிய முஸ்லிம்களைக் கண்டு பிடித்து அவர்களை அறிமுகப்படுத்த வேண்டிய பொறுப்பும் கடமையும் முஸ்லிம்களுக்கே உண்டு. எங்களுக்கில்லை!" என்றுரைத்து முஸ்லிம் புத்திஜீவிகளை உசுப்பிவிட்டதுண்டு.

கி.வா.ஜகந்நாதனின் கருத்தை வேதவாக்காகக் கொண்டு, குமாரசாமிப்புலவர் தனது 'தமிழ்ப்புலவர் சரித'த்திலும் பிரம்மஸ்ரீ கணேசையர் 'தமது ஈழத்தமிழ்ப்புலவர் சரித'த்திலும் இந்தியா, இலங்கையில் தமிழ் வளர்த்த முஸ்லிம்களைச் சொல்லலாம்.

பேராசிரியர் வி.செல்வநாயகமோ அப்படிச் செய்யாமல் தமது 'தமிழ் இலக்கிய வரலாறு' ஆய்வுநூலில் சிலவற்றைத் தெரிவித்து ஒன்றரைப் பக்கத்தில் முடித்துக்கொண்டார். ஆனால், அந்தக் குறுகிய பக்கத்திலும் ஒரு முத்திரை பதிக்கப்பட்டிருந்தது இப்படி:

இஸ்லாமிய தமிழ் இலக்கியங்கள் பிறமதக் கண்டனங்கள் அற்றவை.

**"கொழும்பில் நடைபெற்ற சர்வதேச தமிழ் எழுத்தாளர் மாநாட்டில் சமர்ப்பிக்கப்பட்ட ஆய்வுக் கட்டுரை"**

பிறரைத் தம்வயப்படுத்தும் சமயப் பிரசாரங்கள் இல்லாதவை.

திரு செல்வநாயகம் அவர்களுக்கு இந்த சில வரிகளுக்காக நிச்சயம் நன்றி தெரிவிக்க வேண்டியிருக் கிறது.

ஆனால், கூட்டுமொத்தமாக மாபெரும் நன்றிக்கடனை முஸ்லிம் சமுகம் செலுத்தவேண்டியது பிறை அன்பன் என அவதாரம் எடுத்து சில பல சேவை செய்த ஒரு தமிழ்க்கலாநிதிக்கு!

1978இல் திருச்சிப்பேராசிரியர் நயினார் முகம்மதுவைப் பதிப்பாசிரியராகக் கொண்டு இஸ்லாமியத்தமிழ் இலக்கியக் கழகம் வெளியிட்ட 'இஸ்லாமியத் தமிழ் இலக்கியக் கட்டுரைக்கோவை' தொகுப்பில் 154 தொடக்கம் 155 ஆம் பக்கங்களில் அந்தப் பிறை அன்பன் இப்படி எடுத்துக்காட்டுகிறார்.

"எண்ணிறந்த இஸ்லாமியப் புலவர்கள் நூல்கள் பலவற்றைத் தமிழிலே படைத்திருக்கின்றனர். ஆனால், இவ்விலக்கியங்களைப் பற்றி பலருக்குத் தெரியாது. சீறாப்புராணம் போன்ற சில நூல்கள் தமிழ் உலகிற்கு அறிமுகப்படுத்தப்பட்டிருக்கின்றனவே ஒழிய தமிழ்த் தொண்டிலே ஊறித் திளைத்த நூற்றுக்கணக்கான முஸ்லிம் புலவர்களின் படைப்புக்கள் அறிமுகப் படுத்தப்படவில்லை"

அவர்கள் சைவரும் வைணவரும் பாடிய பிரபந்தங்களைப் பாடுவதோடு நின்றுவிடவில்லை. புதிய பிரபந்த வகைகளைத் தமிழில் புகுத்தித் தமிழன்னையை பொலிவுடன் வாழச் செய்திருக்கின்றனர்.

இவ்வாறு குறித்துள்ள அவர், ஒரு முஸ்லிம் அல்லர். எம் காலத்தில் சிறப்புற்றுத் தொண்டாற்றி மறைந்திருக்கும் வித்தியானந்தன் அவர்களே அப்பெருமகன்.

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக துணைவேந்தராக இருந்த கலாநிதி சு. வித்தியானந்தன் எழுதிய இலக்கியத் தென்றல் என்ற நூல் 1953 இல் வெளிவந்தது. இந்நூலில் 'இஸ்லாமியர் தமிழ்த்தொண்டு' என்று ஒரு அதிகாரம் உண்டு. 20 பக்கமுள்ள இந்த அதிகாரம்தான் இஸ்லாமியத் தமிழ் இலக்கிய வரலாற்றுக்கு இலங்கையில் கிடைத்த முதல் அறிமுகம் ஆகும்.

பேராசிரியர் சு.வித்தியானந்தன் அவர்கள் முஸ்லிம் இலக்கியங்கள் பற்றிய பயன்தரக்கூடிய ஆய்வுகளை நிகழ்த்தியமைக்காகவும் யாழ் பல்கலை துணைவேந்தராக நியமிக்


மானா மக்கீன்

கப்பட்டமை குறித்தும் ஒரு பாராட்டு விழா 1979 இல் யாழ் முஸ்லிம்கள் நடத்தியதை இந்த இடத்தில் பெருமையாக நினைவுகூறப்படல் வேண்டும்.

(தொடரும்)

# சுவைமிக்க காளான் உணவுகள்

## அறுவடை செய்யப்பட்ட, போசணைப் பொருட்கள் செறிந்த காளான்களில் இருந்து தயாரிக்கக் கூடிய சுவைமிகு உணவு வகைகள்



### காளான் சம்பல்

தேவையான பொருட்கள்:-

★ காளான் -500 கிராம்
★ தக்காளிப்பழம்- 2
★ பெரிய வெங்காயம் -2
★ முதல் தேங்காய்ப்பால் -2 மே.க.
★ அரைத்த கடுகு -2 தே.க.
★ மிளகு தூள் - 1 தே.க.
★ தேசிச்சாறு -1 மே.க.
★ உப்பு - 5 கிராம்

தயாரிக்கும் முறை

★ காளான்களை நன்கு கழுவி 5 நிமிட நேரம் நீராவியில் அவித்துக்கொள்ளவும்.

★ ஒரு அங்குல அளவான துண்டாக அதனை வெட்டிக்கொள்ளவும்.

★ ஏனைய பொருட்களான தக்காளி, பெரிய வெங்காயம், அரைத்த கடுகு, மிளகு தூள், உப்பு, முதல் தேங்காய்ப்பால் என்பவற்றுடன் தேசிச்சாற்றையும் சேர்த்து சம்பல் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

குறிப்பு:-

நீராவியில் அவித்த காளானை வெட்டி கெக்கரிக்காய், தக்காளி என்பவற்றுடன் சேர்த்தும் சம்பல் செய்யலாம்.

இச் சுவையான சம்பல் 6 தொடக்கம் 8 பேருக்கு போதுமானது.

### காளான் கலந்த மரக்கறி ரொட்டி

தேவையான பொருட்கள்

★ காளான் -250 கிராம்
★ லீக்ஸ் -100 கிராம்
★ தக்காளிப்பழம் -100 கிராம்
★ கோவா - 100 கிராம்
★ உருளைக்கிழங்கு -100 கிராம்
★ கோதுமை மா - 250 கிராம்
★ அப்பச்சோடா - 1/2 தே.க.
★ தே.எண்ணெய் / மாஜரீன் - 2 மே.க.
★ மிளகாய்த்தூள் - 1 மே.க.
★ உப்பு - 3 கிராம்

தயாரிக்கும் முறை:

★ கோதுமைமாவிற்கு உப்பு, அப்பச்சோடா, நீர் என்பவற்றை கலந்து நன்கு பிசைந்து கொள்ளவும்.

★ அதற்கு மாஜரீன் அல்லது தேஎண்ணெய் சேர்த்து மீண்டும் பிசைந்து உருண்டைகளாக பிடித்து இரு மணிநேரம் வைக்கவும்.

★ காளானை நன்கு கழுவி நீராவியில் அவித்து சிறு துண்டுகளாக வெட்டிக்கொள்ளவும்.

★ கிழங்கு, தக்காளி தவிர்ந்த ஏனைய பொருட்களையும் சிறு துண்டுகளாக வெட்டி காளானுடன் கலந்து கொள்ளவும்.

★ அக்கலவையை சிறிதளவு எண்ணெயில் வதக்கிக் கொள்ளவும்.

★ இறுதியில் அவித்த கிழக்கு, தக்காளி என்பவற்றை சேர்த்தல் வேண்டும்.

★ உருண்டையாக தயாரித்த மாவை எண்ணெய் பூசிய தட்டின்மேல் வைத்து வட்டமாக அழுத்தி அதன் மத்தியில் காளான் சேர்ந்த மரக்கறி கலவையை வைத்து விரும்பிய வடிவத்தில் மடித்து அதனை சூடான தோசைக் கல்லின் மேல் வேகவைத்து எடுத்தால் காளான் கலந்த மரக்கறி ரொட்டி தயாராகி விடும்.

### காளான் கட்லட்

தேவையான பொருட்கள்:

★ காளான் - 300 கிராம்
★ சின்ன வெங்காயம் -8
★ பச்சை மிளகாய் - 4
★ உருளைக்கிழங்கு - 2
★ மாசித்தூள் - 1 தேக்கரண்டி
★ மிளகுதூள் -1 தே.க.
★ உப்பு - 5 கிராம்
★ தே.எண்ணெய் - 1/2 லீற்றர்
★ காய்ந்த பாண்தூள் - 1 கப்
★ கோதுமை மா - 50 கிராம்

தயாரிக்கும் முறை:

★ காளானை கழுவி நீராவியில் அவித்துக் கொள்ளவும்.

★ அவித்த காளானை சிறு துண்டுகளாக வெட்டி உப்பு, மிளகுதூள் என்பவற்றை சேர்த்து எண்ணெயில் வதக்கிக்கொள்ளுங்கள்.

★ இக்கலவைக்கு பச்சை மிளகாய், வெங்காயம், மாசித்தூள், அவித்து பிசைந்த கிழங்கு ஆகியவற்றுடன் சிறிதளவு தேசிப்புளியும் சேர்த்துக் கொள்ளல் வேண்டும்.

★ இக் கலவையை உருண்டையாக பிடித்து செறிந்த கோதுமைமா கரைசலில் தோய்த்து பாண்தூளில் பிரட்டி சூடான எண்ணெயில் பொரித்தெடுத்துக்கொள்ளல்.

★ 12 தொடக்கம் 15 கட்லட் வரை தயாரிக்கலாம்.

### காளான் சான்ட்விச்

தேவையான பொருட்கள்:

★ காளான் - 500 கிராம்
★ கோதுமை மா - 100 கிராம்
★ மாஜரீன்/ பட்டர் - 100 கிராம்
★ சலாட் இலை - 100 கிராம்
★ தக்காளி - 250 கிராம்
★ பெரிய வெங்காயம் -200 கிராம்
★ கடுகு தூள் -1 தேக்கரண்டி
★ மிளகுதூள் - 1 தேக்கரண்டி
★ மஞ்சள் தூள் - 1 தேக்கரண்டி
★ உப்பு - 5 கிராம்
★ பாண் - 1 இறாத்தல்

தயாரிக்கும் முறை

★ கோதுமைமாவினுள் உப்பு, நீர் என்பவற்றை சேர்த்து தடித்த கரைசல் தயாரித்துக்கொள்ளல்

★ துப்புரவு செய்து வெட்டிய காளான் துண்டுகளை கோதுமைமா கரைசலில் தோய்த்து பொன்னிறமாக பொரித்தல்

★ கடுகு, மிளகுதூள், உப்பு என்பவற்றை மாஜரீனுடன் கலந்து மெல்லிய பாண் துண்டிற்கு இக்கலவையைப் பூசுதல்.

★ பாண் துண்டு இரண்டிற்கிடையில் சலாது, இலை, தக்காளிப்பழதுண்டுகள், வெங்காயத்துண்டுகள், பொரித்த காளான் என்பவற்றை வைத்துப் பரிமாறலாம். (முற்றும்)

**கி.சிறீபாலசுந்தரம்**
பிரதி விவசாயப் பணிப்பாளர் (விரி)
யாழ்ப்பாணம்.

# ஐ.நா.வினால் எமது நாடு தொடர்பில் தீர்மானங்களை எடுக்க முடியாது

## சஜின்வாஸ் குணவர்த்தன எம்.பி.சவால்

(கொழும்பு)

ஐ.நாவின் செயலாளர் இந்த நாட்டின் ஜனாதிபதியோ, பிரதமரோ, எதிர்க்கட்சியின் தலைவரோ இன்றேல் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவரோ அல்ல. அவரினால் எமது நாடு தொடர்பில் தீர்மானங்களை எடுக்க முடியாது என்று ஆளும்கட்சியின் எம்.பியான சஜின்வாஸ் குணவர்த்தன தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற வெளிவிவகார அமைச்சு மீதான குழுநிலை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், புலிகள் அழிக்கப்பட்ட போதிலும் அவர்களின் கோஷங்கள் இன்னுமே ஒழியவில்லை. கோஷங்கள் மென்மேலும் வலுப்பெற்றுள்ளன. தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினர் தவறான வழியில் பயணித்துக் கொண்டிருக்கின்றனர். அரசுக்கும் புலம்பெயர் வாழ் மக்களுக்கும் இடையிலான கயிற்றிலேயே தமிழ்க் கூட்டமைப்பு நின்று கொண்டிருக்கின்றது. அதனால் அவர்கள் விரைவில் தடம்புரள்வார்கள். தமிழ் மக்களுக்காக குரல் கொடுக்காமலே சர்வதேசத்தை நோக்கி ஆர்ப்பரிக்கின்றனர் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

எனினும் இங்குள்ள சிலரே வெளிநாடுகளுக்கு ஓடிச் சென்று எமது நாடு தொடர்பில் பொய்யான தகவல்களை வழங்கி வருகின்றனர். இது தொடர்பில் இலங்கையரான நாங்களே வெட்கி தலைகுனிய வேண்டும்.

எம்மை தனித்து சுதந்திரமாக செயற்படுவதற்கு இடமளிக்குமாறு ஏகாதிபத்திய நாடுகளிடம் கேட்டுக் கொண்டுள்ளன. இறைமையுள்ள நாடு என்ற வகையில் எமது விடயத்தில் ஏனையோர் தலையிட முடியாது. எமது பிரச்சினைகளை நாமே தீர்ப்போம். தனித்தே செயற்பட நாம் விரும்புகின்றோம் என்பதுடன் சம்பந்தனின் பேச்சு தமிழ் மக்களுக்கானது அல்ல சர்வதேசத்துக்கு உரித்தாகும் என்றார். (அ-2)

# சட்டவிரோதமாக அமெ.நுழைய முற்பட்ட இலங்கையர்கள் இருவர் தடுத்துவைப்பு

(கொழும்பு)

இலங்கையர்கள் இருவரை சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்குள் அழைத்துச் செல்ல முற்பட்ட இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இரண்டு இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்களை கார் ஒன்றில் சட்டவிரோதமான முறையில் அமெரிக்காவிற்குள் அழைத்துச் செல்ல முற்பட்ட போது அந்நாட்டு எல்லைப் பாதுகாப்பு பிரிவினர் குறித்த இருவரையும் கைது செய்துள்ளனர்.

ஜுவான் லாமாஸ் மற்றும் கார்சியா அமாடோர் ஆகிய இருவருமே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

இருக்கைப்பட்டி சட்ட மீறலுக்காக வாகனத்தை பொலிஸார் நிறுத்தியதாகவும் வாகனத்தில் இரண்டு இலங்கைப் புகலிடக் கோரிக்கையாளர்கள் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையர்களை அமெரிக்காவிற்குள் அழைத்துச் சென்ற இருவருக்கும் எதிராக வழக்குத் தொடரப்படவுள்ளதாகவும் இருவரையும் தடுப்பு காவலில் வைக்குமாறும் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

இரண்டு புகலிடக் கோரிக்கையாளர்களும் சாட்சிகள் என்ற ரீதியில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

(அ-2)

# 2013 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் இணைய வசதி வழங்கப்படும்

## அரசாங்கம் அறிவிப்பு

(கொழும்பு)

எதிர்வரும் 2013 ஆம் ஆண்டளவில் அனைவருக்கும் இணைய வசதி வழங்கப்படும் என அரசாங்கம் அறிவித்துள்ளது.

நாட்டின் சகல வீடுகளுக்கும் இணைய வசதி ஏற்படுத்திக் கொடுக்கப்படும் என தொலைத்தொடர்பு அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வரவு செலவுத்திட்ட மூன்றாம் வாசிப்பு விவாதங்களில் கலந்து கொண்ட போது அவர் மேற்கொண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

சகல வீடுகளுக்கும் ப்ரோட்பாண்ட் இணைப்பை வழங்க ஸ்ரீலங்கா ரெலிகொம் நடவடிக்கை எடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

66 ஆயிரத்து 272 ப்ரோட்பாண்ட் இணைப்புக்கள் இதுவரையில் வழங்கப்பட்டுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார்.

நாட்டில் 2 இலட்சத்து 76 ஆயிரத்து 950 இணைய பாவனையாளர்கள் இருப்பதாகத் தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் தகவல் தொழில்நுட்ப பூங்கா ஒன்று உருவாக்கப்படவுள்ளதாகக் குறிப்பிட்டுள்ளார். இந்த நிலையில் நாட்டின் சகலருக்கும் இணைய வசதியை ஏற்படுத்திக் கொடுக்க முடியும் என அமைச்சர் நம்பிக்கை வெளியிட்டுள்ளார்.

இதேவேளை, நாட்டில் இல்ட்சக்கணக்கானவர்களுக்கு இன்னமும் மின்சார இணைப்புக்களே வழங்கப்படவில்லை எனவும் 2013 இல் சகலருக்கும் இணையம் என்ற திட்டம் நடைமுறைச் சாத்தியமற்றது எனவும் எதிர்க் கட்சிகள் சுட்டிக்காட்டியுள்ளன. (அ-2)

# நுகர்வோர் விவகார அமைச்சரின் நடவடிக்கைக்கு தே.சு.மு.எதிர்ப்பு

நுகர்வோர் விவகார அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோவின் நடவடிக்கைகளுக்கு ஆளும் கட்சியில் அங்கம் வகிக்கும் தேசிய சுதந்திர முன்னணி எதிர்ப்பை வெளியிட்டுள்ளது.

விவசாயிகளுக்கும் சிறிய வர்த்தகர்களுக்கும் இடையில் தேவையற்ற மோதல்கள் ஏற்பட அரசாங்கம் காரணமாகிவிடக் கூடாது என தேசிய சுதந்திர முன்னணியின் சிரேஷ்ட உறுப்பினர் பியசிறி விஜேநாயக்க தெரிவித்துள்ளார்.

பொதுமக்களுடன் எவ்வாறான உறவுகளைப் பேண வேண்டும் என்பது குறித்து அமைச்சர் ஜோன்ஸ்டன் ஜனாதிபதியிடம் பாடம் கற்றுக்கொள்ள வேண்டும்.

அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஐக்கிய தேசியக் கட்சியின் மன நிலையிலிருந்து கடமையாற்றுகின்றார். கடும்போக்குடன் மக்களை வழிநடத்துவது பிழையானது என அவர் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் மன நிலையில் இருந்து மக்களுக்கு சேவையாற்ற வேண்டுமென அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

# வடக்கு கிழக்கு இணைக்கப்படுமாயின் அரசாங்கத்தைவிட்டு வெளியேறுவேன்

## பிரதியமைச்சர் ஹிஸ்புல்லா தெரிவிப்பு



வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைவதற்கு அரசாங்கம் உடன்படுமாக இருந்தால் நான் அரசாங்கத்தை விட்டு வெளியேறுவேன் என சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரப் பிரதியமைச்சர் எம்.எல்.ஏ.எம். ஹிஸ்புல்லா தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் மற்றும் காத்தான்குடியின் அபிவிருத்தி தொடர்பாக மக்களுக்கு விளக்கும் பொதுக்கூட்டம் ஒன்று அண்மையில் மாலை ஹிஸ்புல்லாஹ் மண்டபத்தில் இடம்பெற்றது.

நகரசபைத் தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்பர் தலைமையில் இடம்பெற்ற இக்கூட்டத்தில் உரையாற்றியபோதே பிரதியமைச்சர் இவ்வாறு கூறினார். இங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

வடக்கு கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டுள்ளன. இரு மாகாணங்களும் இணைந்திருந்தபோது மூவின மக்களும் முட்டிமோதி இரத்த ஆறே ஓடியது. கிழக்கு பிரிக்கப்பட்டதையடுத்து இன்று அந்தமக்கள் நிம்மதியாக வாழ்ந்து கொண்டிருக்கின்றனர்.

வடக்கு கிழக்கை இணைப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தையில் ஈடுபட்டு வருகின்றனர். அவ்வாறு இணைப்பதற்கு உடன்பட்டால் இந்த அரசாங்கத்தை விட்டு வெளியேறுவோம்.

வடக்கு கிழக்கு இணைவது தொடர்பான எந்தவொரு பேச்சுவார்த்தையிலும் அரசாங்கம் பங்குகொள்ளக்கூடாது.

கிழக்கு மாகாணத்தில் இருக்கும் மூவின மக்களும் கிழக்கை நிர்வாகம் செய்து செழிப்புடன் இந்த மாகாணத்தை அபிவிருத்தி செய்து கொண்டிருக்கின்றோம்.

வடக்கு கிழக்கு மாகாணங்களை ஒரு போதும் இணையவிடமாட்டோம் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினருக்கும் சர்வதேச சமூகத்தினருக்கும் கூறிவைக்க விரும்புகின்றோம்.

அத்துடன் ஜனாதிபதிக்கும் அரசதரப்புக்கும் இதைத் தெளிவாகச் சொல்லி வைத்துள்ளோம் என்றும் கூறினார். (அ-2)

# வடமேல் மாகாண உறுப்பினர்கள் பயணம்

வடமேல் மாகாண சபை உறுப்பினர்கள் 25 பேர் இன்று வியாழக்கிழமை இந்தியாவில் புதுடில்லிக்கு விஜயம் செய்யவுள்ளனர்.

வடமேல் மாகாண முதலமைச்சர் அதுல விஜேசிங்க தலைமையில் இந்தியாவுக்கு செல்லும் மாகாண சபை உறுப்பினர்கள் குழு அங்கு 5 நாட்கள் தங்கியிருப்பர் என தெரிவிக்கப்படுகிறது.

இச்சுற்றுச் பயணத்தின் போது அபிவிருத்தி தொடர்பான பல விடயங்களை பார்வையிடுவதுடன் இந்திய மாநில அரசியல் பிரமுகர்கள்பலரையும்சந்தித்து கலந்துரையாடவுள்ளதாக தெரிவிக்ககப்பட்டுள்ளது. (அ-2)

# கிளி.யில் தொற்றுநோய் பரவக்கூடிய அபாயம்

## சுகாதாரத்தைப் பின்பற்ற அறிவுரை

வன்னியில் பெய்துவரும் பெருமழை வெள்ளப்பெருக்கையடுத்து பல இடங்களில் தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏனைய நோய்கள் பரவுவதும் பொதுமக்கள் மத்தியில் அதிகரித்துக் காணப்படுகின்றது.

இதேவேளை என்றுமே இல்லாத வகையில் நுளம்புப் பெருக்கமும் அதிகரித்துள்ளது. துணுக்காய், மல்லாவி, இனிச்சயன்குளம், கல்வயல், பாண்டியன்குளம் பகுதிகளில் திடீரென வயிற்றோட்ட நோய் அதிகரித்துக் காணப்படுகிறது.

இதனைத் துணுக்காய் சுகாதார வைத்திய அதிகாரி உறுதிப்படுத்தியுள்ளார்.

பொதுமக்கள் கொதிக்கவைத்து ஆறிய நீரை அருந்துமாறும் சமையலில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுமாறும் சுற்றுச்சூழலை துப்புரவாக வைத்திருக்குமாறும் சுத்தமான நீரை சமையலுக்கும் ஏனைய தேவைகளுக்கும் பயன்படுத்துமாறும் சுகாதார வைத்திய அதிகாரி துணுக்காய் பகுதி மக்களுக்கு அறிவுறுத்தியுள்ளார்.

வன்னியில் அதிகரித்துக் காணப்படும் நுளம்புப் பெருக்கத்தையடுத்து மலேரியா நோய் ஏற்படும் சாத்தியம் காணப்படுகிறது. கடந்த யுத்தகாலத்தில் இருந்த சுகாதார நடைமுறை காரணமாக இலங்கையில் மலேரியா நோய் இல்லாத பகுதியாக கிளிநொச்சி மாவட்டம் விளங்கியது. (அ-2)

# கட்டணங்களை அதிகரிக்க கோருகின்றது தனியார் பஸ் உரிமையாளர் சங்கம்

## ஜனாதிபதிக்கு கடிதம் அனுப்பி வைப்பு

பேருந்து கட்டணங்களை அதிகரிக்குமாறும் டீசல் மானியத்தை அதிகரிக்குமாறும் வலியுறுத்தியும் இல்லாவிட்டால் நாடளாவிய ரீதியில் பகிஷ்கரிப்பை மேற்கொள்ள போவதாகவும் தெரிவித்து ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவுக்கு தனியார் பேருந்து உரியையாளர்கள் சங்கம் நேற்று முன்தினம் கடிதமொன்றை அனுப்பியுள்ளது.

தமது கோரிக்கையை முன்வைத்து இன்றுடன் ஒரு மாதம் நிறைவடைகின்ற போதிலும் இதுவரை தமக்கு பதில் எதுவும் கிடைக்கவில்லை என அச்சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.

ஒருமாதகாலத்தில் நிறைவேற்றுவதாக உறுதியளிக்கப்பட்ட வாக்குறுதிகளை நிறைவேற்ற தனியார் போக்குவரத்து அமைச்சு தவறிவிட்டது என தனியார் பேருந்து உரிமையாளர் சங்கம் குற்றம் சுமத்தியுள்ளது.

சட்டவிரோத அனுமதிப்பத்திரங்களை வழங்க வேண்டாம் என உயர் நீதிமன்ற ம் உத்தர விட்டபோதிலும் இப்போதும் சட்ட விரோத அனுமதி பத்திரங்கள் வழங்கப்படுவதாகவும் சங்கம் தெரிவித்துள்ளதுடன் சட்டவிரோத அனுமதிப்பத்திரம் தொடர்பாக பல உரிமையாளர் ஒருவரை தாக்கியதாகக் கூறப்படும் மேல்மாகாண சபை முதலமைச்சர் பிரசன்ன ரணதுங்க தொடர்பாக விசாரணை நடத்துமாறும் கோரியுள்ளது. (அ-2)

# வவு. ஊழியர்களுக்கான நடமாடும் சேவை

(வவுனியா)

வவுனியா மாவட்ட தொழில் திணைக் களத்தால் ஊழியர்களுக்கான நடமாடும் சேவை நாளை சனிக்கிழமை நடத்தப்படவுள்ளது.

வவுனியா மாவட்டத்தில் தொழில் திணைக்களத்தால் 2011 நவம்பர் மாதம் 23, 24, 26ஆம் திகதிகளில் நடத்தப்பட்ட நடமாடும் சேவையில் ஊழியர்களின் கைவிரல் அடையாளம் பெறல் மற்றும் தேசிய அடையான அட்டையின் விம்பம் மற்றும் அங்கத்தவர்களின் புகைப்படம் எடுக்கும் திட்டத்தின் கீழ் பதிவு செய்ய தவறிய ஊழியர்களுக்கே மீண்டும் தொழில் திணைக்களத்தால் நடமாடும் சேவை ஆரம்பிக்கப்படவுள்ளது.

நேற்று வவுனியா மாவட்ட தொழில் திணைக் களத்தில் காலை 8 மணி தொடக்கம் மாலை 4 மணிவரை இந்த நடமாடும் சேவை நடைபெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில் முன்பு பதிவுகளை மேற்கொள்ளாதவர்கள் பதிவுகளை மேற்கொள்ள் முடியும் எனவும் பதிவுகளை மேற்கொள்ளவரும் போது தொழில் தருனரின் கடிதமும் அடையாள அட்டையும் எடுத்து வரும்படியும் கோரப்பட்டுள்ளது. (அ-2)

# நவநீதம்பிள்ளையின் வரவு முக்கியத்துவம் வாய்ந்தது

## அமைச்சர் சமரசிங்க தெரிவிப்பு

ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை 2012 ஆம் ஆண்டில் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வார் என தகவல்கள் தெரிவிக்கின்றன.

2011 ஆம் ஆண்டில் நவநீதம்பிள்ளையை இலங்கைக்கு வருமாறு அரசாங்கத் தரப்பினால் அழைப்பு விட்டிருந்ததாக தகவல்கள் தெரிவித்தன. எனினும் நவநீதம்பிள்ளை 2012 ஆண்டிலேயே விஜயம் செய்வதாக தெரிவித்துள்ளார்.

இதேவேளை நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதற்கான திகதிகள் இன்னும் தீர்மானிக்கப்படவில்லை என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரும் மனித உரிமைகள் தொடர்பான ஜனாதிபதியின் விசேட தூதுவருமான மஹிந்த சமரசிங்க தெரிவித்தார்.

தற்போதைய நிலைமையில் ஐக்கிய நாடுகள் சபையின் மனித உரிமை ஆணையாளர் நாயகம் நவநீதம்பிள்ளை இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது என்றும் போருக்கு பின்னரான இலங்கையில் ஏற்பட்டுள்ள முன் னேற்றங்களை அவருக்கு வெளிக்காட்ட சிறந்த சந்தர்ப்பமாக அமையும் என்றும் அமைச்சர் குறிப்பிட்டார்.

இதேவேளை ஜனாதிபதியினால் ஆராயப்பட்டு வருகின்ற கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பான ஆணைக்குழுவின் அறிக்கை பகிரங்கப்படுத்தப்பட்ட பின்னரே தான் இலங்கைக்கு விஜயம் மேற்கொள்வதாக மனித உரிமை ஆணையாளர் நவநீதம்பிள்ளை அண்மையில் தெரிவித்திருந்தார்.

கற்றறிந்த பாடங்களும் நல்லிணக்கமும் தொடர்பானஆணைக்குழுவின் அறிக்கையை ஜனாதிபதி தற்போது ஆராய்ந்து வருகின்ற நிலையில் அதனை விரைவில் பாராளுமன்றத்துக்கு சமர்ப்பிக்கவுள்ளார். (அ-2)

# வவுனியா மக்களுக்கான நடமாடும் சேவை

யுத்தம் காரணமாக வவுனியாமாவட்டத்தின் பல பகுதிகளில் வசித்து வந்தவர்கள் அவர்களது சொந்த இடங்களில் மீள்குடியேற்றப்பட்டுள்ள நிலையில் அவர்களின் தேவைகளை பூர்த்தி செய்யும் நோக்கோடு நடமாடும் சேவை கடந்த செவ்வாய்க்கிழமை போகஸ்வவ மற்றும் பிரம்மம்மடுவ கிராமங்களில் நடைபெற்றது.

வவுனியா மாவட்டத்தில் சுமர் 10 ஆயிரத்து 577 குடும்பங்களை சேர்ந்த 36 ஆயிரத்து 729 பேர் மீண்டும் தமது சொந்த இடங்களுக்கு மீள்குடியேற்றம் செய்யபட்டுள்ளதாக தெரிவிக்கபட்டுள்ள நிலையில் அவ்வாறு மீள்குடியேறியுள்ள மக்களுக்கு தேவையான வசதி வாய்ப்புக்கள், பிரச்சினைகள் என்பவற்றை அறிந்தத கொள்வதற்காகவே இந்த நடமாடும் சேவை நடத்தப்படுகின்றது.

இந்த நடமாடும் சேவையில் வவுனியா அரசாங்க அதிபர் திருமதி பி.எஸ்.எம்.சாள்ஸ், திணைக்கள அதிகாரிகள் மற்றும் கல்வி, சுகாதாரம், நீர், விவசாயம் தொடர்பான அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

அதிகாரிகள் மீள்குடியேற்றம் செய்யப்பட்டவர்களின் சொந்த இடங்களிற்கு சென்று அவர்களுடன் கலந்துரையாடி அவர்களின் பிரச்சினைகளையும் தேவைகளையும் அறிந்து கொண்டனர்.

இதேவேளை மீள்குடியேறிய மக்கள் தமது ஜீவனோபாய தொழிலான விவசாயத்தினையே தொடர்ந்தும் முன்னெடுக்கவுள்ளமையினால் விவசாய நடவடிக்கைக்கு தேவையான உதவிகள் அனைத்தும் செய்து தரப்படுமென வவுனியா மாவட்ட அரசாங்க அதிபர் தெரிவித்துள்ளார். (அ-2)

# தோல்விகளில் இருந்து இந்தியா பாடம் கற்கத் தவறினால்...?

## இந்திய ஊடகத்தின் ஆய்வு


தான் கண்ட தோல்விகளில் இருந்தும், நோர்வே பெற்றுக்கொண்ட தோல்விகளில் இருந்தும், இந்தியா பாடங்களைக் கற்றுக் கொள்ளத் தயக்கம் காட்டினால், இலங்கையை நோக்கி இந்தியா ஒரு போதும் உறுதியான, பயனுறுதி மிக்க வெளியுறவு மற்றும் பாதுகாப்பு மூலோபாயக் கொள்கையை வகுத்துக்கொள்ள முடியாது.

இவ்வாறு யுரோசியறிவியூ இணையத் தளத்தில் அமைதி மற்றும் முரண்பாட்டுக் கற்கைகளுக்கான நிலையத்தின் ஆய்வு அதிகாரியான ஜே.ஜெகநாதன் எழுதியுள்ள இந்த ஆய்வுக் குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சின் கீழ் இயங்குகின்ற அபிவிருத்தி ஒத்துழைப்பிற்கான நோர்வே அமைப்பு (NORAD) 1997-2003 காலப்பகுதி வரையில் இலங்கையில் நோர்வேயால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் பற்றிய மீள் மதிப்பீட்டு அறிக்கையை சமாதான முயற்சியின் தோல்வி (Pawns of Peace) என்ற பெயரில் வெளியிட்டிருந்தது.

இலங்கையில் நோர்வேயால் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சி தோல்வியடைந்தமைக்கான காரணம் என்ன? இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகளின் எந்த நடவடிக்கைகள் அங்கு நிலவிய முரண்பாட்டைத் தீர்ப்பதில் தோல்வியடைந்தன? ஆகிய இரு முக்கிய வினாக்கள் தொடர்பாக இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளன. இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் மற்றும் இந்த சமரச முயற்சிகளுக்காக நோர்வே, இராஜதந்திர ரீதியாக இடைத்தரகராகச் செயற்பட்டமை, யுத்தநிறுத்த உடன்படிக்கைக்கான நடுநிலையாளராக செயற்பட்டமை, 1997-2003 வரை மனிதாபிமான மற்றும் அபிவிருத்திக்கான நிதி வழங்குனராகச் செயற்பட்டமை போன்றன குறித்து மிக விளக்கமாக இந்த அறிக்கையில் ஆய்வு செய்யப்பட்டுள்ளது.

இந்த அறிக்கையின் தொடக்கத்தில், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சியில் நோர்



வேயின் பங்களிப்பானது இங்கு இடம்பெற்ற உள்நாட்டுப்போரை முடிவிற்குக்கொண்டு வருவதில் பெருமளவில் தோல்வியடைந்ததாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், இலங்கையில் இனப்பிரச்சினை தீர்வில் நோர்வேயின் பங்களிப்பானது சற்று சிக்கலானதாக இருந்துள்ளது என்பதை மிக இலகுவான எடுகோளாக எடுத்துக் கொள்ளலாம்.

நடுநிலையாளராக செயற்படுமாறு இலங்கை அரசாங்கம் மற்றும் தமிழீழ விடுதலைப்புலிகளால் நோர்வே அழைக்கப்பட்டதுடன், இலங்கையில் மேற்கொள்ளப்பட்ட சமரச முயற்சிகள் வெளித்தரப்பினராலும் ஒப்புக்கொள்ளப்பட்டும் பாராட்டப்பட்டும் இருந்த போதிலும்கூட, பரஸ்பரம் தீர்வை எட்டுவதற்காக நோர்வேயால் எடுக்கப்பட்ட முயற்சிகள் அனைத்தும் உண்மையில் நாசமாக்கப்பட்டுள்ளன.

இலங்கையில் தொடர்ந்த இன மோதலானது அனைத்துலக மயப்படுத்தப்பட்டிருந்தமை மற்றும் இந்தியா போன்ற பிராந்திய செல்வாக்கு மிக்க நாடுகளால் இம் முயற்சிகள் ஓரங்கட்டப்பட்டமை ஆகிய இரு பிரதான காரணங்களை இங்கு கவனிக்கத் தவறக்கூடாது.

2003 ஆம் ஆண்டுவரை இலங்கையில் நோர்வே மிகவும் வினைத்திறனுடன் சமரச முயற்சிகளைக் கையாண்டது.

கருணாவின் பிளவின் பின்னரே இந்த சமரச முயற்சிகள் படிப்படியாக ஆட்டம் காணத்தொடங்கின. உண்மையில் இது நோர்வே அனுசரணையாளர்களால் எதிர்பார்க்கப்படாத ஒன்றாகவே இருந்துள்ளது. இதே வேளையில் சமரச முயற்சியில் பங்குகொண்டிருந்த விடுதலைப் புலிகளைப் பலவீனப்படுத்துவதில் மிகப்பிரதான பங்காளியாக இந்தியா இருந்துள்ளது தொடர்பாக இந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்தேகத்திற்கிடமற்ற வகையில், பூகோள நில அமைவு மற்றும் இன ரீதியாகவும் பெருமளவில் முக்கியத்துவத்தைக் கொண்டுள்ள இந்தியா, இலங்கையின் இன மோதலில் பிரதான தலையீட்டாளராகச் செயற்பட்டுள்ளது.

எடுத்துக்காட்டாக, இந்தியாவை ஆட்சிசெய்த இந்திராகாந்தி தலைமையிலான அரசாங்கம் தனது பிராந்தியத்தில் அமெரிக்க அதிகாரத்தை எதிர்ப்பதற்கான மூலோபாயத் தடையாக விடுதலைப்புலிகள் அமைப்பைப் பயன்படுத்திக் கொண்டது. இது இந்தியாவின் பூகோள அரசியல் நலன்சார் செயற்பாடாக அமைந்திருந்தது.

இதேபோன்றே 2009 இல் இலங்கையில் இடம்பெற்ற யுத்தம் நிறைவிற்கு வந்து, அதன் பெறுபேறுகள் வெளிவந்த போதும், சீனா, பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் தந்திரோபாய ரீதியான இணக்கப்பாடுகளை மேற்கொண்ட போதும், இந்தியா தனது நலன்சார் செயற்பாட்டையே மேற்கொண்டது.


இதற்கப்பால், நோர்வே நாடு இலங்கையில் சமரச முயற்சிகளை ஆரம்பித்தபோது அதில் பெரிதும் ஈடுபாடு காட்டாததுடன், இலங்கையுடனான உடன்படிக்கைக்கு அப்பால் செல்வதிலும் இந்தியா தயக்கம் காட்டியது.

2004 இல் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் (UPA) அரசாங்கம் ஆட்சிக்கு வந்தபோது மீண்டும் இந்தியாவின் இந்த நிலைப்பாடு வலுப்படுத்தப்பட்டது. இலங்கையின் இனப் பிரச்சினையில் இந்தியாவின் தனிப்பட்ட அரசியற் கோட்பாடுகள் மிகப் பெரிய செல்வாக்கைச் செலுத்தியுள்ளன என்பதையே இது காட்டுகிறது. இலங்கை மீதான சீனா மற்றும் பாகிஸ்தானின் மூலோபாயப் பங்களிப்புகளை தனக்குள் உள்ளடக்குவதில் இந்தியா தவறியுள்ளதாக பிரதான மூலோபாய விமர்சகரான பிரமா சலேனி உறுதிப்படுத்தியுள்ளார்.

இதற்கும் மேலாக, 2004 இல் இந்திய தேசிய காங்கிரஸ் மீளவும் ஆட்சிப்பொறுப்பிற்கு வந்தமை மற்றும் தமிழ்நாட்டு அரசியல் மீது இலங்கையின் செல்வாக்கு வீழ்ச்சயடைந்தமை தொடர்பாகவும் நோர்வேயின் அறிக்கையில் தெளிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தியா தற்போதும் இலங்கையில் வாழும் தமிழ்மக்களின் அரசியல் அவாக்கள் தொடர்பாகத் தனது ஆதரவை வழங்குகின்ற போதிலும், இது தொடர்பாக ராஜபக்ச அரசாங்கத்தால் எடுக்கப்பட்ட இராணுவ வழித்தீர்விற்கு எதிராக இந்தியா ஒரு போதும் தனது அழுத்தத்தைப் பிரயோகிக்கவில்லை எனவும் அந்த அறிக்கையில் குறிப்படப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக இந்த அறிக்



கையில் சமரச முயற்சி தொடர்பான நோர்வே பெற்றுக் கொண்ட அனுபவங்கள் தொடர்பாக ஐந்து பிரதான தலைப்புகளாக வகுக்கப்பட்டுள்ளது.

அதாவது சமரச முயற்சியினால் ஏற்படுத்தப்பட்ட எதிர்பார்க்காத மற்றும் தற்செயலான விளைவுகள், வன் மற்றும் மென் முறை அதிகார சக்திகளுக்கிடையில் பேணப்பட்ட சமநிலைகள், மனித உரிமை அணுகுமுறை, அரசியலுக்காகப் பயன்படுத்தப்பட முடியாதிருந்த உதவி, மோதல் பரிந்துரைக்கான "ஆசிய மாதிரி" போன்றவையே அந்தப்பிரதான ஐந்து பிரதான வகைகளாகும்.

இந்த அறிக்கையின் பிரகாரம், (Westphalian) வெஸ்ற்பாலியன் கருத்து முறைமையின் கீழ் தலையீடற்ற இறையாண்மை உருவாக்கப்பட்டிருந்தமை, மிகப் பலம் பொருந்திய அபிவிருத்தியடைந்துவரும் நாடாக இருந்தமை, தீவிரவாதத்தை ஒழிப்பதற்கு இராணுவ வழித்தீர்வை நாடியமை போன்றவற்றின் அடிப்படையில் மோதல் தவிர்ப்பிற்கான ஆசிய மாதிரிப் பரிந்துரைகள் உருவாக்கப்பட்டமையே இந்தச் சமரச முயற்சிகள் தோல்வியடையக் காரணமாக அமைந்துள்ளது.

போரால் நேரடியாகப் பாதிக்கப்



பட்ட தமிழ் மக்கள் இந்தியா மற்றும் சீனா ஆகிய இரு நாடுகளின் பூகோள அரசியல் மூலோபாயத்திற்கிடையில் அகப்பட்டதாகவும், ராஜபக்ச அரசாங்கம் இந்த நிலைப்பாட்டை தனது சுயநலத்திற்காகப் பயன்படுத்திக் கொண்டதாகவும் நோர்வேயின் அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஒட்டுமொத்தமாக நோர்வே பெற்றுக் கொண்ட அனுபவத்திலிருந்து இந்தியா, எதனைக் கற்றுக்கொள்ள முடிந்துள்ளது?

இலங்கையில் பாரிய விலை கொடுக்கப்பட்டும்-இந்தியாவின் அமைதி காக்கும் படையினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் தோல்வியைச் சந்தித்த பின்னர், இந்தியா இது போன்று எந்தவொரு மீள்மதிப்பீடுகளையும் மேற்கொள்ளவில்லை என்பது துரதிஸ்டவசமானதே.

இந்தியா தனது வெளியுறவு மற்றும் பாதுகாப்புக் கொள்கைகள் தோல்வியடைந்தமைக்கான காரணங்களை ஆராய்ந்து கற்றுக் கொள்ள வேண்டும் என இந்த அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதாவது இந்திய அமைதி காக்கும் படையினரால் இலங்கையில் மேற்க்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் பற்றி மீளாய்வு செய்து கொள்வதுடன், இறுதியில் இடம் பெற்ற ஈழப்போராட்டம் தொடர்பாகத் தன்னால் வரித்துக் கொள்ளப்பட்ட கொள்கை தொடர்பாகவும் இந்தியா மீளாய்வொன்றைச் செய்து கொள்ள வேண்டும்.

எந்தவொரு சமரச முயற்சிகளில் ஈடுபடும்போதும் அதனுடன் தொடர்புபட்ட, வன் மற்றும் மென் முறைசார் வளங்களிற்கிடையில் எவ்வாறானதொரு சமநிலையை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக எண்ணிப் பார்ப்பதில் நோர்வேயின் அனுபவங்கள் இந்தியாவிற்கு எச்சரிக்கையாக அமைந்துள்ளன.

இந்தியா, தான் கண்ட தோல்விகளிலிருந்தும் நேர்வே பெற்றுக் கொண்ட தோல்விகளிலிருந்தும் பாடங்களைக் கற்றுக் கொள்வதில் தயக்கம் காட்டினால், இலங்கையை நோக்கி இந்தியா ஒரு போதும் உறுதிப்பாடான, பயன் உறுதி மிக்க வெளியுறவு மற்றும் பாதுகாப்பு மூலோபாயக் கொள்கையை வகுத்துக் கொள்ள முடியாது.

# சிறுதொழில் முயற்சிகளின் மேம்பாடுமூலமே கிராமிய பொருளாதாரம் முன்னேற்றமடையும்

## பிரதமர் ஜயரட்ன தெரிவிப்பு



(கொழும்பு)

கைத்தொழில் மற்றும் சிறுதொழில் முயற்சிகளை மேம்படுத்துவதன் ஊடாகவே கிராமியப் பொருளாதார அபிவிருத்தி முன்னேற்றம் அடையும் என பிரதமர் தி.மு. ஜயரட்ன தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சில்ப 2011 விருது வழங்கும் நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு உரையாற்றுகையில்,

யாழ். மாவட்டத்தில் பல்வேறு கைத்தொழில் துறைக்ள் முன்னேற்றம் கண்டு வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

கொழும்பு பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் மரம், தோல், மட்பாண்டம், உலோகம், பனை, கித்துள், துணி போன்றவற்றால் உருவாக்கப்பட்ட பொருட்களுக்கு மாகாண ரீதியில் தமது திறமைகளை வெளிக்காட்டியவர்களுக்கு சான்றிதழும் பணப்பரிசில்களும் வழங்கப்பட்ட அதேவேளை தேசிய ரீதியில் தேர்ந்தெடுக்கப்பட்டோருக்கு பதக்கங்கள் அணிவிக்கப்பட்டதுடன் விருதுகளும் வழங்கப்பட்டன.

தேசிய ரீதியில் முதல் இடத்தை சமனாகப் பெற்றுக் கொண்ட இந்திக்க உதயங்கன மற்றும் உதித்த பிரியசமர ரத்னாயக்க ஆகியோருக்கு தங்க விருதும் தலா ஒரு இலட்சம் ரூபா வீதம் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

அதேவேளை, இரண்டாம் இடத்தை பெற்றுக்கொண்டவர்களுக்கும் தங்க விருது மற்றும் ஐம்பதாயிரம் பணப்பரிசில்களும் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. இந்நிகழ்வில் பிரதியமைச்சர் வீரக்குமார திஸாநாயக்க உட்பட பலரும் கலந்து கொண்டனர். (அ-2)

# மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுகளுக்கு அரசாங்கம் உரிய பதிலளிக்கவில்லை

## ஐ.தே.க குற்றச்சாட்டு

(கொழும்பு)

இலங்கையில் இடம்பெற்ற மனித உரிமை மீறல் குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் அரசாங்கம் உரிய பதிலளிக்கவில்லை என ஐக்கிய தேசியக் கட்சி குற்றம் சுமத்தியுள்ளது.

நாட்டில் இடம்பெற்ற அனைத்து விடயங்கள் தொடர்பிலும் விளக்கம் அளிக்கப்பட வேண்டியது அரசாங்கத்தின் கடமையாகும் என ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஸ்மன் கிரியல்ல தெரிவித்துள்ளார்.

கற்றறிந்த பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழு அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது. அத்தோடு ஆணைக்குழுவின் இடைக்கால அறிக்கையில் சில பரிந்துரைகள் செய்யப்பட்டிருந்தன.

இந்தப் பரிந்துரைகள் அமுல்படுத்தப்படுகின்றனவா? என கேள்வியெழுப்பியுள்ளார்.

உதலாகம ஆணைக்குழுவின் அறிக்கைக்கு என்ன நேர்ந்தது. இதுவரையில் அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லை. மனித உரிமைகளை மேம்படுத்த விசேட செயற்றிட்டமொன்று அமுல்படுத்தப்படும் என அரசாங்கம் அறிவித்திருந்ததாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கும் விளக்கமளித்தார். எனினும் இதுவரையில் மனித உரிமை மேம்பாடு தொடர்பான செயற்றிட்ட அறிக்கை தயாரிக்கப்படவில்லை என அவர் குற்றம் சுமத்தியுள்ளார். (அ-2)

# பிளாஸ்ரிக் பெட்டி பாவனை விவகாரம்; மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு

(கொழும்பு)

நாட்டின் பல பகுதிகளிலும் மரக்கறி வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் புதிய சட்டத்தினால் மரக்கறி விநியோகச் சங்கிலி பாதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

மரக்கறி மற்றும் பழ வகைகளை போக்குவரத்து செய்யும் போது பிளாஸ்டிக் கூடைகள் பயன்படுத்தப்பட வேண்டும் என கொண்டுவரப்பட்ட சட்டம் காரணமாக மரக்கறி, பழ வகைகளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன் காரணமாக ஒவ்வொரு பிரதேசத்திலும் மரக்கறி வகைகள் மற்றும் பழங்கள் பல்வேறு விலைகளில் விற்பனை செய்யப்படுவதாக சிங்கள பத்திரிகையொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

மரக்கறி வகைகளை போக்குவரத்து செய்வதில் ஏற்பட்டுள்ள சிக்கலினால் இவ்வாறு தட்டுப்பாடு நிலவுவதுடன் மரக்கறி வகைகளின் விலைகளும் உயர்வடைந்துள்ளன.

இதனிடையே பிளாஸ்டிக் கூடைகளை பயன்படுத்தும் புதிய சட்டம் ஒரு மாதகாலத்திற்கு இடைநிறுத்தப்பட்டுள்ளதாக நுகர்வோர் விவகார அமைச்சு அறிவித்துள்ளது. இதனால் மீண்டும் மரக்கறி விலைகள் குறைவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. (அ-2)




★ 1431-இங்கிலாந்தின் ஆறாம் ஹென்றி பிரான்ஸ் மன்னனாக பாரிசில் முடிசூடினான்.

★ 1497-வாஸ்கொடகாமா முன்னர் பர்தலோமியூ டயஸ் சென்றடைய முடியாத தென்னாபிரிக்காவின் அட்லாண்டிக் கரையோரத்தில் உள்ள நன்னம்பிக்கை முனையை சுற்றி வந்தார்.

★ 1598-கொரிய, ஜப்பானியக் கடற்படைகளுக்கிடையே இடம்பெற்ற சமரில் கொரியா வெற்றி பெற்றது.

★ 1653-சேர் ஒலிவர் குரொம்வெல் இங்கிலாந்து, ஸ்கொட்லாந்து, அயர்லாந்து நாடுகள் அடங்கிய பொதுநலவாயத்தின் தலைவரானார்.

★ 1707-ஜப்பானின் ஃபூஜி மலை கடைசித் தடவையாக வெடித்தது.

★ 1773-அமெரிக்கப் புரட்சி பாஸ்டன் தேநீர் கொண்டாட்டம்- அமெரிக்கர்கள் பிரித்தானிய கிழக்கிந்தியக் கம்பனியின் கப்பல்களில் ஏறி தேநீர் பெட்டிகளை பாஸ்டன் துறைமுகத்தில் எறிந்தனர்.

★ 1835-நியூயோர்க் நகரத்தில் இடம்பெற்ற பெருந்தீயில் 530 கட்டடங்கள் சேதமடைந்தன.

★ 1857-இத்தாலியின் நேப்பில்சில் இடம்பெற்ற 6.9 நிலநடுக்கம் 11 ஆயிரம் பேரின் உயிரிழப்பிற்கு காணமானது.

★ 1920-சீனாவில் 8.6 ரிக்டர் நிலநடுக்கம் ஏற்பட்டதில் 20 இலட்சம் பேர் உயிரிழந்தனர்.

★ 1922-போலந்து ஜனாதிபதி கேப்ரியல் நருடோவிச் சுட்டுக் கொல்லப்பட்டார்.

★ 1925-இலங்கை வானொலியின் சேவை கொழும்பில் ஆரம்பிக்கப்பட்டது.

★ 1941-இரண்டாம் உலகப் போர்: ஜப்பானியர்கள் சரவாக்கின் மிரி நகரைக் கைப்பற்றினர்.

★ 1960-ஐக்கிய அமெரிக்க விமானம் நியூயோர்க்கை அண்மிக்கும் போது மோதியதில் 134 பேர் உயிரிழந்தனர்.

★ 1971-வங்காளதேச விடுதலைப் போரில் பாகிஸ்தான் இராணுவம் சரணடைந்து போர் முடிவுக்கு வந்தது.

★ 1971-பாஹ்ரேன் பிரித்தானியாவிடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

★ 1991-கசகஸ்தான் சோவியத் ஒன்றியத்திடம் இருந்து சுதந்திரம் பெற்றது.

### பிறப்புக்கள்

★ 1770-லுடுவிக்ஃவான் பேத்தோவன், ஜேர்மனிய மேற்கத்திய இசை இயற்றுநர் (இ.1827)

★ 1866-வசிலி கண்டின்ஸ்கி, ரஷ்ய ஓவியர் (இ.1944)

### இறப்புக்கள்

★ 1916-கிரிகோறி ரஸ்புட்டீன், ரஷ்ய மதகுரு (பி.1869)

★ 1999-ஜோசப் ஆனந்தன், தமிழ் நாடக எழுத்தாளர்


### சிறப்பு நாட்கள்

★ ப்ஹ்ரேன் -தேசிய தினம் (1971)

★ வங்காளதேசம்- வெற்றி தினம் (1971)

★ கசகஸ்தான்- சுதந்திர தினம் (1991)

★ நேபாளம் -அரசியலமைப்புச் சட்ட தினம் (1962)



★ 1917-ஆங்கில அறிவியற் புனைகதை எழுத்தாளரும் கண்டுபிடிப்பாளருமான இலங்கைப் பிரஜாவுரிமை கொண்ட பிரித்தானியரான இலங்காபிமாணி ஆர்தர்சி. கிளார்கின் பிறந்த தினம். (இ.1998)

## பி.ரி.ஜ.மருந்தினை டெங்கிற்காக பயன்படுத்த வேண்டாம்

### சுகாதார அமைச்சு பணிப்பு

(கொழும்பு)

அரசியல்வாதியாக மாறிய ஒருவரின் ஆதரவைக்கொண்ட குழுவொன்றினால் சட்டவிரோதமாக இறக்குமதி செய்யப்பட்ட பி.ரி.ஜ. தொகுதிக்கான கொடுப்பனவுகளை உடனடியாக அமுலுக்குவரும் வகையில் இடைநிறுத்தம் செய்யுமாறு சுகாதார அமைச்சர் மைத்திரிபால சிறிசேன உத்தரவிட்டுள்ளதாக தெரியவருகிறது.

மேற்படி பி.ரி.ஜ.தொகுதியை டெங்கு கட்டுப்பாட்டுக்கு பயன்படுத்த வேண்டாம் எனவும் டெங்கு கட்டுப்பாட்டு நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகளுக்கு அமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

டோனட் வடிவிலான இந்த பி.ரி.ஜ. தரப் பரிசோதனை தொழில்நுட்ப ஆய்வு மற்றும் ஏற்றுக்கொள்ளப்பட்ட இறக்குமதி நடைமுறைகள் இன்றி 60 மில்லியன் ரூபா செலவில் இறக்குமதி செய்யப்பட்டுள்ளதாக இந்த இறக்குமதி தொடர்பாக அறிந்த தம்மை இனங் காட்ட விரும்பாத வட்டாரமொன்று தெரிவித்தது. (அ-2)

## பிளாஸ்ரிக்கூடை பாவனைக்கு உரியதீர்வு வழங்கப்பட வேண்டும்

### எச்சரிக்கிறார் காமினி ஜயவிக்ரம

(கொழும்பு)

பிளாஸ்ரிக் கூடைகள் தொடர்பான பிரச்சினையை முன்னிலைப்படுத்தி விவசாயிகளின் சிக்கல்களுக்கு உரிய தீர்வு பெற்றுக்கொடுக்கப்படாவிடின் தாம் எதிர்க்கட்சி என்ற ரீதியில் வீதியில் இறங்கிப் போராட்டத்தில் ஈடுபடவுள்ளதாக ஐக்கிய தேசியக் கட்சியின் உறுப்பினர் காமினி ஜயவிக்ரம நேற்றுமுன்தினம் பாராளுமன்றத்தில் குறிப்பிட்டார்.

இதன் காரணமாக பெருமளவிலான மரக்கறி வகைகள் அழிவடைந்துள்ளதாகவும் விளையாட்டு மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் நிதி ஒதுக்கீடு தொடர்பான விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் தெரிவித்தார்.

இதற்காக விவசாயிகளுக்கு இழப்பீடு வழங்கப்பட வேண்டும் எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கிரிக்கெட் வீரர்களுக்கான சம்பளத்தை வழங்கமுடியாவிடின், அந்த நிறுவனம் நட்டத்தில் இயங்குகின்றமை தெளிவாகின்றதென விவாதத்தில் கலந்து கொண்ட ஐக்கிய தேசியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எரான் விக்கிரமரத்ன குறிப்பிட்டார்.

கிரிக்கெட் வீரர்கள் இடையே தற்போது அரசியல் நிலவுவதாக விவாதத்தில் கலந்து கொண்ட பாராளுமன்ற உறுப்பினர் சனத் ஜயசூரிய சுட்டிக்காட்டினார்.

தற்போது கிரிக்கெட் நிறுவனத்தில் ஏற்பட்டுள்ள பிரச்சினை தற்காலிகமான ஒன்றெனத் தெரிவித்த சனத்ஜயசூரிய அது தொடர்பில் அரசாங்கத்தையோ விளையாட்டுத்துறை அமைச்சரையோ குற்றஞ்சாட்டுவதில் பலனில்லை எனவும் குறிப்பிட்டார். (அ-2)

## கடல் அட்டை கடத்த முயன்ற இரு இலங்கையர்கள் கைது

(கொழும்பு)

சிங்கப்பூருக்கு கடத்துவதற்காக கடல் அட்டை கொண்டுவந்திருந்த இலங்கையர்கள் இருவர் பெங்களூர் விமான நிலையத்தின் சுங்கப்பிரிவு அதிகாரிகளால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

தந்தையும் மகனுமான மொகமட் ராபீக் மொகைதீன், மொகமட் ரபாக் மொகமட் ராபீக் ஆகிய இருவருமேகைதுசெய்யப்பட்வர்களாவர்.

மொகமட் ரபாக் முன்பு கடற்குதிரைகளை கடத்த முயன்றபோது சென்னையில் பிடிபட்டவராவார். இதனாலேயே இவர்கள் சென்னை விமான நிலையத்தினூடாக பயணிக்காமல் பெங்களூரை தெரிவு செய்தனர்.

மருத்துவக் குணங்கள் கொண்டதென நம்பப்படும் கடல் அட்டைகளுக்கு உலக சந்தையில் பெரும் கிராக்கியுள்ளது. கடல் அட்டைகளைப் பிடிப்பதும் கொண்டு செல்வதும் வனவிலங்கு பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் தடை செய்யப்பட்டுள்ளது. கடல் அட்டை அழியும் நிலையிலுள்ள இனங்கள் தொடர்பான சர்வதேச வர்த்தக ஒப்பந்தத்தால் பாதுகாக்கப்படுகிறது. இந்த ஒப்பந்தத்தில் இந்தியாவும் கையொப்பமிட்டுள்ளது. (அ-2)

## வவு.நகரசபையின் வரவு செலவுத்திட்டம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது

### நகர சபைத்தலைவர் கனகையா

(வுவுனியா)

வவுனியா நகரசபையின் 2012 ஆம் ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

15 கோடியே 34 இலட்சத்து 42 ஆயிரத்து 451 ரூபா 11 சதம் வருமானமாகவும் 15 கோடியே 34 இலட்சத்து 42 ஆயிரத்து 429 ரூபா செலவாகவும் கொண்டு இவ்வரவு செலவுத்திட்டம் அமையப் பெற்றுள்ளது.

வரவு செலுத்திட்டத்தை தாக்கல் செய்து உரையாற்றிய வவுனியா நகரச்சபையின் தலைவர் ஐ.கனகையா சபையின் முக்கிய பணிகளில் ஒன்றாக வரவு செலவுத்திட்டம் காணப்படுகின்றது. இவ்வரவு செலவுத்திட்டத்தில் கூடுதலான பங்கினை அடிப்படை சுகாதார கீழ் கட்டுமான வசதிகளை மேம்படுத்துவதே இலக்காக கொண்டுள்ளது. இவ்வருட வரவு செலவுத்திட்டத்தில் மக்கள் பயன்பெறும் பொருட்டு இறந்த மனிதர்களின் இறுதிக்கிரியையினை சிறப்பிக்கும் மண்டபமும் உடலை மின்சாரத்தில் எரிக்கும் இயந்திர முறைமையும் சபையினால் இவ்வருடம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

மக்கள் பங்களிப்புடனான அபிவிருத்தி வேலைகள் செய்யும் நோக்குடன் வடக்கு கிழக்கு உள்ளூர் சேவை மேம்படுத்தும் திட்டம் மூலம் நகர அபிவிருத்தி நடைபெறவிருப்பது எமக்கு கிடைத்த பெரும் வளமாகும். பொது சுகாதார பகுதிக்காக வரவு செலவுத்திட்டத்தில் ஊழியர்களது நலன் வசதிகள் மேம்படுத்தல் இதன் பொருட்டு தேவைப்படும் மூலாதார சொத்துக்களை அதிகரித்தல் என்பனவும் இதில் குறிப்பிடத்தக்க விடயம்.

இச்சபை வருமானத்தை மேம்படுத்தும் நோக்கில் கணனி மயப்படுத்தப்பட்டவருமான அலகு, நடமாடும் வருமான சேகரிப்பு, வருமான வளக்குவிப்புக்கள் என்பனவும் பொது நலன் வசதிகளாக கணனி முறையிலான நூலகம், கணனி முறையிலான வருமான மேம்படுத்தல், நவீன முறையிலான பூங்கா வசதிகள் என்பனவும் இதில் குறிப்பிடத்தக்க அம்சங்களாகவுள்ளன என்றார்.

இவ்வரவு செலவுத்திட்டத்தில் நகரசபையின் 9 உறுப்பினர்கள் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## வடபகுதி சிறுவர்கள் 60 பேரின் ஓவியங்கள் காட்சிப்படுத்தப்பட்டன



(கொழும்பு)

காட்வீல் இன்நேவிட்டி நிறுவனத்தினால் வடபகுதி சிறுவர்கள் 60 பேரின் ஓவியங்கள் நேற்று முன்தினம் இலங்கை மன்ற கல்லூரியில் காட்சிப்படுத்தப்பட்டது. இந்நிகழ்வினை இலங்கைக்கான் அமெரிக்க தூதுவர் பற்றீசியா புட்டினீஸ் ஆரம்பித்து வைத்தார்.

அண்மையில் வட பகுதிக்கு விஜயம் மேற்கொண்ட அமெரிக்க நியூயோர்க்கினை சேர்ந்த மேற்படி நிறுவனத்தினரால் சுமார் 250 சிறுவர்களுக்கு புகைப்பட கலை, இசை உள்ளிட்ட பல்வேறு துறைகளில் 10 நாட்கள் பயிற்சி வழங்கப்பட்டது.

இப்பயிற்சி யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வவுனியா, முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலுள்ள மகிழ்ச்சிநிலையங்களில் நடைபெற்றது.

இதில் தெரிவு செய்யப்பட்ட 60 சிறுவர்கள் படைப்புக்களுடன் கொழும்புக்கு அழைத்துவரப்பட்டு நேற்று முன்தினம் காட்சிப்படுத்தப்பட்டது. இதற்கு மேலதிகமாக இக்குழுவினர் அமெரிக்கா திரும்பியவுடன் சிறுவர்களின் படைப்புக்களை நியூயோர்க் நகரிலும் காட்சிப்படுத்தவுள்ளனர். புகைப்படப்பிடிப்பாளரும் இந்நிறுவனத்தின் இணை ஸ்தாபகருமான அசோக் சின்ஹா வடபகுதியில் சமூக ஒற்றுமை நடவடிக்கைகளை முன்னெடுக்கும் மனோரி உனம்பு மற்றும் அமெரிக்க கலைஞர்கள் எண்மர் உள்ளிட்ட குழுவினரே இந்த பயிற்சியினை வழங்கினர். (அ-2)

## திருமலை வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கின

பலத்த மழை காராணமாக திருகோணமலை மற்றும் மாத்தறை மாவட்டங்களின் வீதிகள் பலவும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

பிரதான வீதிகள் மற்றும் உள்வீதிகள் என்பன வெள்ள நீரில் மூழ்கியுள்ளதாக இடர் முகாமைத்துவ நிலையத்தின் பிரதிப் பணிப்பாளர் பிரதீப் கொடிப்பிலி தெரிவித்தார்.

சீரற்ற காலநிலை காரணமாக ஏற்பட்ட அனர்த்தங்களில் சிக்கி இருவர் உயிரிழந்துள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இரத்தினபுரி மற்றும் மாத்தறை மாவட்டங்களில் மின்னல் தாக்கத்திற்கு இலக்காகியும், நீரில் மூழ்கியும் இவர்கள் உயிரிழந்ததாக இடர் முகாமைத்துவ நிலையம் குறிப்பிட்டுள்ளது. (அ-2)

## பிரச்சினைகளை உக்கிரப்படுத்தி டொலர்களை பெற சிலர் முயற்சி

(கொழும்பு)

நாட்டில் பிரச்சினைகளை உக்கிரப்படுத்தி அதன் மூலம் டொலர்களை ஈட்ட சிலர் முயற்சித்து வருவதாக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் மக்கள் விழிப்புணர்ச்சியுடன் செயற்பட வேண்டும். இவ்வாறான நடவடிக்கைகள் குறித்த தகவல்கள் தெரியும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அலரி மாளிகையில் நடைபெற்ற மஹாவலி விவசாயிகள் விருது வழங்கும் நிகழ்வில் உரையாற்றிய போது ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

சமூக குரோதம் உடையவர்கள் கலாசாரம் தொடர்பில் எவ்விதமான உணவும் அற்ற வெளிநாடுகளில் வாழும் இலங்கையர்களும் இவ்வாறு நாட்டுக்கு எதிராக பிரசாரம் செய்கின்றனர்.

தமிழீழ விடுதலைப்புலிகளினால் எப்போது தாக்குதல் நடத்தப்படும் என்ற அச்சம் களையப்பட்டுள்ளது. மக்கள் அச்சமின்றி வாழக்கூடிய ஓர் சூழ்நிலை உருவாக்கப்பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டுள்ளார். (அ-2)

## தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் 18 நாட்களில் 18 விபத்து சம்பவங்கள்

### பொலிஸ் ஊடகப் பேச்சாளர்

(கொழும்பு)

தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் விபத்துக்களின் எண்ணிக்கை 18 ஆக உயர்வடைந்துள்ளதுடன் போக்குவரத்து விதிமுறைகளை மீறி செயற்பட்ட 154 சாரதிகளுக்கு எதிராக வீழக்குத்தாக்கல் செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் அஜித் ரோகண தெரிவித்தார்.

இதேவேளை, நேற்று முன்தினம் இரண்டு வாகன விபத்துக்கள் இடம் பெற்றுள்ளன. பத்தேகம மற்றும் குருந்தகஹா ஆகிய பகுதிகளில் இவ் விபத்துக்கள் இடம் பெற்றள்ளன.

இலங்கையில் முதன் முதலாக அமைக்கப்பட்டுள்ள இந்த தெற்கு அதிவேக நெடுஞ்சாலை கடந்த நவம்பர் மாதம் 27 ஆம் திகதி ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவினால் உத்தியோகபூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

இந்நிலையில் பாதை திறக்கப்பட்டு 18 நாட்களுக்குள் 18 விபத்துக்கள் இடம்பெற்றுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ-2)

## பெல்ஜியத்தில் நடத்திய துப்பாக்கி சூட்டில் 5 பேர் பலி;125 பேர் காயம்

பெல்ஜியம் நாட்டில் உள்ள லே நகரின் மைய பகுதியில் வணிக வளாகத்தில் வாலிபர் ஒருவர் நேற்று முன்தினம் இரவு புகுந்தார். கையெறி குண்டுகள், துப்பாக்கி ஆகியவற்றுடன் சென்ற அவர் சரமாரியாக மக்கள் மீது தாக்குதல் நடத்தினார். கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ஏராளமான மக்கள் அங்கு கூடியிருந்தனர். மேலும் வணிக வளாகம் அருகிலேயே பெரிய பேருந்து நிறுத்தமும் உள்ளது.

அந்த வாலிபர் நடத்திய தாக்குதலில் 18 வயது இளைஞன், 75 வயது வயோதிபர் உட்பட 5 பேர் பலியாகினர். 125 பேர் படுகாயம் அடைந்தனர். இந்த சம்பவத்தை தொடர்ந்து வாலிபரை மடக்கி பிடித்து விசாரித்தபோது நோர்டைன் அம்ரானி (வயது 33) என்ற பழைய குற்றவாளி என்பது தெரிய வந்தது. ஏற்கனவே பல்வேறு வழக்குகளில் சிறைத்தண்டனை அனுபவித்துள்ள அம்ரானி, எதற்காக இந்த தாக்குதலை நடத்தினார் என்பது தெரியவில்லை. (அ-2)

## படகு கவிழ்ந்து விபத்து; இருபது பேர் உயிரிழப்பு

நைஜீரியாவின் தெற்கு பகுதி யில் அதிக பளு காரணமாக படகு கவிழ்ந்த விபத்தில் 20பேர் பலியாயினர். நைஜீரியா அருகே உள்ள ஈகிள்தீவிலிருந்து முபோவ் தோஹியா பகுதிக்கு படகு ஒன்றில் 40 பேர் பயணம் செய்தனர். படகில் அளவுக்கு அதிகமானோர் பயணம் செய்ததால் அதிக பாரம் காரணமாக படகு கவிழ்ந்ததாக நைஜீரியாவின் அவசர நிர்வாக அமைப்பின் செய்தித் தொடர்பாளர் யூஸ்குவாகூயேப் தெரிவித்துள்ளளார்.

குழந்தை மற்றும் கர்ப்பிணிப்பெண் உட்பட 20 பேர்வரை பலியானதாக கூறினார். மோசமான வீதி போக்குவரத்து காரணமாக பொதுமக்கள்படகுகளில் பயணம் செய்ய நேரிடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். (அ-2)

## பிரிட்டனில் கடுங்காற்று; நகரங்கள் இருளில் மூழ்கின



பிரிட்டனின் தென்கடற்கரைப் பகுதியில் புயல்காற்று மணிக்கு எழுபது மீற்றர் வேகத்தில் வீசியது. இதனால் மின்கம்பங்கள் தரையில் சாய்ந்தன.

வீதிப் போக்குவரத்து கடுமையாக பாதிக்கப்பட்டது. மின்சாரம் இல்லாததால் நகரங்கள் இருளில் மூழ்கின. இந்த வார இறுதியில் இன்னும் பலமான காற்று வீசும் என்று வானிலை அறிவிப்பு மையம் தகவல் வெளியிட்டுள்ளது.

ஆறுகளில் வெள்ளம் பெருகுவதால் பிரான்ஸ் நாட்டிற்கு சென்று வரும் படகுகளும் நிறுத்தப்பட்டன. இன்னும் ஒரு பலத்த புயல் வீசக்கூடும் என்பதால் நிலைமையைக் கூர்ந்துகவனித்துவருவதாகவானிலை அறிவிப்பாளர் டிம் .ஹியூசன் தெரிவித்தார்.

வானிலை அறிவிப்பு அவ்வப்போது வெளியிடப்படுவதால் மக்கள்அதனைக் கேட்டு செயற்படுவது பாதிப்புகளைத் தடுக்கும் என்றார்.

ஸ்கொட்லாந்தின் பனிப்பொழிவு அதிகம் இருப்பதால் வீதிகளில் வாகனங்கள் செல்ல சிரமப்படுகின்றன. பத்து சென்ரிமீற்றர் உயரத்திற்கு பனி படர்ந்துள்ளது. எனவே மாலை வேலைகளில் ஓட்டுநர்கள் தம் வண்டியின் வேகத்தைக் கட்டுப்பாட்டுடன் வைத்திருக்க வேண்டும் என்றும் கூறினார். (அ-2)

## அமெரிக்க இரட்டைக்கோபுரத்தைப் போன்று எம்.வி.ஆர்.டி.வி.நிறுவனம் அமைக்கவுள்ளது

அமெரிக்காவில் நியூயோர்க் நகரில் உள்ள இரட்டை கோபுரத்தை தீவிரவாதிகள் விமானத்தை மோதவிட்டு தகர்த்தனர். அப்போது கட்டடம் தகர்ந்து புகை கிளம்பியது. விமானம் மோதும் போது கட்டடம் எப்படி தோற்றம் அளித்ததோ அதேபோன்ற வடிவில் தென் கொரியாவில் உள்ள சியோல் நகரில் கட்டடம் ஒன்றை கட்டவுள்ளனர்.

இந்த கட்டடத்தை நெதர்லாந்து நாட்டை சேர்ந்த எம்.வி.ஆர்.டி.வி. என்ற கட்டட நிறுவனம் வடிவமைத்து உள்ளது. கட்டடத்தில் புகை தெரிவது போன்ற இருகட்டடத்தையும் இணைந்து உள்ளனர். இதில் ஹோட்டல், பூங்கா, நீச்சல் குளம் போன்றவை அமைக்கப்படுகின்றது.

இந்த கட்டடம் வடிவமைப்புக்கு அமெரிக்கர்கள் பலர் எதிர்ப்பு தெரிவித்து உள்ளனர். இதற்காக கட்டட வடிவமைப்பு நிறுவனம் மன்னிப்பு கேட்டு உள்ளது. ஆனாலும் திட்டமிட்டபடி கட்டடம் கட்டப்படும் என்று கூறியுள்ளது. அடுத்தமாதம் கட்டட பணி தொடங்குகிறது. 3 ஆண்டில் கட்டடத்தை கட்டிமுடிக்க திட்டமிட்டு உள்ளனர். (அ-2)




## செல்வம் கொழித்த இங்கிலாந்தில் 26 இலட்சம் பேருக்கு வேலையில்லை

(லண்டன்)

இங்கிலாந்து ஒரு காலத்தில் செல்வம் கொழிக்கும் நாடாக இருந்தது. ஆனால் இப்போதுஅங்கு நிலைமை தலைகீழாக மாறிவிட்டது. பொருளாதாரத்தில் தொடர்ந்து நலிவடைந்து வருகின்றது.

நிதி நெருக்கடியால் பல்வேறு தொழில்களும் முடங்கி போயுள்ளன. எனவே அங்கு வேலை பார்ப்பவர்களை வீட்டுக்கு அனுப்பி வருகின்றார்கள்.

கடந்த மூன்று மாதத்தில் மட்டும் ஒரு இலட்சத்து 28 ஆயிரம் பேர் வேலை இழந்து உள்ளனர். மொத்தத்தில் 26 இலட்சம் பேர் வேலை இல்லாமல் இருக்கின்றனர்.

அதிலும் 16 வயதில் இருந்து 24 வயதுக்கு உட்பட்டவர்களில் 22 சதவீதம் பேருக்குவேலை இல்லை. இங்கிலாந்தில் வேலை இல்லாதவர்களுக்கே அரசே நிவாரண உதவி வழங்குகின்றது.

இதை மட்டும் 16 இலட்சம் பேர் வாங்குகின்றார்கள்.

நாட்டில் ஒரு வேலை உருவானால் 13 பேர் வேலை இழக்கின்றனர். வேலை இல்லாததால் மக்கள் மத்தியில் கடும் விரக்தி ஏற்பட்டுள்ளது.

இந்த நிலையை போக்க அரசு பல்வேறு முயற்சிகளை எடுத்துள்ளது. ஆனாலும் அதற்கு பலன் கிடைக்கவில்லை. தொடர்ந்து வேலை இழப்பு அதிகரித்தபடியுள்ளது. (அ-2)


## ஒட்டிப்பிறந்த இரட்டையர் வெற்றிகரமாக பிரித்தெடுப்பு

சிலி நாட்டில் சாண்டியாகோ நகரில் ஒட்டிப்பிறந்த இரட்டை குழந்தைகள் 20 மணி நேர சத்திரசிகிச்சை மூலம் பிரிக்கப்பட்டனர்.

பிறந்து 10 மாதமேயான இரட்டை பெண் குழந்தைகள் மரியா பாஸ் மற்றும் மரியா ஜொஸ் மார்பு, வயிறு மற்றும் இடுப்பு பகுதிகளில் ஒட்டி பிறந்தனர். இவர்களை பிரிப்பதற்காக இவர்களது பெற்றோர் ஜெசிக்கா மற்றும் ராபர்டோ சாண்டியாகோ மருத்துவமனையில் சேர்த்தனர்.

இந்த சத்திரசிகிச்சை மூலம் குழந்தைகளின் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடும் என்று மருத்துவர்கள் தெரிவித்தபோதும் பெற்றோர் நம்பிக்கையில் இருந்தனர். இருவரின் உயிரையும் காப்பாற்ற வேண்டும் என்ற எண்ணத்தில் மொத்தம் 20 மணி நேரம் நீடித்திருந்த இந்த சத்திரசிகிச்சையில் இருவரும் பிரிக்கப்பட்டுள்ளனர்.

இந்த சத்திர்சிகிச்சையில் 25 மருத்துவர்கள் உட்பட 100 பேர் இந்த சத்திரசிகிச்சையில் ஈடுபட்டனர். (அ-2)



கிறிஸ்மஸ் பண்டிகையையொட்டி பிரான்ஸ் தலைநகர் பாரீஸ் நகரில் ஜனாதிபதி மாளிகையில் நடந்த விழாவில் குழந்தைகளுக்கு கிறிஸ்துமஸ் பரிசினை வழங்கும் ஜனாதிபதி நிக்கோலஸ் சர்கோசி, அவரது மனைவி காரிலோபுருனி ஆகியோரைப் படத்தில் காணலாம்.

## எனது குடும்பத்தினர் கொலை குறித்து நீதியான விசாரணை நடத்துங்கள்

### சர்வதேச நீதிமன்றில் கடாபியின் மகள் கோரிக்கை

லிபிய ஜனாதிபதி கடாபி, அவரது மகன் மோட்சிம் ஆகியோரை அங்குள்ள புரட்சிப் படையினர் கடந்த ஒக்டோபர் மாதம் சிறை பிடித்தனர். பின்னர் அவர்களை சுட்டுக் கொன்றனர்.

இச்சம்பவம் உலகம் முழுவதும் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது. இந்நிலையில் கடாபியின் மகள் ஆயிஷா தனது தந்தை மற்றும் சகோதரர் கொலை பற்றி முறையாக விசாரணை நடத்த கோரி சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்துள்ளார்.

ஆயிஷா சார்பில் அவரது சட்டத்தரணி நிக்காப்மேன் சர்வதேச நீதிமன்றில் மனு தாக்கல் செய்தார். அதில் கடாபியும் அவரது மகனும் கொலை செய்யப்பட்டதில் பல்வேறு மர்மங்கள் உள்ளன. இதுபற்றி சர்வதேச நீதிமன்றம் உரிய விசாரணை நடத்தி குற்றவாளிகளைத் தண்டிக்க வேண்டும். கடாபி கொலை செய்யப்பட்டபின்னர் அவரது படத்தை தனியார் தொலைக்காட்சிகளில் ஒளிபரப்பினர்.

இதைப் பார்த்து நாங்கள் அனைவரும் பெரும் வேதனைக்குள்ளானோம். இறந்த பின்னர் கடாபியின் உடலைபுரட்சிப்படையைச்சேர்ந்தவர்கள் அவமதித்ததையும் தொலைக்காட்சியில் ஒளிபரப்பினர். இது இஸ்லாமிய சட்டத்திற்கு எதிரானதாகும் என அந்த மனுவில்குறிப்பிடப்பட்டிருந்தது.

லிபியாவில் இராணுவத்திற்கும் புரட்சிப்படைக்கும் இடையே போர் நடந்தசமயத்தில்கடாபிமகள் ஆயிஷா அவரது சகோதரர்கள் முகமது, ஹனிபால், தாயார் சபியா உள்ளிட்ட அவரது குடும்பத்தினர் அல்ஜீரியா நாட்டுக்கு தப்பி சென்றனர். தற்போது அவர்கள் பாதுகாப்பு கருதி அங்கேயே தங்கி உள்ளனர். (அ-2)

## இரட்டை சகோதரர்களில் ஒருவர் பெண்ணாக மாறினார்



அமெரிக்காவில் உள்ள பாஸ்டன் நகரை சேர்ந்தவர் வெய்ன். இவருக்கு 14 ஆண்டுகளுக்கு முன்பு இரட்டை ஆண் குழ்ந்தைகள் பிறந்தனர். அவர்களுக்கு வெய்ன் -கெல்லி என்று பெயர் சூட்டினார்கள். இவர்களில் வெயுனுக்கு சிறுவயதில் இருந்தே பெண்கள் போல அலங்காரம் செய்து கொள்வது பிடிக்கும். 14 வயது ஆகிவிட்ட நிலையிலும் இந்த பழக்கம் மாறவில்லை.

இந்த நிலையில் வெய்ன் பெண்ணாக மாறிவிட்டார். இதற்கான ஆபரேஷனையும் செய்து உள்ளார். பெண்ணாக மாறிய அவர் தனது பெயரை நிகோலே என் மாற்றி வைத்துள்ளார். ஆனால் அவர் பெண்ணாக மாறியதற்கு அவரது தந்தை கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். (அ-2)

# அணை பிரச்சினைக்கு தீர்வு வேண்டின் சாதகமான சூழ்நிலையை உருவாக்குங்கள்

## மன்மோகன் சிங் கண்டிப்பு



(புதுடில்லி)

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினை தொடர்பாக கேரள மாநில அனைத்துக் கட்சி பிரதிநிதிகள் டில்லியில் பிரதமர் மன்மோகனை சந்தித்து பேசினர். அப்போது அணை பிரச்சினைக்கு விரைவாக தீர்வு காண வேண்டுமெனில் போராட்டங்களை நிறுத்திவிட்டு சாதகமான சூழ்நிலையை உருவாக்குங்கள் என கேரள முதல்வர் உம்மன் சாண்டியிடம் பிரதமர் மன் மோகன்சிங் கண்டிப்புடன் கூறினார்.

அப்போது அவர் பிரதமரிடம் கூறியதாவது, முல்லைப் பெரியாறில் தங்களது செலவில் புதிய அணை கட்டுவது என கேரள அரசு தீர்மானித்துள்ளது. புதிய அணை கட்டினாலும் தமிழகத்திற்கு தற்போது வழங்கப்பட்டு வரும் தண்ணீர் சற்றும் குறையாமல் வழங்கப்படும். இருந்தும் இந்த முக்கிய கோரிக்கைக்கு தமிழக அரசு செவி சாய்க்க மறுத்து வருகிறது. அணையை சுற்றியுள்ள பகுதிகளில் இந்தாண்டு ஜூலை வரை 26 நில நடுக்க சம்பவங்கள் நிகழ்ந்துள்ளன. இதில் அதிகபட்சமாக 3.8 ரிக்டர் அளவுக்கு நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

மாநிலத்தில் எதிர்பாராமல் பெய்த மழை காரணமாக சில தினங்களாக அணையின் நீர்மட்டம் 136 அடியையும் தாண்டியுள்ளது. இவ்விரு சம்பவங்களும் அணையால் என்ன ஆபத்து நிகழுமோ என பொது மக்களை பீதியடைய செய்து விட்டன.

எனவே, பிரதமர் இப் பிரச்சினையில் தலையிட்டு பிரச்சினை சுமுகமாக தீர உதவ வேண்டும் என்றார்.

இதற்குப் பதிலளித்த பிரதமர் மன்மோகன் சிங் போராட்டக்காரர்களுக்கு வேண்டுகோள்: பிரதமர் மன்மோகன் சிங்கை சந்தித்த பின் நிருபர்களிடம் பேசிய முதல்வர் உம்மன் சாண்டி கூறுகையில், பிரதமரை சந்தித்த போது அவர் விடுத்த வேண்டுகோள் பற்றி டில்லி வந்துள்ள நாங்கள் விரிவாக விவாதித்தோம். அதனால் கேரள மாநிலத்தில் சுமுக நிலைமையை உருவாக்க அனைத்து அரசியல் கட்சிகளும் அமைப்புகளும் போராட்டத்தை கைவிட வேண்டும் என வேண்டுகோள் விடுக்க முடிவு செய்துள்ளோம். எனவே, அனைவரும் போராட்டத்தை கைவிட வேண்டும் என வலியுறுத்துகிறோம் என்றார். (அ-2)

# கள்ளச்சாராயம் குடித்ததால் மேற்கு வங்காளத்தில் பலர் பலி

(கொல்கத்தா)

மேற்கு வங்காள மாநிலம் தெற்கு சங்காரம்பூர் உள்ளிட்ட 10 கிராமங்களைச் சேர்ந்தவர்கள் அந்த பகுதியில் உள்ள மதுக்கடையில் நேற்று முன்தினம் கள்ளச்சாராயம் குடித்தனர்.

கள்ளச்சாராயம் அருந்திய அனைவருக்கும் வாந்தி, மயக்கம் மற்றும் வயிற்று வலியாலும் அவதிப்பட்டனர். இதை தொடர்ந்து அவர்கள் பல்வேறு வைத்தியசாலைகளில் சேர்க்கப்பட்டனர். இதில் சிகிச்சை பலனளிக்காமல் நேற்று 57 பேர் பலியானார்கள்.

இந்த நிலையில் வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த 50 பேர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தனர். இதனால் கள்ளச் சாராய சாவு எண்ணிக்கை 107 ஆக உயர்ந்துள்ளது. 50 இற்கும் மேற்பட்டோர் வைத்தியசாலையில் உயிருக்கு போராடி வருகிறார்கள். இதனால் சாவு எண்ணிக்கை மேலும் உயரலாம் என்று அஞ்சப்படுகிறது.

இறந்தவர்களின் குடும்பத்துக்கு தலா 2 இலட்சம் நிவாரண உதவியை மாநில அரசு ஏற்கனவே அறிவித்து விட்டது.

கொல்கத்தாவில் கடந்த சில தினங்களுக்கு முன்புதான் வைத்தியசாலையில் ஏற்பட்ட தீ விபத்தில் 93 பேர் பலியானார்கள். அதற்குள் அங்கு மற்றொரு துயர சம்பவம் நிகழ்ந்துள்ளது. (அ-2)

## பாரதச் செய்திகள்

# முல்லைப்பெரியாறு அணையை 142 அடியாக உயர்த்த வேண்டும்

## சட்டப் பேரவையில் ஜெயா தீர்மானம்



முல்லைப்பெரியாறு அணை நீரானது தேனி, கம்பம், திண்டுக்கல், மதுரை, இராமநாதபுரம் மாவட்டங்களுக்கு வாழ்வாதாரமாக உள்ளது. தமிழ் நாட்டின் வளத்தை கெடுக்கும் நோக்கத்தில் இவ் அணை குறித்து கேரள அரசும் அரசியல் கட்சிகளும் வீண் புரளியை கிளம்பி வருகின்றன.

இது பலவீனமாக இருப்பதாகவும் அது இடிந்தால் கேரளாவில் பல ஊர்கள் மூழ்கி விடும் என்றும் தவறான தகவல்களை அவர்கள் கூறி வருகின்றனர். ஆனால், அணை உறுதியாக இருப்பதை உச்சநீதிமன்றம் உறுதி செய்துள்ளது. அணை நீர்மட்டத்தை 136 அடியில் இருந்து 142 அடியாக உயர்த்தலாம் என்றும் உத்தரவிட்டது. நேற்றுக் காலை 11 மணிக்கு தமிழக சட்டசபையின் சிறப்பு கூட்டம் தொடங்கியது. இதில் தே.மு.தி .க., தி.மு.க உள்ளிட்ட அனைத்து கட்சியினரும் கலந்து கொண் டனர்.

சபாநாயகர் முல்லைப் பெரியாறு அணை தொடர்பான அரசின் தனித்தீர்மானம் கொண்டு வருவதற்கான அறிவிப்பை வெளியிட்டார்.

அதைத் தொடர்ந்து முதல் அமைச்சர் ஜெயலலிதா முல்லைப்பெரியாறு அணை பாதுகாப்பாக இருக்கிறது. இந்த அணையின் மீது உள்ள உரிமையை தமிழ்நாடு விட்டுக் கொடுக்காது என்ற தீர்மானத்தை முன்மொழிந்தார்.

தே.மு.தி.க., தி.மு.க., மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு, இந்திய கம்யூனிஸ்டு, காங்கிரஸ் , பா.ம.க., புதிய தமிழகம், குடியரசு கட்சி உள்ளிட்ட அனைத்து கட்சி சார்பிலும் பேசியவர்கள் முல்லைப் பெரியாறு அணையால் தமிழ்நாட்டின் உரிமையை விட்டுக் கொடுக்க முடியாது என்று உரைநிகழ்த்தினார்.


நிறைவாக முல்லைப்பெரியாறு அணை மீதான உரிமை பற்றிய தனி தீர்மானத்தின் அவசியம் குறித்து முதல் அமைச்சர் ஜெயலலிதா விரிவாக பேசினார்.

அதில் முல்லைப்பெரியாறில் 142 அடி நீர்த்தேக்க கேரள பாசன சட்டத்தில் திருத்தம் தேவை. முல்லைப் பெரியாறு அணையில் மத்திய பொலிஸ் பாதுகாப்பு படையை நிறுத்த கேரள அரசு மறுக்கக்கூடாது உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

இதையடுத்து அனைத்துக் கட்சி ஆதரவுடன் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறுகிறது. இந்தத் தீர்மானம் மத்திய அரசுக்கு அனுப்பி வைக்கப் படுகின்றது. (அ-2)

# நான் எம்.எல்.ஏ. பதவியை துறந்தால் தமிழக எம்.பி.க்கள் பதவி விலக வேண்டும்

## விஜயகாந்த் ஆவேசம்



(தேனி)


முல்லைப்பெரியாறு பிரச்சினையில் மத்திய அரசின் பாராமுகத்தை கண்டித்து நான் எம். எல். ஏ. பதவியை இராஜினாமா செய்யத் தயார். அதேவேளை தமிழகத்தை சேர்ந்த 39 எம்.பி.களுக்கு இராஜினாமா செய்ய வேண்டும் என்று தேனியில் விஜயகாந்த் ஆவேசமாக உரையாற்றினார்.

இதில் விஜயகாந்த் பேசியதாவது, நான் முல்லைப்பெரியாறு அணை தண்ணீரை குடித்து வளர்ந்தவன். அதனால்தான் இப்பிரச்சினையில் உணர்வுடன் போராடுகிறேன். முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் 30 ஆண்டுகளுக்கும் மேலாக கேரளா தமிழகத்தை வஞ்சித்து வருகிறது.

எல்லா பிரச்சினைகளிலும் கருணாநிதியும் ஜெயலலிதாவும் ஒன்றுதான். அவர்களுக்கு மக்கள் மீது அக்கறை இல்லை. நான் மக்கள் மீது அக்கறை கொண்டவன் என்பதனால் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகிறேன். இப்பிரச்சினையில் கேரள அரசு தூங்கு வதை போல் நடிக்கிறது.

நான் மக்கள் நலனில் அக்க றை உள்ளவுன். இந்த விடயத்தில் நான் அரசியல் நடத்த விரும்பவில்லை. எவ்வளவோ கருத்து வேறுபாடுகள், முரண்பாடுகள் இருந்தாலும் முல்லைப்பெரியாறு அணை பிரச்சி னையில் நாங்கள் அனைத்து கட்சிகளுடனும் ஒருங்கிணை ந்து செயற்படுவோம். இப்பிரச்சினையில் மத்திய அரசு மந்தமாகவே செயற்படுகிறது என கருணாநிதியே கூறியிருக்கிறார். இதை தெரிந்து கொள்ள அவருக்கு எட்டு ஆண்டுகள் ஆகியிருக்கிறது.

முல்லைப்பெரியாறு அணை பிரச்சினையில் கேரள அரசின் அடாவடியினை மத்திய அரசு கண்டிக்க வேண்டும். உச்சநீதிமன்ற உத்தரவுப்படி செயற்பட அறிவுறுத்த வேண்டும். அணை பாதுகாப்பிற்கு மத்திய படையையோ, இராணுவத்தையோ நிறுத்த வேண்டும். இந்திய நதிகள் முழுவதையும் தேசிய மயமாக்க வேண்டும். அப்போதுதான் இந்த பிரச்சினை தீரும். கருணாநிதி நாங்கள் முடிவெடுப்போம் என்கிறார். தி.மு.க. இந்த விடயத்தில் விரைந்து முடிவெடுக்க வேண்டும் என்றார். (அ-2)



மறைந்த சஞ்சய்காந்தியின் பிறந்த நாளையொட்டி புதுடில்லியில் உள்ள அவரது நினைவிடத்திற்கு வருண் எம்.பி. மலரஞ்சலி செலுத்த வந்ததையும் அருகில் மேனகா நிற்பதையும் படத்தில் காணலாம்.

# குற்றவாளியான ஹோட்டல் முதலாளிக்கு உதவினார்

## ப.சிதம்பரம் மீது மேலுமொரு புகார்

(புதுடில்லி)

மத்திய உள்துறை அமைச்சர் ப.சிதம்பரம் மீது மேலும் ஒரு புதிய புகார் கிளம்பியிருக்கிறது. இந்த விவகாரத்தை கையிலெடுத்த அரசியல் கட்சியினர் நேற்று பாராளுமன்றம் இரு அவைகளிலும் எழுப்பியது. தொடர்ந்து ஏற்பட்ட அமளியில் பாராளுமன்றம் ஒத்தி வைக்கப்பட்டு பணிகள் பாதித்தது.

அமைச்சர் சிதம்பரம் கடந்த 2008 இல் நிதி அமைச்சராக இருந்த போது தொலைத் தொடர்பு துறையில் ஸ்பெக்ட்ரம் ஊழல் நடந்தது. இந்த ஊழலை தடுக்க தவறியதால் இதில் சிதம்பரமும் குற்றம் புரிந்துள்ளார் என குரல் எழுப்பி அவர் பதவி விலக வேண்டும் என கோரி வருகிறது. இந்நிலையில் டில்லியில் உள்ள ஒரு ஹோட்டல் அதிபருக்கு துணை போனதாக ஒரு ஆங்கில நாளிதழில் செய்தி பிரிசுரமானது.

இந்த அதிபர் மீது ஏமாற்று மற்றும் மோசடி வழக்கு பதியப்பட்டுள்ளது. இந்த வழக்கை திரும்பப் பெற சிதம்பரம் அமைச்சராக இருந்த போது நிர்ப்பந்தித்தார் என்று குற்றம் சாட்டுகிறது. மேலும் சிதம்பரம் சட்டத்தரணியாக பணியாற்றிய போது இந்த அதிபருக்கு ஆதரவாக நீதிமன்றத்தில் ஆஜராகி வாதாடியிருக்கிறார் என்றும் அதிபர் சிதம்பரத்தின் கட்சிக்காரர் என்றும் கூறப்பட்டுள்ளது. இதனை பா. ஜ. மற்றும் அ.தி. மு.க. வினர் பாராளுமன்றில் எழுப்பினர். அவர் பதவி விலக வேண்டும் என்று கோஷங்கள் எழுப்பினர். (அ-2)

அறிவுடையவர்கள் வேறொன்றும் இல்லாதவரானினும் எல்லாம் உடையவரே. அறிவில்லாதவர் எல்லாம் உடைய வரானினும் ஒன்றும் இல்லாதவரே – *திருவள்ளுவர்*

வலம்புரி
T.P. 021 567 1530
Web: www.valampurii.com
e-mail: editor@valampurii.com

## போராயுதம் போகட்டும் அறிவாயுதத்தை தூக்குவோம்

தீ பற்றி எரிகிறது. தீ ...தீ... இப்படி ஒருவர் கதறுகிறார்.

இன்னொருவரோ தீயைத் தணிப்பதற்கு வழி தேடுகிறார்.

தீ...தீ... என்று கதறி என்ன பயன்? தீயை எங்ஙனம் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவது எனச் சிந்தித்து சமயோசிதமாக செயற்படுவது அறிவின் பண்பட்டது.

எனவே கத்திக் கதறுவதைவிட, காத்திர மான செயற்பாட்டை எடுப்பதுமேல்.

தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் ஆயுதப் போராட்டத்தில் முப்பது ஆண்டுகளை தொலைத்துவிட்டனர்.

இவ்வாறான நீண்ட ஆயுதப் போராட்டத்திற் கான காரணம் சேர் பொன்.இராமநாதன் போன்ற தமிழ்த் தலைவர்கள் அறிவாயுதத்தை பிரயோகிக்கத் தவறியமையாகும்.

அவர்கள் நினைத்திருந்தால், தமிழ் மக்கள் சகல உரிமைகளோடும் வாழும் வகை பெற்றிருப்பர்.

ஆனால், சேர் பொன்.இராமநாதன் போன்றவர்கள் சிங்கள மக்களோடு சேர்ந்து வாழ முடியும் எனக் கருதினர்.

அவர்களிடம் சின்னத்தனம் இருக்கவில்லை. ஆனால் இந்த நாட்டின் முதல் பிரதமராக இருந்த டி.எஸ்.சேனநாயக்க உள்ளிட்ட அன்றைய சிங்களத் தலைவர்கள் தமிழ் மக்கள் தொடர்பில் கபடத்தனமாக நடந்துகொண்டனர்.

இதனால் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டனர். ஆயுதம் ஏந்திப் போராட வேண்டிய சூழ்நிலை உருவாகிற்று.

சர்வதேச சமூகத்தின் மாறுநிலைக் கொள்கைகள் எங்கள் ஆயுதப் போராட்டத்தின் ஆணி வேரை அறுத்துவிட எங்கள் நிலை மோசமானதாயிற்று.

எனினும் ஆயுதப் போராட்டத்தின் தோல்வி தமிழ்மக்களுக்கு கிடைக்கவேண்டிய உரிமையை இல்லாது செய்துவிட முடியாது.

ஆகவே போராயுதம் என்பதில் இருந்து விடுபட்ட நாம் அறிவாயுதத்தை ஏந்தவேண்டியவர்களாக இருக்கின்றோம்.

அறிவாயுதம் என்பது போராயுதம் வைத்திருப்பவரையும் வெற்றி கொள்ளக்கூடியது.

அறிவாயுதப் போராட்டத்தில் தோல்விக்கு இடமேயில்லை. அறிவாயுதப் போராட்டத்தில் இராஜதந்திரத்திற்கான வியூகம் என்பது முதன்மை பெறுகின்றது.

உதாரணத்திற்கு வெளிநாட்டுத் தூதுவர்கள் யாழ்ப்பாணத்திற்கு வருகை தந்து தமிழ் மக்களின் நிலைமைகளைக் கேட்கின்றனர்.

அவர்கள் யாரைச் சந்தித்தாலும் சந்திப்பவர்களுடன் நடத்துகின்ற கலந்துரையாடல்களில் இருந்தே தமிழ் மக்களின் சமகால நிலைமை பற்றி தீர்மானிப்பர்.

எனினும் இதுவிடயத்தில் நாம் ஒருமித்து எங்கள் அவல நிலையை கூறத் தலைப்பட்டோமா எனில் இல்லை என்பதே பதிலாக இருக்கும்.

எனவே இங்குதான் அறிவாயுதம் தேவைப்படுகின்றது. வெளிநாட்டுத் தூதுவர்கள் வருவதற்கு முன்னதாக அவர்கள் யார்? அவர்களிடம் எந்தப் பிரச்சினையை எடுத்துக் கூற வேண்டும். அவர்கள் எங்கள் தொடர்பிலும் அரசு தொடர்பிலும் கொண்டுள்ள உறவுநிலை யாது என்பது பற்றி முன்கூட்டியே ஆராய்ந்து திட்டமிட்டு அதன் பிரகாரம் ஒத்த கருத்தை முன்வைக்க வேண்டும்.

இதைவிடுத்து தேடிவந்த தூதுவர்களிடம் சொல்லவேண்டியதை சொல்லாமல் விட்டு விட்டு, தேவையற்றதை கதைப்பது எங்கள் மீட்சியை நாங்களே தடுத்து நிறுத்துவதற்கு ஒப்பானதாகும்.

# ஆறுமுகநாவலர் காட்டிய வழியில் நடப்போம்



யாழ்ப்பாணம் நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் பிறந்திலரின் தீந்தமிழ் தீயுடன் சங்கமமாகியிருக்கும். தமிழ்மொழியைக் காத்து பாமரமக்களின் கையில் கொடுத்த பெருந்தகை அவர். தனது மனதில் உதித்தவற்றை அஞ்சாநெஞ்சுடன் வெளியிட்ட மாமனிதர். தமிழையும் சமயத்தையும் இரு கண்களாகப் போற்றிய நன்நெறியாளர். அவரது நினைவு தினம்– குருபூசை தினம் இன்றாகும்.

குருபூசைக்கு விழா எடுப்பதற்கு மட்டும் நாவலரை நினைவுபடுத்துவதனால் விளையப்போவது ஒன்றுமில்லை. விழா என்ற பெயரில் உச்ச அளவாக நாற்பது வயோதிபர்கள் கூடி நாவலர் அதைச் செய்தார், இதைச் செய்தார் என்று பேசி முழங்கி உண்டு ,மகிழ்ந்து விட்டால் போதுமா? நாங்கள் என்ன செய்கிறோம் என்று நினைத்துப் பார்க்க வேண்டாமா? நாவலர் இன்றிருந்தால் தினமும் கண்டன அறிக்கைதான் வெளியிடுவார்.

இன்றைய தமிழ்சமூகம் குறிப்பாக யாழ்ப்பாணச் சமூகம் எங்கே போகிறது? என்று சிந்தித்துச் செயற்படவேண்டும். நமது தாய்மொழி காணாமல் போய்க் கொண்டிருக்கிறது. உயர் சைவ வாழ்வோ கேள்விக் குறியாக்கப்படுகிறது. தமிழர்களின் அடையாளம் அழிந்து வருகிறது. நாவலர் இவற்றைப் பார்த்து மௌனமாக இருந்திருப்பாரா? சிந்திப்போம்.

இன்று தாய்மொழிச் சிந்தனை மறைந்து வருகிறது. நல்ல தமிழ் நூல்களைப் படிப்பதற்கு மாணவர்கள் தயாரில்லை. மாணவர்களிடையே தமிழ் நூல்களை வாசிக்கும் பழக்கத்தை ஏற்படுத்த வேண்டும். இதனைச் செய்யத்தவறின் பாரதி பாடலில் இடம்பெற்றது போல மெல்லத் தமிழ் இனிச்சாகும் எனும் வார்த்தை பேதை உரைத்திட்ட மொழியாக இல்லாமல் உண்மையாகி விடும். ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் உரை நடைசெய்த வள்ளல் ஆவார். தமிழ் மொழியைக் காப்பதற்கு அவர் கையாண்ட வழிதான் உரை நடையாக்கம். பண்டிதர் கையில் இருந்த தமிழை பாமரர் அறிய வேண்டும் என்ற தூய நோக்கு அவரிடமிருந்தது.

மனம்,வாக்கு,காயம் எனும் மூன்றினாலும் இறைவனை முறைப்படி வழிபடுதல் விரதமாகும் என்பது சைவ வினா விடையில் விரதம் என்றால் என்ன? என்ற வினாவுக்கு நாவலர் எழுதிய பதிலாகும். மனதிற்கே முக்கிய இடம் கொடுத்தார். காரணம் வழிபாட்டு முறைகள் கிரியைகளாக மட்டும் இருக்கக்கூடாது என நினைத்தார். ஆனால் இன்று சங்காபிஷேகமும் கும்பாபிஷேகமும் தடல்புடலாக நடைபெறுகிறது. மனித மனதிற்கு எதுவித சம்பந்தமும் இருப்பதாகத் தெரியவில்லை. அந்தணர்களை மட்டும் குறைகூறுவதனால் பயனில்லை. இடாம்பீக வேலைகளைச் செய்யும் சமயிகள் திருந்த வேண்டும். நாற்பது ஆண்டுகளாக துன்பத்தினால் உருமாறியுள்ள தமிழ்ச் சமுதாயத்தில் சேதமடைந்துள்ள பாடசாலைகள், சனசமூக நிலையங்கள் எத்தனை? யாராவது ஒரு பாடசாலையை கட்டுவதற்கு அல்லது திருத்திப் பழைய நிலைக்கு கொண்டு வருவதற்கு நினைக்கிறார்களா? இடிந்த பாடசாலைக்கு அருகில் நல்ல நிலையில் உள்ள கோயிலுக்கு மைபூசுவதனால் என்ன பயன்? இது ஒரு புறம்; மறுபுறம் மூன்று வேளையும் சிவபூசை.நாவலர் இன்றிருந்தால் இவற்றுக்கு எதிராக சிவசேனை ஒன்றை உருவாக்கி இளைஞர்களின் கையில் கொடுத்திருப்பார்.

பிறப்பால் அரிஜனராகப் பிறந்த திருநீலகண்ட யாழ்ப்பாணரையும் அவர் மனைவியையும் கூடவே அழைத்துச் சென்ற திருஞானசம்பந்தரும் திருநீலகண்டர் தம்பதிகளை சாமியறையில் தூங்குவதற்கு அனுமதித்த வேதியர் பற்றியும் பேசியுள்ள சைவசமயத்தைக் கடைச் சரக்காக்காதீர்கள். சைவ சமயத்தின் சிறப்பு சாதி, சமய வேறுபாடின்றி சமுதாயத்திற்கு பயனுள்ள பணி செய்வது தான்!

தமிழர்களின் கலாசாரப் பண்பாடுகள் திசை மாறிச் செல்கின்றன என்பதை பேசியும் எழுதியும் வருகிறார்கள். இதற்கு சமய நிறுவனங்கள் ஒன்றுபட்டு பிரசார இயக்கங்களை ஆரம்பித்து விழிப்புணர்வை ஏற்படுத்தி இருண்ட உலகிலிருந்து இளம் சமூகத்தினரைக் காப்பாற்ற முன்வரவேண்டும். நாவலர் வழி நடப்போம் எனக் கூறும் நிறுவனங்கள், சபைகள் ஒருமுகமாக ஒற்றுமைப்பட்ட நிறுவனமாகச் செயற்படுத்துவதற்கு முன் வரவேண்டும்.

**சொல்லின் செல்வர் இரா.செல்வவடிவேல்**

## அறிந்து கொள்ள வேண்டிய ஆன்மீகத் தகவல்கள்

### விநாயகரின் உருவத் தத்துவம்

தெய்வ அம்சங்கள் ஒவ்வொன்றுக்கும் ஓர் அர்த்தம் இருக்கும். விநாயகரின் உருவ அமைப்பில் இருக்கும் தத்துவங்கள் ஐந்தும் பெரும் சக்தியை காட்டுவதாகும். மடித்து வைத்துள்ள ஒரு பாதம் பூமியையும் சரிந்த தொந்தி நீரையும் அவரது மார்புப்பகுதி நெருப்பையும் இரண்டு புருவங்களின் இணைந்த அரைவட்டவடிவம் காற்றையும் அவற்றினுள் நடுவே வளைந்துள்ள கோடு ஆகாயத்தையும் குறிப்பதாகவும் அமைகின்றன. விநாயகர் பஞ்ச பூத சந்திரன் அம்சமானவர் ஆவார். மனிதனின் மனதை வெளிப் படுத்துவதாகவும் அமைந்துள்ளது. மனிதனிடம் இருக்கும் விலங்குகுணம் , குழந்தைமனம், அருள்தன்மை, பெருந்தீனி, முரட்டுத்தனம், மென்மையான குணம் போன்றவற்றையும் வெளிப்படுத்தும் உருவமாக இருக்கிறார் விநாயகர்.

## வெள்ளி நற்சிந்தனை

50

## செவ்வியல் தமிழில் சீர்மியம்

அறிவு என்பது எல்லாவற்றையும் தெளிவாக அறியும் நிலையாகும். சிறப்பாக இறைவனை அறியும் ஆற்றலை மெய்யறிவென்பர். ஏனைய உயிர்களைவிட மனிதரிடம் பகுத்தறிவு என்னும் உயர்ந்த அறிவும் உண்டு. அந்த அறிவைக்கொண்டு நல்லது கெட்டது பகுத்தறிய முடியும். இறையடியார்கள் மெய்யறிவு பெற்றவர்கள். ஆனால் மாணிக்கவாசகரோ தன்னுடைய அறிவு நிலை பற்றிச் சற்று தாழ்வான நினைப்புடனேயே வாழ்ந்து கொண்டிருந்தவர் என்பதை அவரது பாடல் மூலமே அறியக்கிடக்கிறது. இறைவன் அறிவே உருவானவன். அறிவது என்பது இய பாகவே எல்லாம் அறிபவன் என்னும் இறைவனுடைய இறைமைக் குணத்தைக் குறிப்பதாகும்.

மணிவாசகர் இறைவனை **அறிவனே** என அழைத்து தனது குழப்பமான நிலையை விளக்குகின்றார். அமுது அதனை உண்பாரை நரை, திரை, மூப்பு, சாக்காடு இன்றி இனிதாக வாழச் செய்வது இறைவன் தம்மை அடைந்த பக்குவமடைந்த ஆன்மாக்களுக்கு பேராவொளியாப் பிரிவில்லா, மறவா, நினையா அளவில்லாத இன்பங்களை அருளுவதால் மணிவாசகரால் இறைவனே என அழைக்கப்படுகின்றார். இத்தகைய உயர்ந்த குணங்களையும்சிறப்புக்களையும் உடைய இறைவன் கீழ்மையான நாயை போன்ற என்னை அறியத்தக்கவன் என்று ஆட்கொண்டமை வியப்பாகவுள்ளது. இறைவனை நான் முதலில் கண்டபோது அறிவற்றவனாகவே இருந்தேன். அப்படியிருந்தும் என்னை எப்படி இறைவன் ஆட்கொண்டருளினான் என்பதே மணிவாசகருடைய சிந்தனையாகும்.

தனக்கு அறிவு இருக்கின்றது என்பதைத் திருவுள்ளத்தில் கொண்டே இறைவன் ஆட்கொண்டிருந்தால் அந்த அறிவை நான் எப்படி இழந்தேன்? என மணிவாசகர் எண்ணுகிறார். இவ்வாறு தன்னை தகுதியற்றவன் என அவர் நினைப்பதற்கும் ஒரு காரணம் உண்டு. இறைவனால் ஆட்கொள்ளப்பட்டு மெய்யுணர்வு அடைந்த நிலையில் தனது முன்னைய நிலையையும் எண்ணிப்பார்க்கிறார். அறிவுடையவன் என்பதை இறைவன் ஆட்கொண்ட போது உணர்ந்தார். ஆட்கொண்டமையால் இறைவனை பிரிய விரும்பாதிருந்தார்.

ஆனால் பின்னர் பிரிந்துவிட்டார். அதனால் மீண்டும் அறிவில்லாதவனாகி விட்டதாக கூறுகின்றார். ஆண்ட நாள் கண்டது அறிவிலாமை அன்றே என்னும் அடிகளில் மணிவாசகர் தன்னுடைய முன்னைய நிலையை நன்கு விளக்கிக் கூறுகின்றார். எனவே இப்போது மீண்டும் இறைவனை பிரிந்து விட்டமையால் நான் அறிவனோ? அல்லனோ? என வினாவுகிறார். அவருடைய உள்ளத்தில் இத்தகைய வினாவை கேட்டு இறைவனை மீண்டும் காண விழைகிறார். நிச்சயமாக நான் அறிவற்றவனாக இருக்கின்றேன் என்ற முடிவுக்கு வருகிறார். எனவே மீண்டும் தன்னை இறைவன் ஆட்கொள்ள வேண்டுகிறார்.

**கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ்**

இந்த நிலை உலக வாழ்க்கையில் எல்லோருக்குமே ஏற்படுவது. அறிவு நிலையிலே செயற்பட்டு பின்னர் அறிவற்ற நிலையிலே ஓய்ந்திருக்கும் ஒரு நிலை. இதனையே மணிவாசகர் சுட்டிக் காட்டுகிறார். இறையன்பு கொண்டுவாழும் வர்ழ்க்கையில் நினைப்பற வாழ வேண்டும் என்பதையே தனது வாழ்வியலனுபவத்தின் மூலம் உணர்த்துகிறார்.

*அறிவனே அமுதே யடி நாயினேன்*
*அறிவனாகக் கொண்டோ எனை ஆண்டது*
*அறிவிலாமை யன்றே கண்ட தாண்ட நாள்*
*அறிவனோ அல்லனோ அருளீசனோ*

# இன்டர்நெட் இணைப்பு எவ்வாறு தொழிற்படுகின்றது?




எங்கோ ஒரு மூலையில் இயங்கும் கணனியில் உள்ள தகவலை, பாட்டை, சினிமாவை விளையாட்டை எப்படி இன்டர்நெட் நம் கணனிக்குக் கொண்டு வருகின்றது? என்ற கேள்வி இன்டர்நெட்டைப் பயன்படுத்தும் அனைவருக்கும் இருக்கும். தெளிவான மற்றும் நிறைவான பதில் கிடைக்காததால் கேள்வியாகவே தொடரும் நிலையும் உள்ளது. இங்கு எப்படி உங்கள் கணனியை இன்டர்நெட் மூலம் தகவல்கள் வந்தடைகின்றன என்று பார்க்கலாம்.

கணனியை இயக்கி இன்டர்நெட் இணைப்பை உயிர்ப்பித்து பிரவுசரின் அட்ரஸ் பாரிஸ் ஓர் இணையத்தளத்தின் முகவரியை டைப் செய்து என்டர் தட்டுகிறீர்கள். பிரவுசர் எதுவாக வேண்டுமானாலும் இன்டர்நெட் எக்ஸ்புளோரர், மோஸில்லா பயர்பொக்ஸ், சபாரி, கிரேஸி பிரவுசர், பிளாக்.. என எதுவாக வேண்டுமானாலும் இருக்கலாம். இதனை கிளையண்ட் என அழைக்கின்றோம். தற்போதைக்கு வாடிக்கையாளர் என வைத்துக் கொள்வோம். இந்த வாடிக்கையாளர் நீங்கள் தேவை என்று சொன்ன இணையதளம் வேண்டும் என்று சொன்ன உங்கள் வேண்டுகோளை உங்களுக்கு இன்டர்நெட் இணைப்பு தரும் நிறுவனத்தின் சேர்வருக்கு அனுப்புகிறது. அந்த சேர்வர், தான் இணைக்கப்பட்டுள்ள இன்னொரு சேர்வருக்கு அதனை அனுப்புகிறது. அந்த சேர்வரும் அரசாங்க அலுவலகத்தில் ஒரு பைல் மேசைக்கு மேசை போகிற மாதிரி அப்படியே அனுப்புகிறது.

ஐ.எஸ்.பி. சேர்வரிலிருந்து இந்த வேண்டுகோள் வெரி ஹை ஸ்பீட் நெட்வேர்க் என்னும் அதிவேக வழியில் செல்கிறது. இப்படியே சென்று நீங்கள் டைப் செய்த முகவரி உள்ள தளத்தை அடைகிறது. அதனை உபசரிப்பவர் என்று வேண்டுமானால் வைத்துக் கொள்ளலாம். அந்த உபசரிக்கும் சர்வர் பின் நீங்கள் கேட்டுக் கொண்டபடி தன் தளத்தில் உள்ள தகவல்களை பொக்கெற் பொக்கெற்றாக உங்கள் வேண்டுகோள் பயணித்த அதே பாதையில் உங்கள் ஐ.எஸ்.பி.நிறுவனத்தின் சேர்வருக்கு அனுப்புகிறது.


நீங்கள் இணைப்பு பெற்றிருக்கும் இந்த நிறுவன சேர்வர் பின் அதனை உங்கள் கணனிக்கு அனுப்புகிறது. இவ்வளவு தானா என்று நீங்கள் கேட்பது புரிகிறது. ஆனால், விடயம் அவ்வளவு எளிது அல்ல. இதில் ஏகப்பட்ட சிக்கல்கள் உள்ள விடயமும் உள்ளது.

நாம் ஒரு இணையதளத்தின் முகவரியை சொற்களில் அமைத்து அனுப்புகிறோம். இந்த சொற்கள் கணனிக்கு தெரியாதே? எனவே தான் கணனியில் அறிந்து புரிந்து கொள்ளும் பாஷையில் மாற்றி அனுப்ப வேண்டியுள்ளது. இதற்கு புரோட்டோகால் என்னும் வழிமுறை உதவுகின்றது. புரோட்டோகால் என்பது இரண்டு கணனிகள் இடையே தகவல் பரிமாறிக் கொள்ள அமைக்கப்பட்ட சிஸ்டம் எனச் சொல்லலாம்.

இது பி.சி.பி., ஐ.பி., எச்.டி.டி.பி., எப்.டி.பி., எஸ்.எம்.டி.பி. மற்றும் வை–பி (TCPIP,HTTP, FTP, SMTP WiFi) எனப் பலவகைப்படும். நாம் பொதுவாக ரி.சி.பி.– ஐ.பி. பயன்படுத்துவதால் அது குறித்து காண்போம்.

இன்டர்நெட்டில் இணைக்கப்படும் ஒவ்வொரு கணனிக்கும் ஒரு ஐ.பி. அட்ரஸ் தரப்படுகின்றது. இது சொல்லில் இருக்காது. 0 லிருந்து 255 வரையிலான எண்களின் கோர்வையாக இருக்கும். எடுத்துக்காட்டாக www. yahoo. com என்னும் தளம் உள்ள சேர்வரின் எண் 82.248.113.14 ஆகும். இது இதன் நிலையான எண். உங்கள் கணனி நெட்டில் இணையும்போது உங்களுடைய ஐ.எஸ்.பி. உங்களுக்கு ஒரு முகவரியை எண்களில் ஒதுக்கும்.

ஆனால், அது நிலையானது அல்ல. நீங்கள் அப்போது இன்டர்நெட்டில் இருக்கும் வரையில் அந்த முகவரி உங்களுக்குச் சொந்தமானது. முடித்துவிட்டு மீண்டும் செல்கையில் மீண்டும் ஒரு முகவரி வழங்கப்படும். இதற்குக் காரணம் ஒரு ஐ.எஸ்.பி. ஒரே நேரத்தில் நூற்றுக்கணக்கான கணனிகளை நெட்டில் இணைக்க வேண்டியுள்ளதால் அவ்வப்போது எண்கள் தரப்படுகின்றன.




இந்த எண்களின் கோவை நான்கு இலக்கங்களால் ஆன தொடராக ஒவ்வொரு எண்ணும் ஒரு புள்ளியால் பிரிக்கப்பட்டிருக்கும். எடுத்துக்காட்டாக 123.467.87.23 என்று கூட இருக்கலாம். இந்த எண்களிலான முகவரி முக்கியமானது. ஏனென்றால் இந்த முகவரியை வைத்துத்தான் இன்டர்நெட்டில் எந்த கணனி வேண்டுகோளை வைத்தது. எந்த கணனியிலிருந்து தகவல் வர வேண்டியுள்ளது என்று தெரியவரும். சி.பி. (Transmission Control Protocol) என்பது அனுப்பப்படும் தகவல்களைக் கையாளும் வழிமுறை தகவல்களை சிறு சிறு பொக்கெட்களாகப் பிரித்துப் பின் மீண்டும் சேரும் இடத்தில் அவற்றை இணைத்து ஒழுங்காகத் தருவதே இந்த வழிமுறையின் செயற்பாடு.

ஐபி அட்ரஸ் எங்கிருந்து எங்கு இந்த தகவல்கள் போய்ச்சேர வேண்டும் என்பதை உறுதி செய்கின்றன. எனவே இந்த இரண்டு வழிமுறைகளும் இணைந்து தகவல் பரிமாற்றத்தை உறுதி செய்கின்றன.

### அதென்ன தகவல் பக்கற்?

இன்டர்நெட் என்பது பக்கெற் ஸ்விட்ச் நெட்வேர்க் என அழைக்கப்படுகின்றது. இதற்கு மாறான நெட்வேர்க் சர்க்யூட் ஸ்விட்ச் நெட்வேர்க் என அழைக்கப்படுகின்றது. சர்க்யூட் ஸ்விட்ச் நெட்வேர்க்கில் இணைப்பு ஏற்படுத்துகையில் அந்த இணைப்பை மற்றவர்கள் பயன்படுத்த முடியாது. ஆனால், பக்கெட் ஸ்விட்ச் நெட்வேர்க்கைப் பலர் பகிர்ந்து கொள்ள முடியும்.

ஒரே நேரத்தில் பலர் கேட்கும் தகவல்கள் பிரித்து அனுப்பப்படுகின்றன. இவை அதனதன் சேரும் இடத்தைச் சேர்ந்த வுடன் ஒன்றாக இணைக்கப்பட்டு கேட்பவரிடம் தரப்படுகின்றன.




ஒவ்வொரு பக்கெற் தகவலிலும் ஏறத்தாழ 1500 கரக்டர்கள் கொண்டதாக இருக்கும். ஒவ்வொரு பக்கெற்றிலும் ஹெடர்கள் அமைக்கப்பட்டு அனுப்பப்படுகின்றன. இந்த ஹெடர்களில் இந்த பக்கெற்கள் எப்படி இணைக்கப்பட வேண்டும் என எழுதப்பட்டிருக்கும். அதற்கேற்ற வகையில் இவை இணைக்கப்படும்.

ஒரு எடுத்துக் காட்டைப் பார்ப்போம். பழைய காலத்து அகலமான திறப்பு கொண்ட கடைகளில் அகலமான கதவு இருந்தால் அதனை திறந்து வைத்தால் அதிக இடம் பிடிக்கும் என்பதால் சிறுசிறு பலகைகளை மேலும் கீழும் அவற்றைக் கொள்வதற்கான சிறிய பள்ளங்களை ஏற்படுத்தி செருகி பின் ஒரு பெரிய இரும்பு பாளத்தில் இணைத்து பூட்டு போடுவார்கள்.

காலையில் இதனைத் திறந்தவுடன் இந்த பலகைகளைக் கழற்றி ஒன்றன் மீது ஒன்றாக அடுக்கி வைத்திடுவார்கள். மீண்டும் க்டையைப் பூட்டுகையில் சரியாக வைப்பதற்காக கதவில் எண் அல்லது வேறு குறியீடுகளை அமைத்திருப்பார்கள். இதே போல் தான் சிறுசிறு பொட்டலங்களில் தகவல்கள் செலுத்தப்படுகின்றன. தேவை எனக் கேட்ட கணனியை அடைந்தவுடன் அவை ஒன்று சேர்க்கப்பட்டு தரப்படுகின்றன. ஒவ்வொரு ஹெடரிலும் செக்சம் (Checksum) எனப்படும் ஒரு எண் தரப்படும். இந்த எண் மூலம் வரவேண்டிய தகவல் சிந்தாமல் சிதறாமல் வந்து விட்டதா என்று அறியப்பட்டு இணைக்கப்படும். இந்த வேலையை ரி.சி.பி. வழிமுறை செயற்படுத்துகிறது.

இப்போது முதல் செயலுக்கு வருவோம். நீங்கள் சொற்களில் டைப் செய்திடும் முகவரி எந்த இடத்தில் எண்களாகக் கணனிக்கு ஏற்றபடி மாறுகிறது? நீங்கள் டைப் செய்த முகவரியை வைத்துக் கொண்டு உங்கள் ஐ.எஸ்.பி.சேர்வர் டொமைன் நேம்சேர்வர் (Domain Name Server DNS) என்ற ஒன்றை நாடுகிறது. இந்த சேர்வரே நீங்கள் தந்த முகவரியின் பெயரின் அடிப்படையில் தேடுதலைச் சுருக்கித் தேடி முகவரிக்கான எண் தொகுப்பை ஐ.எஸ்.பிக்கு வழங்குகிறது.

பின் அந்த எண் முகவரியை அடிப்படையாகக் கொண்டு இன்டர்நெட்டில் தேடல் தொடங்கி குறிப்பிட்ட சேர்வரை அடைகிறது. பின் முன்பு கூறியபடி தகவல்கள் கிடைக்கின்றன.




# கணனியின் போர்ட்கள்



கணனி ஹார்ட்வெயர் குறித்து பேசும் போதெல்லாம் போர்ட் (Port) என்ற சொல்லை அடிக்கடி பயன்படுத்துகின்றோம். இது எதனைக் குறிக்கிறது? கணனிக்கு ஒரு போர்ட் கட்டாயம் தேவையா? அது இல்லாமல் கணனியால் செயற்பட முடியுமா என்று யாரும் கேள்வி கேட்பதில்லை. ஆனால் இதற்கான பதில் ஒரு பெரிய ஆம் தான். நாம் கணனியில் உள்ள போர்ட்கள் கணனியுடன் பல துணை சாதனங்களை இணைக்க உதவுகின்றன. உங்கள் கணனியில் பின் முன் மற்றும் பக்க வாட்டில் பல்வேறு அமைப்புகளில் உள்ள துளைகள் தான் கணனியின் போர்ட்கள் ஆகும். இவை லப் டாப் மற்றும் பிற கணனிகளிலும் உண்டு.

### போர்ட்களின் வகைகள்

கணனியில் உள்ள போர்ட்களைப் பார்க்கையில் முதலில் நம் கவனத்தை கவரும் ஓர் அம்சம் அவை அனைத்தும் ஒரே மாதிரியாக இருப்பதில்லை என்பதுதான். அடிக்கடி நாம் பயன்படுத்தும் ஒரு போர்ட் யு.எஸ்.பி. USB போர்ட் தான். இது ஒரு தடிமன் குறைந்த செவ்வக வடிவான போர்ட்.

இதனுள் கறுப்பு அல்லது வெள்ளை வண்ணத்தில் பொருள் இருப்பதனைக் காணலாம். பொதுவாக இப்போது வடிவமைக்கப்படும் கணனிகளில் மூன்று அல்லது நான்கு யு.எஸ்.பி போர்ட்கள் தரப்படுகின்றன. இதனால் துணை சாதனங்களை இணைக்க முடியும். பிரிண்டர், கீ,போர்ட், மவுஸ், பிளாஷ் ட்ரைவ், மொபைல் போன், டிஜிட்டல் கேமரா என இந்த சாதனங்களின் வகைகளும் எண்ணிக்கையும் ஏராளம்.


அடுத்த வகை போர்ட் வி.ஜி.ஏ. (VGA) போர்ட் .இது ஒரு (D) வடிவில் இருக்கும் போர்ட் ஆகும். இதில் மூன்று வரிசைகளில் 15 துளைகளைக் காணலாம். இதில் மொனிட்டர் ஒன்றை கணனியுடன் இணைக்கலாம். லப்டொப் கணனிக்கு மொனிட்டர் ஒன்றை இணைக்க வேண்டிய தேவை இல்லை. உபரியாகவோ அல்லது லப்டொப் திரை கெட்டுப் போகும் போது மொனிட்டரை இணைத்துப் பார்க்க வேண்டிய தருணம் ஏற்படலாம். அப்போது அதற்கான போர்ட் தேவைப்படும். கணனியில் இன்னும் சில வகை போர்ட்கள் உள்ளன. அவற்றுள் Fire Wire, HDMI மற்றும் Ethernet ஆகியவை அடங்கும். கணனிக்கான துணை சாதனம் ஒன்றை அதனுடன் இணைக்க விரும்புகையில் அப்படி ஒரு சாதனத்தை வாங்க முற்படுகையில் அதற்கான போர்ட் வகை அதில் உள்ளதா என முதலில் தெரிந்து உறுதி கொள்ள வேண்டும். இல்லையேல் வாங்கிய பின்னர் வருந்தி பயனில்லை.

பின்னர் இரு வகை போர்ட்களை இணைக்கும் இணைப்பியைத் தேட வேண்டியதிருக்கும். அனைத்து வகை போர்ட்களையும் இணைக்கும் கனெக்டர்கள் அவ்வளவாகக் கிடைப்பதில்லை.

### போர்ட்கள் ஏன் தேவைப்படுகின்றன?

அனைத்து வகை கணனியிருக்கும் போர்ட்கள் கட்டாயமாகத் தேவைப்படுகின்றன. பல துணை சாதனங்கள் அவற்றை ஏதேனும் ஒரு போர்ட் மூலம் கணனியுடன் இணைக்கப்பட்டால் அவை செயற்பட மாட்டா. இக்காலத்தில் வயர் கொண்டு இணைக்கப்படாமலேயே பல சாதனங்களை இணைத்துச் செற்படுத்த முடியும். (தொடரும்)

# பில்லாண்டர், ஸ்ரையன் மிரட்டலில் பணிந்தது இலங்கை அணி




(சென்சூரியன்)

பில்லாண்டர், ஸ்ரையனின் வேகத்தில் சிக்கி இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 180 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையுமிழந்தது.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்ஸில் ஒரு விக்கெட்டையிழந்து 90 ஓட்டங்களை எடுத்த நிலையில் நேற்றைய முதல் நாள் ஆட்டம் நிறைவடைந்தது.

தென்னாபிரிக்காவுக்கு சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள இலங்கை அணி 3 டெஸ்ட், 5 ஒரு நாள் போட்டிகள் கொண்ட



தொடரில் விளையாடுகின்றது.

இதில் முதலாவது டெஸ்ட் நேற்று சென்சூரியனில் ஆரம்பமானது. இப்போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற தென்னாபிரிக்க அணித்தலைவர் சிமித், முதலில் துடுப்பெடுத்தாடும் வாய்ப்பை இலங்கை அணிக்கு வழங்கினார்.

இதன்டிப்படையில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணிக்கு ஆரம்பமே அதிர்ச்சியாகஅமைந்தது.

ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் திலகரட்ண டில்சான் 6 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். அடுத்து வந்த குமார் சங்கக்கார ஒரு ஓட்டத்துடன் வெளியேறஇலங்கையணி 12 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுகளையிழந்தது.

இந்நிலையில் 3வது விக்கெட்டுக்காக பரணவிதானவுடன் இணைந்த மஹேல ஜெயவர்த்தன நிதானமாக ஆடி நம்பிக்கை அளித்தார்.

இந்த ஜோடி 54 ஓட்டங்களை இணைப்பாட்டமாக சேர்த்த போது பரண விதான 32 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார்.

அடுத்து திலான் சமரவீர களமிறங்க மறுமுனையில் மஹேல ஜெயவர்தன 30 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்க இலங்கை அணி 91 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையிழந்து தடுமாறியது.

எனினும் 5ஆவது விக்கெட்டுக்காக இணைந்த சமரவீர - மத்யூஸ் ஜோடி சிறப்பாக ஆடி ஆறுதலளித்தனர்.

இந்த ஜோடி 5ஆவது விக்கெட்டுக்காக 65 ஓட்டங்களைப் இணைப்பாட்டமாகப் பகிர்ந்தபோது சமரவீர 36 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்தார். தொடர்ந்து சில்வா பூச்சியத்துடனும் திசார பெரேரா ஒரு ஓட்டத்ததுடன் வெளியேறினார்.

அடுத்து சிறப்பாக ஆடி நம்பிக்கையளித்த அஞ்சலோ மத்யூஸ் 52 பந்துகளில் (6 பவுண்டரிகள் உட்பட) 38 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

தொடர்ந்து வந்த பின்வரிசை வீரர்கள் சொற்ப ஓட்டங்களுள் ஆட்டமிழக்க இலங்கை அணி முதலாவது இன்னிங்ஸில் 180 ஓட்டங்களை எடுத்து சகல விக்கெட்டுக்களையும் இழந்தது.

பந்துவீச்சில் தென்னாபிரிக்க அணி சார்பாக பில்லாண்டர் 53 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுக்களையும் ஸ்ரையன் 18 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுக்களையும் இம்ரான் தாஹீர் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

தொடர்ந்து துடுப்பெடுத்தாடிய தென்னாபிரிக்க அணிக்கு ருடொல்ப் - சிமித் ஜோடி அற்புதமான ஆரம்பத்தை வழங்கினர்.

இதில் அணித்தலைவர் கிரேகம் சிமித் 80 பந்துகளில் அரைச் சதம் அடித்தார். எனினும் சிமித் 105 பந்துகளில் (7 பவுண்டரிகள் உட்பட) 61 ஓட்டங்களை எடுத்து ஆட்டமிழந்தார்.

இந்நிலையில் முதல் நாள் ஆட்டம் நிறைவடைய தென்னாபிரிக்க அணி முதலாவது இன்னிங்சில் ஒரு விக்கெட்டை இழந்து 90 ஓட்டங்களை எடுத்தது.

இப்போட்டியின் 2ஆம் நாள் ஆட்டம் இன்றாகும்.

## 6 வருடங்களின் பின்

# டெஸ்ட் தரவரிசையில் இலங்கை பின்னடைவு

சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் அணிகளுக்கான தரப்படுத்தலில் இலங்கை அணி கடந்த 6 வருடகாலத்தில் முதல் தடவையாக 100 தரவரிசைப் புள்ளிகளுக்கு கீழே சென்றுள்ளது.

ஐ.சி.சி யின் புதிய தரவரிசைப்பட்டியலின் படி, திலகரட்ன டில்சான் தலைமையிலான இலங்கை அணி 99 தரப்படுத்தல் புள்ளிகளைப் பெற்று 5வது இடத்தில் உள்ளது.

இலங்கை அணி இதற்கு முன் டெஸ்ட் தரப்படுத்தலில் 100 தரவரிசைப் புள்ளிகளை விட குறைவாக பெற்றிருந்தது 2006 யூலை மாதத்திலாகும். சொந்த மண்ணில் நடைபெற்ற பாகிஸ்தானுடனான டெஸ்ட் தொடரில் தோல்வி அடைந்ததையடுத்து இலங்கை அணிக்கு அப்பின்னடைவு ஏற்பட்டது.

அதன்பின், மாவன் அத்துப்பத்துவிடமிருந்து மஹேல ஜயவர்த்தன தலைமைப் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட பின், இலங்கை அணியின் தரப்படுத்தல் புள்ளிகள் அதிகரித்தன. 2009ஆம் ஆண்டு டெஸ்ட் அணிகளுக்கிடையிலான தரப்படுத்தல் புள்ளிகளுடன் 120 புள்ளிகளுடன் 2-ம் இடத்திற்கு முன்னேறியமை குறிப்பிடத்தக்கது.

அதன் பின் ஐ.சி.சி டெஸ்ட் தரப்படுத்தல் பட்டியலில் இலங்கை அணி ஏற்றத்தாழ்வுகளை கொண்டிருந்தாலும்100 இற்கு மேற்பட்ட தரவரிசைப் புள்ளிகளைக் கொண்டிருந்தது.

இப்பட்டியலில்இங்கிலாந்துஅணி 125 புள்ளிகளுடன் முதல் இடத்திலும், இந்தியா 118 புள்ளிகளுடன் இரண்டாமிடத்திலும் தென்னாபிரிக்கா 116 புள்ளிகளுடன் மூன்றாமிடத்ததில் உள்ளன.

அவுஸ்திரேலியா 103 புள்ளிகளுடன் 4ஆம் இடத்தில்உள்ளது.பாகிஸ்தான் 98 புள்ளிகளுடன் 6ஆம் இடத்தில் உள்ளது. மேற்கிந்திய அணி 7ஆம்இடத்திலும், நியூஸிலாந்து 8வது இடத்திலும் பங்களாதேஷ் 9 ஆவது இடத்திலும் உள்ளன.

# அமைச்சர் வெல்கம - விஜயகலா எம்.பி சம்பாஷணையால் சபையில் சிரிப்பொலி

போர்குவரத்து அமைச்சு மீதானகுழுநிலை விவாதத்தின் போது ஐ.தே.கவின் யாழ்.மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரான விஜயகலா மகேஸ்வரனுக்கும் அமைச்சர்களான குமார் வெல்கம, சி.பி.ரத்நாயக்க ஆகியோருக்கு இடையில் சுவாரஷ்யமான சம்பாஷணைகள் இடம்பெற்றன.

அமைச்சருக்கு விளங்க வேண்டும் என்பதற்காக சிங்களத்தில் பேசுவதாக விஜயகலா எம்.பி தனதுரையை ஆரம்பித்து கேள்வி கேட்கையில், அதற்கு அமைச்சர் வெல்கம உடனுக்குடன் பதில் அளித்தமையினால் சபையில் இரு பக்கங்களிலும் சிரிப்பொலி எழுந்தன.

விஜயகலா எம்.பி தனது உரையில், எல்லாமே வர்த்தகம்தானே நீங்களும் வர்த்தகர். நானும் வர்த்தகர். பஷில் ராஜ பக்ஷவும் வியாபாரம் தானே நடத்துகின்றார் என்று குறிப்பிட்டபோது அமைச்சர் பஷில் சிரித்துக் கொண்டே கேட்டுக் கொண்டிருந்தார். அப்போது விஜயகலா மகேஸ்வரன் எம்.பிக்கு அருகிலிருந்த எம்.பிக்கள் பேசுங்கள் என்று உற்சாகமூட்டினர்.

தனது உரையை ஆரம்பித்த விஜயகலா எம்.பி,

இப்போது 11 மணி. போக்குவரத்து அமைச்சு மீதான விவாதம் 10 மணிக்கே ஆரம்பிக்கப்பட்டது. அமைச்ரோ சற்று முன் தான் சபைக்கு வந்தார். அவர் வரும்போது ரயில் எஞ்சின் பழுதடைந்து விட்டதா? உங்கள் வாகனம் பழுதடைந்து விட்டதா? இன்றேல் என்ன தான் நடந்தது என்று வினவினார்.

உறுப்பினர்களின் கேள்விகளுக்கு சுவாரஷ்யமாக பதிலளிக்கும் அமைச்சர் குமார் வெல்கம; ஆமாம் ஆமாம் எஞ்சின் பழுதடைந்துவிட்டது. குடும்ப எஞ்சினுக்கு பிரச்சினை அது தான் ஆஸ்பத்திரியில் விட்டு விட்டு அவசரமாக வந்தேன் என்றார்.

அப்படியா? பரவாயில்லை என்று கூறிய விஜயகலா எம்.பி யாழ்ப்பாணத்தில் இ.போ.ச பஸ்களில் ஏறுவதற்கே பிரயாணிகள் அஞ்சுகின்றனர். போய் சேர்ந்த விடுவோமா? இல்லையா? என்ற அச்சம் அவர்களிடத்தில் இருக்கின்றது. போதியளவு பஸ்கள் இல்லை. பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு முகம் கொடுக்கின்றனர். ஆனால் அம்பாந்தோட்டைக்கு கூடுதலாக பஸ்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன என்று கூறுகையில்,

இடைமறித்த அமைச்சர் வெல்கம, சரி சரி உண்மையை கூறுங்களேன். உங்களுக்கு நான் எத்தனை வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்கினேன். அந்த பஸ்களை வடக்கிற்கு ஓட விடலாமே?

நீங்கள் கொழும்பில் இருந்து கொண்டு தானே யாழ்ப்பாணத்தைப் பற்றி பேசுகின்றீர்கள். அங்கே போய் பாருங்கள் சரி உங்களுக்கும் எனக்குமான நட்புக்காக கேட்கின்றேன். இன்னும் எத்தனை அனுமதிப் பத்திரங்கள் வேண்டுமென்று அமைச்சர் வினவினார்.

யாழ்ப்பாணத்திற்கு போக வேண்டியதில்லை இங்கிருந்தே ஒரு தொலைபேசி அழைப்பில் சகலவற்றையும் அறியலாம். குடா நாட்டிற்கு 100 பஸ்கள் தேவையெனினும் 50 பஸ்களே ஓடுகின்றன. அதிலேயும் மக்கள் ஏறுவதற்கு அஞ்சுகின்றனர் என்று விஜயகலா எம்.பி கூறினார்.

இல்லை இல்லை இதை கேளுங்களேன் என்று இடைமறித்த அமைச்சர் குமார் வெல்கம உங்களிடம் பஸ்கள் இருக்கின்றன. நானும் பஸ்களை வைத்திருக்கின்றேன். மத்துகமவிற்கும் யாழ்ப்பாணத்திற்கும் சேவையில் ஈடுபடும் பஸ் நாள் ஒன்றிற்கு 75 ஆயிரம் ரூபாயை சம்பாதிக்கின்றது. உங்களுக்கு இலாபம் பற்றி தெரியும் தானே என்றார். ஐயோ! என்னிடம் பஸ்கள் இல்லை. கப்பல் இருக்கிறது என்று விஜயகலா எம்.பி தெரிவித்த போது,

நட்புக்காக கேட்கிறீர்கள் நான் உங்களுக்கு ஏ9 வீதியில் எத்தனை வீதி அனுமதிப்பத்திரங்களை வழங்கினேன். எல்லாமே வர்த்தகம் தானே என்றார் அமைச்சர் குமார் வெல்கம.

நான் மட்டுமா வர்த்தகம் செய்கிறேன். நீங்களும் வர்த்தகம் செய்கிறீர்கள். ஏன் பசில் ராஜபக்ஷவும் கூட வர்த்தகம் செய்கிறார். எனக்கு உதவியிருக்கிறார் என்று விஜயகலா எம்.பி கூறுகையில் அமைச்சர் பசில் ராஜ பக்ஷ எதுவுமே பேசாது சிரித்துக் கொண்டிருந்தார்.

சரி இன்னும் எத்தனை அனுமதிப்பத்திரம் உங்களுக்கு வேண்டும். கேளுங்கள்; கேளுங்கள் என்று அமைச்சர் கேட்கையில், எனக்கு வீதி அனுமதிப்பத்திரம் வேண்டாம். யாழ். மாவட்டத்திற்கு பஸ்கள் வழங்கப்படவேண்டும் என்று விஜய கலா எம்.பி கேட்கையில், நீங்கள் கேட்கும் பஸ்களை தருகிறேன் வீதி அனுமதியையும் தருகிறேன். நீங்கள் கேட்கும் இடங்களுக்கெல்லாம் இ.போ.ச பஸ்ஸிலேயே அழைத்து செல்கிறேன் என்று அமைச்சர் வெல்கம கூறினார்.

இதன் போது சபையில் சிரிப்பொலி எழுந்தது.

வீதி அனுமதிப்பத்திரம் இன்மையால் பஸ்கள் ஓட முடியாத நிலையில் இருக்கின்றன. குத்தகையையும் கட்ட முடியாது உள்ளது. யாழ்- கொழும்பு தனியார் பஸ் சேவையை மேற்கொள்ள வெள்ளவத்தையில் நிரந்தர பஸ் தரிப்பிடம் அமைக்கப்பட வேண்டும். இரத்மலானைக்கும் புறக்கோட்டைக்கும் செல்ல வேண்டுமாயின் 500 ரூபாய் ஆட்டோவிற்கு செலவாகின்றது என்று விஜயகலா சுட்டிக்காட்டிய வேளையில் அதை கவனத்தில் கொண்டு உரிய நடவடிக்கைகளை எடுப்பதாக தனியார் போக்குவரத்துதுறை அமைச்சர் சி.பி.ரத்நாயக்க கூறினார். (பா)

## யாழ்.பல்கலை...

கொண்டிருப்பதாகக் தெரிவிக்கும் இந்தத் துண்டுப் பிரசுரத்தில், அதனை குழப்பமுனையும் மாணவர்கள் மற்றும் விரிவுரையாளர்கள் தண்டிக்கப்படுவார்கள் என்றும் கூறப்பட்டுள்ளது

இதற்கு முன்னரும் இவ்வாறான எச்சரிக்கைத் துண்டுப்பிரசுரங்கள் ஒட்டப் பட்டிருந்ததை மாணவர்கள் நினைவூட்டும் அதேவேளை, இம்முறை வவுனியா வளாக மாணவர்கள் சிலரின் பெயரும் இதில் உள்ளடக்கப்பட்டுள்ளதாகத் தெரிவித்தனர். (பா-11)

நிரு – கோண்டாவில்

தரம் 3, 4, 5

கல்வியாண்டு 2012

கணிதம் - திரு. அ. மயூரன்
தமிழ் - செல்வி S. கஜேந்தினி
சுற்றாடல் - திரு. S. கஜீவன்
ஆங்கிலம், சமயம் - செல்வி T. நர்சிகா

வகுப்புக்கள் நடைபெறுகின்றது.

## யாழில் இடம்...

இணைப்புச் செயலாளர் அமல் றொட்ரிகோ குறித்து எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளித்த அமைச்சர் ஹெகலிய, அது தொடர்பிலும் தனக்குத் தெரியாது என்றார்.

எனினும் கடத்துபவர்கள், காணாமல் போகின்றவர்கள் தொடர்பில் தன்னை விட ஊடகங்களுக்கு நன்கு தெரியும் என அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார்.

பிளாஸ்ரிக் பெட்டி சட்டத்தில் மாற்றம் கொண்டுவரப்பட மாட்டாது. அது பொது சட்டமாக நடைமுறைப்படுத்தப்படும். அச் சட்டத்தை ஒரு மாதம் இடைநிறுத்தி வைத்துள்ளமை விவசாயிகள், வர்த்தகர்களை தெளிவுபடுத்தவே என ஹெகலிய ரம்புக்வெல்ல குறிப்பிட்டார்.

எனினும் புடோலங்காய் உள்ளிட்ட சில மரக்கறி வகைகளுக்கு பிளாஸ்ரிக் பெட்டிகளை பயன்படுத்த முடியாமை தொடர்பில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

நூறு வீதம் சரியாக செயற்படுத்த முடியாது எனவும் விவசாயிகளுக்கு தெளிவு படுத்தாமல் பிளாஸ்ரிக் திட்டத்தை அமுல்படுத்தியமை அரசாங்கத்தின் தவறு எனவும் அமைச்சர் தெரிவித்தார்.

பிளாஸ்ரிக் திட்டம் கட்டாயம் செயற்படுத்தப்பட வேண்டும் எனவும் அதன் மூலம் இலாபத்தை எதிர்பார்ப்பதை விட மரக்கறி, பழங்கள் வீணாவதை தடுப்பதே நோக்கம் எனவும் அமைச்சர் சுட்டிக் காட்டினார். (பா)

## மாணவனை...

பகுதியிலுள்ள தனது தந்தையின் வியாபார நிலையத்தில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தவேளை, அருகிலுள்ள உணவகத்திற்கு சென்ற குறித்த மாணவன் தனது வர்த்தக நிலையத்திற்கோ, வீட்டிற்கோ திரும்பவில்லை எனத் தெரிவித்து யாழ்.பொலிஸ் நிலையத்தில் பெற்றோரால் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (பா)

## லண்டனில்...

சர்வதேச பாதுகாப்பு அவசியமில்லை என தான் திருப்தி கொள்ளும் தனிநபர்களையே தான் நாடு கடத்துவதாக பிரித்தானிய எல்லை முகவரகம் தெரிவித்துள்ளது.

தஞ்சம் கோரும் சில தமிழர்களுக்கு மாத்திரமே பாதுகாப்பு தேவைப்படுவதாக மனித உரிமைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியம் தெரிவித்துள்ளது எனவும் அம்முகவரகம் கூறியுள்ளது.

தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழர்கள் சிலர் தமது அரசியல் புகலிடக் கோரிக்கையை வலுப்புடுத்துவதற்காக தமக்குத் தாமே காயம் ஏற்படுத்திக் கொள்வதாகவும் அம்முகவரகம் தெரிவித்துள்ளது.

இதேவேளை சித்திரவதைக் குற்றச்சாட்டுக்களை ஆதாரமற்ற குற்றச்சாட்டுக்கள் என இலங்கை அரசாங்கம் விமர்சித்துள்ளது.

இதேவேளை பிரித்தானியாவிலிருந்து 75 தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்புவதை நிறுத்தக் கோரி லண்டனில் போராட்டம் இடம்பெற்று வருகின்றது.

கொல்ம்புரோக் மற்றும் ஹார்மொண்ட்ஸ் வோர்த் குடிவரவு சிறைச்சாலைகளுக்கு வெளியே நேற்றுக் காலை 11 மணியளவில், தமிழர்களை நாடுகடத்துவதற்கு எதிரான அமைப்பைச் சேர்ந்த 5 பேர் வீதியைத் தடுத்து நின்று போராட்டத்தைத் தொடங்கினர்.

இதனையடுத்து தமிழ் சமூகத்தினர் உள்ளிட்ட மேலும் பலர் அவர்களுக்கு ஆதரவாக போராட்டத்தில் இணைந்துள்ளனர்.

ஹார் தடுப்பு நிலையத்திலிருந்து 75 தமிழர்கள் இலங்கைக்கு நாடுகடத்துவதை தடுத்து நிறுத்தும் முயற்சியில் இவர்கள் ஈடுபட்டுள்ளனர். (பா)

## தேசிய...

இதுதொடர்பில் அமைச்சரவைப் பேச்சாளரும் ஊடகத்துறை அமைச்சருமான ஹெகலிய ரம்புக்வெல தெரிவிக்கையில்,

ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் 2008 ஆம் ஆண்டு கூட்டத் தொடரின்போது செய்து கொள்ளப்பட்ட சுயேட்சை சத்தியப் பிரமாணத்திற்கு அமைய மனித உரிமை பாதுகாப்பு மற்றும் முன்னேற்றம் தொடர்பான தேசிய மனித உரிமை செயற்பாட்டுத் திட்டத்தை நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இலங்கையிலும் ஐ.நா. மனித உரிமை பேரவையிலும் மனித உரிமை விடயங்கள் குறித்து வெற்றிகரமாக செயற்பாடுகளை கொண்டு நடத்தும் பொருட்டு இத் திட்டம் செயற்படுத்தப்படவுள்ளது.

இது குறித்த தீர்மானம் நேற்று முன்தினம் அமைச்சரவைகூடியபோது எடுக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள் குறித்து ஜனாதிபதியின் விசேட தூதுவர் அமைச்சர் மகிந்த சமரசிங்க அமைச்சரவைக்கு இது தொடர்பில் சமர்ப்பித்த அமைச்சரவைப் பத்திரத்திற்கு அனுமதி அளிக்கப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் மனித உரிமைகள் பாதுகாப்பு விடயம் குறித்து பல்வேறு தரப்பினரை உள்ளடக்கி உள்நாட்டு அமைச்சுக் குழுவொன்றும் அமைக்கப்படவுள்ளது.

ஜெனிவா நகரில் எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.மனித உரிமைப் பேரவையின் போது, இலங்கைக்கு எதிரான குற்றச்சாட்டுக்கள் தொடர்பில் தெளிவான விளக்கங்கள் முன் வைக்கப்படும்.

போர்க் காலங்களில் இலங்கையில் மனித உரிமை மீறல்கள் இடம்பெற்றுள்ளதாகக் குறிப்பிட்டு மேற்படி மனித உரிமைப் பேரவை கூட்டத் தொடரில் இலங்கை தொடர்பாக விவாதங்கள் நடைபெறவுள்ளது.

இந்தக் குற்றச்சாட்டுக்களுக்கு எதிரான தெளிவான விளக்கங்களை மேற்படி கூட்டத் தொடரில் பங்குபற்றவுள்ள இலங்கைப் பிரதிநிதிகள் குழு முன்வைக்கும் என்று அமைச்சர் மேலும் குறிப்பிட்டார். (பா)

## பதவி...

உறுப்பினர்கள் சிலரிடம் தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் மறுசீரமைப்புக் குழுக் கூட்டம் நாளை மறுதினம் நடை பெறும் போது தான் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவதாகவும், அதனையடுத்து கட்சிக்குள் ஏற்பட்டுள்ள அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வு கிடைக்கும் என்றும் ரணில் விக்கிரம குறிப்பிட்டுள்ளார்.

தானே மீண்டும் தலைமைப் பதவிக்கு தெரிவு செய்யப்படுவேன் என்ற உண்மை விளங்கியதாலேயே அந்த பயத்தில் சிலர் பதவியைப் பகிர்ந்து கொள்ள ஆசைப்படுகின்றனர் என்று குறிப்பிட்ட ரணில், பதவி யைப் பகிர்ந்து கொள்ளவோ அல்லது அது தொடர்பான கலந்துரையாடலுக்கோ தான் ஒரு போதும் தயாரில்லை என்றும் குறிப் பிட்டுள்ளார். (பா-11)

## வடக்கு...

இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தை தொடர்பாக இச்சந்திப்பின்போது முஸ்லிம் காங்கிரஸ் பிரதிநிதிகளுக்கு விளக்கமளிக்கப்பட்டதாக அவர் கூறினார்.

இந்தப் பேச்சுவார்த்தையின்போது, காணி, பொலிஸ் மற்றும் வடக்கு-கிழக்கு இணைப்பு தொடர்பில் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் தெரிவித்ததாக பிரதி மேயர் குறிப்பிட்டார்.

இரு சமூகங்களையும் பாதிக்காதவாறு இரு கட்சியினரும் எந்தவொரு அறிக்கையினையும் ஊடகங்களுக்கு விடுவதில்லை எனவும் இதன்போது தீர்மானிக்கப்பட்டதாக நிசாம் காரியப்பர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை முஸ்லிம் காங்கிரஸிற்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையில் தொடர்ந்து பேச்சுக்களை மேற்கொள்வதற்காக இரு கட்சிகளிலிருந்தும் சட்டத்தரணிகளான எம்.ஏ.சுமந்திரன் மற்றும் நிசாம் காரியப்பர் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பாக ரவூப் ஹக்கீம், ஹசன் அலி, பைசால் காசீம், எம்.பி.பாரூக் மற்றும் நிசாம் காரியப்பர் ஆகியோரும் கூட்டமைப்பு சார்பாக இரா.சம்பந்தன், சுரேஷ் பிரேமச்சந்திரன், செல்வம் அடைக்கலநாதன் மற்றும் எம்.ஏ.சுமந்திரன் ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்து கொண்டனர். (பா)

City & Guilds

APSS International

College of Engineering Studies

Approved Centre 844022

யாழ்நகரில் இலவச பொறியியல் கருத்தரங்கு

*Carriers in Engineering after your A/L*

Free Seminar on:

- Why choose City & Guilds programme
- Future Trends in Civil Engineering & Telecom.
- Job Opportunities & Academic Pathways
- How to choose the degree pathway

On 17th Saturday, 18th Sunday Dec.2011 10a.m at Jaffna Technical Institute 46, Clock Tower Road, Jaffna.

Prof. K. Chandirabose

Chairman/Managing Director

விபரங்களுக்கு:

077-2306642, 077 3867695, 071 8561654, 021-2241731

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 16.12.2011 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.